www.tamilarangam.net

# பூவரசு

POOVARASU.

புரட்டாதி – ஐப்பசி 1996.



இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## *வாழ்த்துகிறோம்.!*

செல்வி. கஜானினி ஞானப்பிரகாசம் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் அவுஸ்திரேலியாவில் கடந்த **14. 07. 1996** அன்று நடைபெற்றது.
இணுவில் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி கஜானினி தனது 3வயதில் நாட்டியமாமணி திருவாளர் வீரமணி அவர்களிடம் நடனக் கலையைத்தொடங்கி, புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வசித்தபொழுது செல்வி ஸ்ரீரஞ்சனி குணரத்தினம், திருமதி விமலா மணியரசன் ஆகியோரிடம் தொடர்ந்து கற்று தற்போது கடந்த ஓராண்டு காலமாக அவுஸ்திரேலியாவில் பத்மஸ்ரீ அடையார் கே. லக்ஷ்மணனின் மாணவியும் நிருத்தாலயா இயக்குனருமான திருமதி நிருத்தசொரூபி தர்மகுலேந்திரா அவர்களிடம் நாட்டியம்கற்கிறார்.

(மிக இளம் வயதில் பூ வரசு இனிய தமிழ் ஏட்டின் விழா நிகழ்ச்சிகளிலும் இவர் பங்குகொண்டிருக்கிறார்.)

செல்வி கஜானினி கல்வியிலும் கலையிலும் மேலும் சிறந்து வளர்ந்திட பூ வரசு இதயபூ ர்வமாக வாழ்த்துகிறது.
வாழ்க! வளர்க!

---

**அட்டையில்**
**செல்வி கஜானினி ஞானப் பிரகாசத்தின் அரங்கேற்ற அபிநயத் தோற்றங்களில் ஒன்று.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூவரசு


**Poovarasu**

**Tamilische Kultur Magazin**

**இனிய தமிழ் ஏடு**
**இருதிங்கள் ஒன்று**

**இதழ்:- 41.**
**புரட்டாதி-ஐப்பசி 1996**
Sept.-Oct.`96




Poovarasu,
Sinniah Maheswaran,
Otto Brenner Allee -56,
28325 Bremen,
Germany.


**உலகமே நம் இல்லம்**
**உள்ளமெல்லாம் நம் சொந்தம்.**

## இந்த இதழில்...


சீ. அருண்.
அருள்திரு மொன்போர்ட்
வீ. ஆர். வரதராஜா
அ. வேணுகோபாலன்
கே. ஸ்ரீதாஸ்
ராஜன்ஸ் ஆர்ட்டிஸ்ட்.
எழிலன்
மா. தியாகேஸ்வரன்
செ. யோகநாதன்
இராஜன் முருகவேல்
க. ஜோர்ஜ்
ப. இராஜகாந்தன்
கொற்றையூ ர் வாசன்
வேலணையூ ர் பொன்னண்ணா

இனிய தமிழ் ஏடு.

www.tamilarangam.net

## இளைஞனின் பாராட்டு!

இன்று உங்கள் பூவரசு (சிறுகதைச் சிறப்பிதழ்) கிடைத்தது.
படித்தேன். மிகவும் தரமான ஆக்கங்கள் தங்கள் இதழில் வெளிவருகிறது. பாராட்டுக்கள்.

திரு வி.கந்தவனம் அவர்களின் கட்டுரை-எழுத்தாளன் கடமை-எழுத்தாளர்கள் அனைவருக்கும் பயன்தரத்தக்க கட்டுரை.

மேலும் இணுவையூர் பவன் கணபதிப்பிள்ளையின் 'காதல் சாத்திரங்கள்'. ஏ.ஜே.ஞானேந்திரனின் 'மதயானைகள்' என்ற இரண்டு சிறுகதைகளையும் மிகவும் இரசித்துப்படித்தேன்.

தரமான ஆக்கங்களைத் தாங்கிவரும் பூவரசு மேலும் வளர்ச்சி பெற என் வாழ்த்துக்கள்.

அன்புடன்
ஓவியர் சேகர்.

### சிறுகதைச் சிறப்பிதழ் சிறப்பு.

....இரு திங்கள் இதழ் நான்காண்டு நிறைவில் மாத இதழாகி ஐந்தாவதாண்டு நிறைவில் மறுபடி இருமாத இதழானபோது மனம்நொந்தேன். பூவரசு தன் பணியில் தளர்ந்துவிடுமோ என்று. ஆனால் இதழுக்கு இதழ் மேலோங்கிவரும் அதன் தரமும் பெருகிவரும் எழுத்தாளர்களின் எண்ணிக்கையும் மகிழ்ச்சியைத்தருகிறது. ..இந்த ஆண்டு சிறுகதைச் சிறப்பிதழ் சிறப்பு. படைப்பாளர்களுக்குப் பாராட்டுக்கள்... புலம்பெயர் மண்ணில் பூவரசின் பங்களிப்பு பூரிப்பைத் தருகிறது. தொடர்க!

அன்புடன்
எஸ்.தேவராஜா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வயிற்றை நோக்கிய வாழ்வு.

விடியல்!
பனி...பரபரப்பு...சலசலப்பு
நேரமில்லை...
பிழைப்பின் எல்லையை நோக்கி
நகர்ந்துக்கொண்டிருக்கும் வாழ்வு!

வேலை!
பணம்...பதவி...பெருமை
மனிதமில்லை...
மனிதனை நினைத்துப் பார்க்க
இதுவா நேரம்!
கணினியோடு கலந்துப்போன
வாழ்க்கைச்சிதறல்கள்!

வீடு!
மனைவி~மகன்~மகள்
வட்டம்போட்டு
வாழ்க்கையை வட்டத்திற்குள்ளாக்கினோம்
தன் வீடு...
தன் உறவு...
தன்னலம்...
வாழ்க்கை சுருங்கிவிட்டது!

இரவு!
ஓய்வு...விருந்து...ஆர்ப்பாட்டம்
ஓட்டுக்குள்ளேயே ஒளிந்துக்கொண்டு
இருண்ட பூமிக்குள்
இறுகிய மனத்தோடு
சலசலப்பும் பரபரப்பும்
அமைதி கொள்வதற்காக
விருந்து... நடனம்...கொண்டாட்டம்
இரவின் மடியில்
பிணமாய்!



மீண்டும்... மீண்டும்
விடியல்...
வேலை...
வீடு...
இரவு...

காலம் கரைந்துக் கொண்டு...
எனக்கென்ன கவலை
நான் வாழ்கிறேன்
இந்தப்பகலும்...இரவும்
எனக்காக வந்துப் போகின்றன!

நாளுக்கு நாள்
என்னை நானே
தகிவரித்துக் கொள்கிறேன்
நாளை
நான் மீண்டும் பிறப்பேன்
எனக்காக
என் வயிற்றுக்காக!

-சீ.அருண்.

நன்றி — 'அருவி'
(கவிதை இதழ் மலேசியா)

www.tamilarangam.net

# விண்ணகம் சென்றவர் மண்ணகர்க்கு மாதிரி.

'வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது.
பெண் ஒருவர் காணப்பட்டார்.'

(திருவெ.12 – 1)

இயேசுவின் அன்னை மரியாளுக்கு எடுக்கும் விழாக்களில் முக்கியமானவை இரண்டு.
அவை ஆகஸ்ட் 15ம் நாள் அவரது விண்ணேற்புத்திருநாள்.
செப்டம்பர் 8ம்நாள் அவரது அமல உற்பவத் திருநாள். இவ் விழாக்கள் அவர்மட்டில் மக்களுக்கு மிகுந்த அன்பையும் பற்றையும் பாசத்தையும் வளர்த்துள்ளன.
திருச்சபை மரியாளின் விண்ணேற்பு, அமல உற்பவம் இரண்டையும் விசுவாச உண்மைகளாகப் பிரகடனப்படுத்தி இவற்றைத் திருவிழாவாக பெருவிழாவாக புனித நாட்களாக அனுசரிக்கிறது.
இவ்விரண்டுவிழாக்களும் மரியன்னையின் வாழ்வின் தொடக்கத்திலும் இறுதியிலும் நடந்த இருபெரும் உண்மைகளை எடுத்துக்கூறி, எமது வாழ்விலும் ஏற்படும் இரு மாபெரும் உண்மைகளைப் படம்போட்டுக் காட்டுகின்றன.
அதாவது அவை இறை அருளானது எம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் தருகின்ற தொடக்க அழைப்பையும் அதன்வழி அது நிகழ்த்தவிருக்கும் முழு நிறைவையும் கட்டியம்கூறி நிற்கின்றன.
இவ்விருவிழாக்களையும் தகுந்த உள்ளத்துடன் கொண்டாடி,அவை தரும் மேலான அர்த்தத்தை எமதுவாழ்வில் கடைப்பிடித்து வாழ்தல் முற்றும் பொருத்தமாகும்.

மரியாள் விசுவாசம்,நம்பிக்கை அன்புக்கு ஓர் இலக்கணமாய் என்றும் வாழ்ந்துவந்தார். ஆண்டவரால் சிறப்பான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவராயிருந்தபோதும் தனது இவ்வுலக வாழ்வில் எம் ஒவ்வொருவரைப் போலவும் வாழ்வின் பல மேடு பள்ளங்களைக் கடந்து வாழ்ந்தார். தனது வாழ்வின் எந்நிலையிலும் தான் பெற்ற அழைப்பை, தனது இலட்சிய வாழ்வை முன்வைத்து அதில் நடைபோட்டார். படைக்கப்பட்ட எந்தவொரு படைப்பும் கொண்டிராதவாறு, அவரது இறைப்பற்று, விசுவாசம், நம்பிக்கை, அன்பு தன்னைப் படைத்தவர்மேல் இருந்தது. 'இறைவா இந்த உள்ளம் உமக்காகப் படைக்கப்பட்டது. அது உம்மிலன்றி வேறெங்கும் சங்கமமாகாது!' என்ற புனித அகுஸ்தினாருடைய வாக்கிற்கமைய மரியாளும் தனது வாழ்வின் இறுதி, தன்னைப் படைத்தவரிலேயே சங்கமமாகவேண்டுமென்ற குறிக்கோளுடன் வாழ்ந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எமது வாழ்வின் இறுதிநாளைப்பற்றி வேதாகமத்தில் படிக்கும்போது, (மத்.25,31 — 46)நல்லவர் நிலைவாழ்விற்கும்,தீயவர்கள் தண்டனைக்கும் தகுதியுடையவர்கள் எனப் படிக்கின்றோம்.
இந்நிலையில் தூய ஆவியின் ஆலயமாய், வாக்களிக்கப்பட்ட மீட்பரின் பெட்டகமாய் இருந்த மரியாள், நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை. இத்தேர்வு உலகமுடிவில்நடைபெறும் என்று வேதாகமம் கூறினாலும், மரியாளைப் பொறுத்தவரையில் சிறிது மாறுபட்ட நிலையில், அவரது வாழ்வின் இறுதியில் நிகழ்ந்ததென்பது பாரம்பரியம்தரும்உண்மை. இவ்வுலகில் இயேசுவோடு ஆன்மா,உடல் என்ற இருவகையிலும் இரண்டறக் கலந்திருந்த அவரது அன்னை மரியாள், அவரைப்போல் ஆன்மா, உடலோடு விண்ணகம் எடுக்கப்பட்டது எவராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியது. இவரே எம் ஒவ்வொருவரினதும் முழுத் திருச்சபையினதும் மாதிரியாக அடையாளமாக விளங்குகின்றார்.
வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் ஏனோக்கு, எலியா என்ற இருவர் ஆண்டவரால் உடலோடு மேலே எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதைஅறிவோம். ஏனோக்கு கடவுளோடு நடந்துகொண்டிருந்தான். பின்பு அவனைக் காணவில்லை. ஏனெனில் கடவுள் அவனை எடுத்துக்கொண்டார்.(ஆதி.5,24) இதோ நெருப்புத் தேரும், நெருப்புக் குதிரைகளும் திடீரென நடுவே வந்து அவர்களைப் பிரித்தன.எலியா சுழல்காற்றில் விண்ணகத்திற்குச் சென்றார்.(2 அர.2,1 — 12) இந்நிலை இவ்விருவருக்கும் இறைவனால் கொடுக்கப்பட்ட கொடை. இப்படியாக இவர்கள் இறைவனால் எடுத்துக்கொள்ளப்பட முடியுமானால் கன்னித்தாய், அமல உற்பவி, வாக்குத்தத்தப் பெட்டகம்,அருள்நிறைந்தவள்,பெண்களுள் பேறுடையாள்,ஆண்டவரின் தாய் என்றெல்லாம் பலவாறு அழைக்கப்படும்மரியாள் விண்ணுக்கு ஆத்மா,உடலோடு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்பதில் எவ்வகைச் சந்தேகமுமில்லை.

தொடர்ச்சி 42ம்பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கிய மூத்துக்குளியல்

*வீ. ஆர். வரதராஜா.*

செல்வத்தில் வளர்ச்சிகண்ட நாடுகளில் கணவன் மனைவி உறவு பெரும்பாலும் 75 சதவிகிதம் மனமுறிவில் சிதைந்து விடுகின்றது. சாதாரண விடயங்களையெல்லாம் பெரிதுபடுத்தி விவாகரத்துவரை சென்று விடுகின்றார்கள்.

அன்புடன் பழகும்போது சந்தேகத்தோடு பழகி உடல் உறவுக்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுத்து வாழ்க்கையைத் துவங்குவதாலேயே இந்த மனமுறிவுகள் ஏற்படுகின்றன.

உடலுடன் அல்ல உயிருடன் கலக்கும் தாம்பத்தியம் தமிழர் குலத்தில் உடன் பிறந்தவை. தாலியில் கணவன் உயிர் இருப்பதாக நம்பும் தமிழ்ப்பெண் படுபிற்போக்குவாதி என வாதிடுபவர்களும் இருக்கின்றார்கள்.

ஆனால் தமிழ்ப்பெண் பிற்போக்குவாதியல்ல. அதன்மூலம் தனது உயிர் தனது மனைவியிடம் இருக்கின்றதென்பதை கணவருக்கு தமிழ்ப்பெண் உணர்த்துகிறாள் என்றும், அதனாலேயே ஒருவனுக்கு ஒருத்தி என்ற உலகத் தத்துவத்தை நிரூபித்து பல்லாண்டுகாலம் குடும்பமாக வாழ்வதாகவும் தமிழ்க்காவியங்கள் தெரிவிக்கின்றன.

இராமாயணத்திலும் தாலியைப்பற்றி சிற்சில இடங்களில் குறிப்பிடப் படுகின்றது. தன் கணவன் பரதனைப்போலவே மாண்டவியும் குறித்த நாளில் குறித்த நேரத்திற்குள் இராமன் வந்து சேரவில்லையானால் உயிர்த்தியாகம் செய்ய முன்வந்துவிட்டாள்.

இராமனை எதிர்பார்க்கும் நேரம். ஐந்துநாழிகை இரண்டு நாழிகையாகக் குறைந்து ஒரு நாழிகையாகவும் வந்தாகிவிட்டது.
திடீரெனக் கலகலப்பாகச் சேடியர் ஓடிவரும் குரல் கேட்கிறது.
"அம்மா! இளவரசர் அக்கினிப் பிரவேசம் செய்யும் தருணம் ஒரு குரங்கு வந்து அக்கினியைத் தன் கையால் மூடி அணைத்தது. சக்கரவர்த்தித் திருமகனின் வருகையை அது அறிவித்தது. அடையாளமாக ஒரு கணையாழியையும் கொடுத்திருக்கிறது. அவர்கள் அனைவரும் இப்போது இங்கே வந்துவிடுவார்கள். அரண்மனையை, அயோத்தி மாநகரையும் அலங்கரித்து அவர்களை வரவேற்க கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது."
மாண்டவியின் செவிகளில் இவையனைத்தும் இன்பத் தேனாய்ப் பாய்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரவு நேரம்.
மாண்டவியின் அந்தப்புரம். பரதன் அவள் அருகில் வந்ததும், "என் அன்புக்கினியாளே!இந்தப் பதினான்குஆண்டுகள் ஆட்சியைக் கவனித்ததாலும் இராமதியானத்தில் இருந்ததினாலும் இந்த உலகை நான் மறந்திருந்தேன். ஆனால் நீயோ என்னைப்பற்றிய சிந்தனையிலேயே காலத்தைக் கழித்திருக்கிறாய். கண் எதிரிலேயே கணவனின் துறவறத்தை எந்த மனையாள் சகித்திருப்பாள்? உன் சகிப்புத்தன்மைக்கு உனக்கு நான் ஓர் இனிய பரிசு கொடுக்க விரும்புகின்றேன். நீ விரும்புவதைக்கேள்!" என்றான்.
"நானே உங்களிடம் கேட்க எண்ணினேன். அன்று இராமன் வருகைக்கு அடையாளமாக கணையாழி ஒன்று உங்களிடம்கொடுக்கப்பட்டதே.அதுதான் நான் விரும்பும் பரிசு. அதை நான் என் நித்திய பூசைக்கு உகந்த பொருளாகக் கருதுகிறேன்.ஏனெனில் கடைசிநேரத்தில் என் மாங்கல்யத்தைக் காத்த புனிதமான பொருளல்லவா அது!" என்றாள் பொறுமையில் பூமாதேவியான மாண்டவி.

## லட்சுமணன் சிரித்தது ஏன்?

பதினான்கு ஆண்டுகள் கழிந்தன.
மீண்டும் அயோத்தியில் பட்டாபிஷேக வைபவத்திற்கு எல்லா வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.
அதற்கான நாளும் குறித்தாகிவிட்டது.மக்கள் குதூகலிக்க வசிட்டரால் குறிக்கப்பட்ட அந்த நாளும் வந்துவிட்டது. பட்டாபிஷேக அரங்கில் அனைவரும் அவரவர் இருக்கையில் அமர்ந்திருந்தனர்.
மங்கள நாதம் முழங்க — வேதங்கள் ஒலிக்க — முதிர்ந்த பெண்கள் தெய்வ கீதங்களைப் பாட வசிட்டர் பெருமகன் இராமன் சீதை இருவருக்கும் நெற்றியில் திலகம் அணிவிக்க இதர பெரியோர்கள் அட்சதையிட்டு ஆசீர்வதித்துக் கொண்டிருந்த நேரம்.
லட்சுமணன் தான் எத்தனையோ நாட்களாகக் கனவு கண்டு கொண்டிருந்த காட்சியைக் காண ஆவலோடு இருந்தான்.
நித்திராதேவி இந்த முகூர்த்தத்துக்காகத்தான் காத்திருந்தாள்.
திடீரென லட்சுமணனின் கண்கள் சோர்ந்து விழ அவனால் கட்டுப்படுத்து முடியாதபடி பெரியதொரு கொட்டாவியும் வந்தது.
அவன் காதுகளுக்கு மட்டும் கேட்கும்படியாக ஒரு குரல் வந்தது.
"லட்சுமணா! இத்தனை ஆண்டுகள் உன் விருப்பப்படியே உன்னை நெருங்காது இருந்தேன்.இப்போது என்னிடம் வாக்களித்தபடி என்னை ஆட்கொள்ள வேண்டும்!"
எல்லோரும் ஆவலோடு காத்திருக்கும் இந்த பட்டாபிஷேக விழாவில் தூங்குவதா?
இந்தக் காட்சியை காணவிடாமல் செய்யும் நித்திராதேவியின் எண்ணத்தை நினைத்து லட்சுமணனால் சிரிப்பைக் கட்டுப்படுத்த முடியவில்லை.
அவன் அனைவரும் கேட்கும்படியாகச் சிரித்துவிட்டான்.
சபையில் அனைவரும் திடுக்கிடும்படியாகிவிட்டது.
லட்சுமணன் ஏன் சிரித்தான்.?
சபையில் கூடிய மக்கள் மனத்தில் பலத்த சந்தேகங்கள் தோன்றலாயின.

www.tamilarangam.net

இராமன் நினைத்தார் —
"பல வருடங்களாக இராவணனிடம் சிறைப்பட்டிருந்த சீதையை நான் மீட்டுவந்து இன்று வெட்கமில்லாமல் அவளை அருகில் அமர்த்தி பட்டாபிஷேகம் செய்வதை எண்ணித்தான் லட்சுமணன் சிரிக்கிறான்!" என்று.
சீதை எண்ணினாள் —
"நான் இராவணனிடம் சிறைப்பட்டிருந்தும் இன்று இராமன் அருகில் மகாராணியாக அமர்ந்திருப்பதை எண்ணித்தான் லட்சுமணன் சிரிக்கிறான்!" என்று.
கைகேயி எண்ணினாள். —
"நான் இராமனை பதினான்கு ஆண்டுகள் வனவாசம் அனுப்பிவிட்டு இன்று வைபவத்தில் மகிழ்ச்சியுடன் இருப்பதாக நடிக்கிறேன் என்று எண்ணியே லட்சுமணன் சிரிக்கிறான்!" என்று.
குருவான வசிட்டர் நினைத்தார் —
"நான் முன்பு நிச்சயித்த நாளில் பட்டாபிஷேகம் நடக்காமல் இராமன் வனவாசம் சென்றதும் நான் வெட்கமில்லாமல் மீண்டும் நாள் குறித்து பட்டாபிஷேகம் நடத்துகிறேன்!" என்று.
அங்கு கூடியிருந்த மக்களோ பலரும் பலவிதமாக எண்ணினர்.
அனைவரது எண்ண ஓட்டங்களையும் கண்ணுற்ற இராமன் சினம் கொண்டார்.
தனது இருப்பிடத்திலிருந்து எழுந்து லட்சுமணனைப் பார்த்து
"லட்சுமணா! இந்தச் சிரிப்புக்கு என்ன காரணம்?" என்றார்.
நித்திரா தேவியை எண்ணி ஆழ்ந்த யோசனையிலிருந்த லட்சுமணன் தன் சிரிப்பினால் ஏற்பட்ட விளைவுகளை அறியவில்லை.
இராமனின் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டான்.
இராமனிடம் பணிவோடு நித்திராதேவியுடன் தனக்கேற்பட்ட வாதத்தை விளக்கினான்.
அதைக்கேட்டு இராமன் உட்பட அனைவரும் சிரித்தனர்.

**என் தந்தையைக் காண்கிறேன்.**
அயோத்தியா மன்னர் அவையில் இராமன் மன்னனாக வீற்றிருக்கிறார்.
அங்கே மகா முனிவர்கள், வசிட்டர், சுமந்திரர் முதலிய மகான்கள் அமர்ந்திருக்கின்றனர்.
அந்தச் சமயம் ஓர் அற்புதம் நிகழ்ந்தது.
அயோத்தியில் நித்திய தரித்திரராக இருந்த ஒரு கிழவர், அழுக்கு நிறைந்த ஆடையுடன் அங்கு ஓடோடி வந்துகொண்டே —
"அடே இராமா! என் கண்ணா! இத்தனை நாள் எங்கேயடா போயிருந்தாய்? உன்னை எங்கேயெல்லாம் தேடினேன் தெரியுமா?" என்று கூச்சலிட்டவாறு உள்ளே வந்தார்.
வழியில் காவலர் தடுத்தும் அவர் நிற்கவில்லை. இதைக்கண்ட இராமர் அவர் அருகில் சென்று அவரைச் சேர்த்து அணைத்துக் கொண்டார்.
மீண்டும் அந்தப் பெரியவர் "அடே இராமா! நீ எப்போதடா வந்தாய்? என்கண்ணா! உன்னைப் பார்க்காமல் இருக்க முடியவில்லையடா!" என்று கூறி ஆனந்தக் கண்ணீர் ததும்ப நின்றார்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராமரும்" அப்பா! இதுவரை உங்களைக் காணாமல் நானும் தவித்தேன்!" என்று கூறிக்கொண்டு கண்ணீர் உகுத்தார்.
இந்தக் காட்சியைக்கண்ட அவையோர் ஆச்சரியப் பட்டனர்.
"இவனோ பைத்தியக்காரைப்போலிருக்கிறான். இராமரும் அவரை அணைத்துக்கொண்டு பைத்தியம்போல் கதறுகிறானே!" எனத்திகைத்து நின்றனர். அந்தப் பெரியவரும் அவையோரிடம் —
"சபையோர்களே! நான் ஒரு பரமஏழை. இராமர் குழந்தையாக இருந்தபோது அரண்மனை வாயிலில் நிற்கும் இராமனைக்கண்டு "அடே இராமா! என் கண்ணா!" என்று கொஞ்சிவிட்டுச்செல்வது வழக்கம். இந்தப் பதினான்கு ஆண்டுகளாக என் இராமனைக் காணாது தவித்துவிட்டேன்.ஆனால் இன்றுதான் நான் பரமானந்தம் அடைந்தேன்!" என்று கூறினார்.
இந்நிகழ்ச்சி அவையில் நடைபெறுவதற்கு முன்புதான் சீதைக்கு ஓர் எண்ணம் உதித்தது.
அதாவது, தனது கணவர் இராமர் சக்கரவர்த்தித் திருமகனாய் வீற்றிருக்கும் இந்தச் சமயத்தில் குகனும், சபரி போன்றவர்களும் வந்தால் எப்படி நடந்து கொள்வார்? நேசிப்பாரா? பாராமுகமாய் இருந்துவிடுவாரா? என்ற எண்ணமே அது.
ஆனால் அதற்கு விடைதருவதைப்போலிருந்தது இந்நிகழ்ச்சி.
சீதாதேவியின் உள்ளத்தில் மகிழ்ச்சியை அள்ளி அள்ளிச் சொரிந்தது.
அந்தச்சமயம் கிழவர் தன் கந்தல்துணியையெடுத்து இராமரின் கண்களைத் துடைக்க, இராமரும் தன் பீதாம்பரத்தை எடுத்து அந்த ஏழைப்பெரியவரின் கண்களைத் துடைத்தார்.
உடனே இராமர், அவையோரை நோக்கி —
"நான் பதினான்கு ஆண்டுகளுக்குமுன்பு இறந்த என் தந்தையாரை மீண்டும் காண்கிறேன்" என்றார்.
இதைக்கேட்ட சபையோர் —
'இது என்ன இராமரும் பைத்தியம்போல் பிதற்றுகிறாரே!' என்று எண்ணி இமை கொட்டாமல் இருவரையும் பார்த்துக்கொண்டிருந்தனர்.
இராமர் மேலும் கூறினார் —
"சான்றோர்களே! எல்லோரும் என்னை பல்வேறு பெயர்களில் அழைக்கின்றனர். ஆனால் என்தந்தை ஒருவர் மட்டுமே என்னை அடே இராமா! என் கண்ணே! என்று அருமையாக அழைப்பார். அத்தகைய பாசத்தின் ஒலியை — அன்பின் சுரங்களை இன்று இந்தப் பெரியவர் ஞாபகப் படுத்திவிட்டார்" என்று விம்மி விம்மி அழுதார் இராமன்.

(முத்துக்கள் தொடரும்)

www.tamilarangam.net

மூன்றாவது பரிசுக்கவிதை.

# புலம் பெயர்ந்து வந்ததனால்......

அ.வேணுகோபாலன்.

நேற்றைய நிலைமைகள் நிலை தொடர்ந்து வந்ததனால்
நிழலான நிஜங்களுக்குள் நிலை குலைந்து போனோம்.
போற்றிய எத் தமிழ்த்தாயின் புகழ் நிறைந்த கலைகளையும்
ஏற்றியே வளர்த்திடுவோம் இருள் தொடரா வண்ணம்.

ஈழத்தாய் எரிகின்றாள் இதயமெல்லாம் குருதி வெள்ளம்
பாழும் போர்ப் புயலால் அவர்கள் படுந்துயரம் யாரறிவார்.

வாழப்பிறந்து ஆளப்பிறந்திட்ட மனிதர்கள் நாங்களன்றோ
மான வழிசமைத்த வஞ்சக தலைவர்களால்
நாளும் பொழுதும் நடைப்பிணமாய் அலைகின்றோம்.

வானம் இடிக்கும் வல்லூறுகள் வட்டமிடும்
மண்பிளந்து சிவப்பாறு பொங்கிச் சீறும்
ஊனம் தமிழ்த்தாயின் உடலோடு சேரும்
உறவுகள் மீண்டும் எமை நினைத்து ஏங்கும்.

புலம் பெயர்ந்து வந்ததனால் நிலம் மறந்து வாழுவதோ?

தமிழன் என்ற முகம் மறைத்து தரணியிலே இங்கு சிலர்
நாகரீகம் என்னும் நவீனப் போர்வைக்குள்ளே
முகமூடி மனிதர்களாய் முடிந்தவரை உறவு இன்றி
பண்பாடு கலாச்சாரம் பரம்பரையின் தர்ம நெறி
புண்ணிய மண்ணின் பெருமைகட்கு முழுக்கிட்டு
கண்ணியம் மறந்தவராய்க் கோலத்தை மாற்றுகின்றார்.

www.tamilarangam.net

உண்ணவும் உறங்கவும் உடுக்கவும் என்றே
எண்ணம் கொண்ட தமிழர்கள் இனியும் வேண்டாம்
பட்டினிச் சாவுகள் எமை வருத்திய
பழைமையை நாங்கள் மறக்கவில்லை
தொட்டினில் துயின்றிடும் குழந்தையும் இனிமேல்
சுதந்திர வாழ்வினைக் காணவேண்டும்.
சீதனச் சிறைகளில் பெண்மைகள் வாடிய
சீரற்ற வழிகளை தகர்த்தெறிவோம்.
சோதனைக் கணைகளால் வாடிய எம்மவர்
துயரினைத் துடைத்திட எழுந்து வந்தோம்.

பொன்னையும் பொருளையும் தேடியே உலகில்
போக்கின்றி அலைந்திட்டோம் அன்றொருநாள்
உன்னையும் என்னையும் வளர்த்திடும் புதிய
உயர்வுகொள் வழிகளைப் படைத்திடுவோம்
அன்னிய நாடெங்கும் ஏகிடுவோம் பற்பல
அறிவு கொள் பொருட்களை ஆய்ந்திடுவோம்

திரைகடல் கடந்திங்கு வந்து தமிழை
நொடியினில் நூற்றிடும் கலை பயில்வோம்.
விஞ்ஞானம் மருத்துவம் மிகைபடர்ந்த
கணனியுடன் பற்பல கலைகள் கற்று
திருத்திய யாப்புக்கள் பல அமைந்த
சிந்தனை உலகத்தைச் செதுக்கிடுவோம்.
அறிவு கொள் பெண்மைகள் விழித்தெழட்டும்.
அன்பினால் புதுயுகம் அமைத்திடட்டும்.
நாளை எமக்கு என்றொரு உலகம்வேண்டும்
தோள்களை நிமிர்த்தி தொடர் பணியை!
வாழ்வினில் தமிழ் உலக வல்லமைகள் கண்டு
வணங்கிடல் வேண்டும் உலகமெல்லாம்.
ஆல்போல் விழுதுகள் ஊன்றி நிற்கும்
அறிவுடைச் சமுதாயம் மலரவேண்டும்.
□□□

www.tamilarangam.net

நெடுங்கதை.




-கே. ஸ்ரீதாஸ்

அடுக்களையிலிருந்த ஈரவிறகுகளை ஒவ்வொன்றாக எடுத்து அடுப்பை மூட்டினாள் செல்வி. விறகோ எரிந்தபாடாயில்லை. ஊதி ஊதிக் களைத்துப் போனாள்.

"எடி பிள்ளை... தேத்தண்ணியைக் கொண்டுவாவன்!"
— தந்தையின் கட்டளை.

"கொஞ்சம் பொறுங்கோவன்... எங்கை உத்தியோகத்துக்கே போகப்போறியள்..? நான் இஞ்சை அடுப்போடைகிடந்து சாகிறன்...பொறுங்கோ கொண்டுவாறன்!"

தேனீருக்காய்க் காத்திருக்கிறார் சதாசிவம்!
ஓய்வுபெற்ற ஆசிரியர். தனக்குக்கிடைக்கும் ஓய்வூதியப் பணத்திலிருந்தும், மூத்தவள் செல்வியின் வருமானத்திலிருந்தும் குடும்பத்தை ஒருவாறு இழுத்துக் கொண்டிருக்கின்றார். ஒருகாலத்தில் நல்லாய் இருந்த குடும்பம். அந்தளவுக்கு பணம்பலமாய் இருந்தது. உறவுகளும் நீமுந்தி நான் முந்தி என உரிமைகொண்டாடிய காலங்கள். ஊரிலே 'சதாசிவத்தார்' என அன்பாக அழைப்பதுண்டு.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று நிலைமை வேறு!
சொந்தங்கள் என்றாலே ஒதுங்கிக்கொள்கின்ற காலமாய்ப்போச்சு. அந்தளவுக்கு அவரிடம் பணம் இல்லை. பலமும் இல்லைத்தான்.
'இந்த உலகத்தில் பணமிருந்தால்தான் உறவுகளும் நிலைக்கின்றது.' என்பதை அனுபவ ரீதியாய் நன்றாகவே உணர்ந்துகொண்டவர்.
"இந்தாங்கோ தேத்தண்ணி!"
தேனீர்க் கோப்பையுடன் நின்றிருந்தாள் செல்வி.
"அப்பா...எனக்கு வேலைக்கு நேரம்போச்சுது..தம்பிக்கும் தேத்தண்ணி ஊத்தி வைச்சிருக்கிறன்...அவன் எழும்பினால் கொடுங்கோ!"
வேலைக்குத் தயாரானாள் செல்வி.
தன் மகளைக் காணும்போதெல்லாம் சதாசிவத்தாருக்கு ஒருவித ஏக்கப் பெருமூச்சு எழும். எவ்வளவோ நம்பிக்கைகளை பதியம்போட்டு குடும்பத்திற்காய் இவ்வளவு பொறுப்புக்களையும் தாங்கி எவ்வித சலனங்களுமின்றி இவளால் எப்படி வாழமுடிகின்றது..?
இவர் மனதில் அடிக்கடி எழுகின்ற கேள்வியது.
சதாசிவத்தார் கடந்துபோனவற்றை நினைத்துப் பார்க்கின்றார்.
பணக்காரக்குடும்பம்...
எளிமையாகவே வாழ தன்னை பக்குவப்படுத்திக் கொண்டவர். தனக்குப் பிடித்த ஆசிரியர் தொழிலையும் மேற்கொண்டார். பள்ளியில் படிக்கும் காலத்திலேயே சிவகாமி என்கின்ற ஆசிரியைமீது காதல் கொண்டார். அவளையே கரம்பிடிக்க எண்ணியபோது வழமையான எதிர்ப்புக்களை பெற்றோர்களிடம் சம்பாதித்துக்கொண்டார். அவைகளையும் மீறி இருவரும் இணைந்துகொண்டு தனிக்குடித்தனம் ஆரம்பித்தனர். இருவருமே ஆசிரியர் தொழிலை மேற்கொண்டதினால் கஸ்டமில்லாமல் குடும்பத்தை நடத்தினர்.
வாழ்க்கை எனும் சோலையிலே இனிய வசந்தங்கள்.பெற்றெடுத்த முத்துக்கள் நான்கு! செல்வி, இந்துமதி, ஜானி, சிந்துஜா.
குழந்தைச் செல்வங்கள் நிறைந்த குடும்பத்தில் குதூகலத்திற்குக் குறைவேது? நல்லமுறையில் வளர்த்தெடுக்க வேண்டுமென்று இருவருமே கண்ணும் கருத்துமாயிருந்தனர்.சிவகாமியும் பிள்ளைகளுக்காய் இடையில் ஆசிரியர் தொழிலை நிறுத்திக்கொண்டாள்.
காலங்களும் மெள்ள நகர்ந்தன.
அதிக சந்தோஷம் இருந்தாலும் ஏதாவது தீங்கு விளையும் என்று சொல்வார்கள். அது எதுவோ இவர்கள் குடும்பத்திற்குச் சரியாய் இருந்தது.
அன்று திங்கட்கிழமை.
வீட்டில் ஒருவரும் இல்லை.
எல்லோருமே பாடசாலைக்குச் சென்றிருந்தனர்.அன்று சிவகாமிக்கு உடம்பும் சரியில்லை. ஆனாலும் எழுந்து அன்றைய காரியங்களைச் செய்துவிட்டு படுக்கையில் சாய்ந்தபோதுதான் பாழாய்ப்போன நெஞ்சுவலி திடீரென்று வந்து துடியாய்த் துடித்தாள். அருகினில் எவரும் இல்லை. சத்தம்போடத் தென்பும் இல்லை. எதேச்சையாக சிவகாமியின் பக்கத்துவீட்டு பரிமளம் வந்தபோது சிவகாமியின் நிலையைக்கண்டு அக்கம் பக்கத்தார் உதவியோடு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டாள்.
விளைவு? சிவகாமி மீளாத்துயில் கொண்டுவிட்டாள்.
இது என்ன சோதனை...?
சிவகாமியின் பிரிவால் அதிர்ந்துபோனார் சதாசிவத்தார்.

www.tamilarangam.net

ஏன் இந்த நிலைமை...? என்பிள்ளைகளை எப்படி வளர்த்தெடுக்கப் போகின்றேன்....? தாயின் பிரிவை இவர்களால் எப்படித் தாங்க முடியும்...? அவள் வேண்டுதல் செய்த கடவுள் எல்லாம் எங்கே போய்விட்டன..?

'இந்த விஞ்ஞான உலகத்தாலும் மனிதனின் மரணத்தை வெல்ல முடியாது!' சிவகாமியின் பிரிவு அவரை வாட்டியபோதும் பிள்ளைகள் நல்ல முறையில் வளரவேண்டுமென்பதற்காய் துயரங்களையும் தாங்கிக்கொண்டு மிகவும் கஸ்டப்பட்டார்.

வந்துபோன உறவுகளும் தங்கள் வரவைக் குறைத்துக் கொண்டன.

□

"அப்பா!"

அவரின் நினைவைக் கலைத்தவளாக செல்வி! திடுக்கிட்டாற்போலத் திரும்பினார் சதாசிவத்தார்.

"என்ன பிள்ளை வெளிக்கிட்டிட்டியே...மற்றதுகள் இன்னும் எழும்பேல்லைப் போலக்கிடக்கு... அதுகள் எப்ப உன்ரை கஸ்டங்களைக் குறைக்கப் போயினம்... நீயும் எத்தனை நாளைக்கென்று இப்பிடியே உழைத்துக் கொண்டிருக்கப் போறாய்...!"

தன் மனத் தாங்கலைக் கொட்டிக்கொண்டார்.

"எனி துவங்கிட்டியள் உங்கள் புராணத்தை... இதுதான் சொல்லுறது வாத்திமாருக்குப் பிள்ளையளாப் பிறக்கக்கூடாதெண்டு! பாடத்தைத் திரும்பத் திரும்ப சொல்லுறமாதிரி சொல்லுவியள்... பேசாமல் இருங்கோ நான் போயிட்டு வாறன்...!"

செல்வி தன்சைக்கிளையும் எடுத்துக்கொண்டு செல்வதற்கு ஆயத்தமானாள். போனவள் திரும்பிவந்தாள்..

"என்ன பிள்ளை திரும்பி வாறாய்..? சைக்கிளிலை ஏதாவது பழுதே..?"

"இல்லையப்பா... நேற்றுத் தம்பியின் கடிதம்வந்தது... தங்கச்சி ஆட்கள் சொல்லேல்லையே...?என்ரை மேசைமேலைகிடக்குது எடுத்துப் பாருங்கோ...!"

"நான் என்னத்தைப்பார்க்கிறது...ஜேர்மனுக்கு எண்டுபோய் ஒரு வருஷத்திற்கு மேலாச்சுது...அவன் எங்கடை கஷ்டங்களைப் போக்கினானே...?"

— கரிந்து கொட்டினார் சதாசிவத்தார்.

"அவனைப்பற்றிக் கதைக்காட்டி உங்களுக்குப் பத்தியப்படாது...அவன் அங்கு சரியாய்க் கஸ்டப்படுகிறானாம்... சும்மா அவனைப் பேசிக் கொண்டிருக்காமல் கடிதத்தைப் பாருங்கோ..!"

"அதுசரி அவனைப்பற்றிக் கதைச்சவுடனயே உன்ரைமுகம் மாறிப்போயிடும்... பின்ன என்ன பிள்ளை... உனக்கு நல்லாத்தெரியும் எவ்வளவு கஸ்டப்பட்டனாங்கள்... அவன் கொஞ்சமாவது யோசிக்கிறானோ எண்டு எனக்குப்படேல்லை...எவ்வளவு பிரச்சனைப்பட்டு பக்கத்துக்காணியை உனக்கெண்டு வாங்கிவைச்சன்... அதை விற்கச் சொன்னாய்... வித்தன்... அதோடை விட்டியே... கிடந்த நகை நட்டுகளையும் வித்துக்கித்து நீ அவனை அனுப்பினதை கொஞ்சமாவது யோசிச்சானோ...?"

அவர் முகத்தில் கோபம் தெரிந்தது.

"அப்பா கோபப்படாதேங்கோ...இப்ப எங்கடை நாடு இருக்கிற நிலைமையைக் கொஞ்சம் யோசியுங்கோ... அவன் இருந்தால் இஞ்சை என்ன நடந்திருக்கும்...? அவனாவது அங்கு சுகமாய் இருக்கட்டும்... எனக்கு உந்தக் காணி நகையள் தேவையில்லை... இண்டைக்கு எங்களுக்கெண்டு ஒரு நாடில்லாமல் அகதியாய் எல்லா நாட்டிலையும் எங்கடை சனங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழுதுகள்... இஞ்சை எங்கடை நாட்டுக்கெண்டு போராடிச் செத்துக் கொண்டு இருப்பவர்கள் எத்தனைபேர்...எங்கடை நிலம் உரிமை எல்லாம் அன்னியங்களிட்டைக் கிடக்கு...முதலிலை அவைகளை மீட்பம்...பிறகு எங்கடை காணிகள் என்று சொந்தம் கொண்டாடலாம்...எனக்கு இப்ப அவசியம் இதுதான் அப்பா... எனக்கு மட்டுமல்ல...எங்கள் எல்லோருக்கும் அவசியமானது எங்கடை உரிமை...!"

படபடவெனப் பேசிமுடித்தாள் செல்வி...

"சரிசரி நேரம்போச்சுது...முதலிலை வேலைக்குப் போய்வா... ஆறுதலாய்க் கதைப்பம்...!"

செல்வி விடைபெற்றாள்.

மகள் போன திக்கையே பார்த்தவண்ணமிருந்தார் சதாசிவத்தார். மகளின் கடமை உணர்வையும் துணிச்சலையும்கண்டு வியப்பில் ஆழ்ந்தார். எதைக் கேட்டாலும் எப்போதும் சளைக்காது நம்பிக்கை ஒளியை ஏற்றிவிட்டுச் செல்வாள்....

அவள் வாழ்வில் எப்போதுதான் ஒளி ஏற்படப்போகின்றது?

தந்தைக்கும் அக்காவுக்கும் நடந்த சம்பாஷணைகளைக் கேட்டபடி படுத்திருந்தாள் இளையவள் இந்துமதி.

விழியோரங்களில் கண்ணீர் கன்னங்களில் வடிந்து அவள் தலையணையை நனைத்தது. அவள் அருகில் அவளது குழந்தை.

இந்துமதி! இவள் ஒரு விதவை.

சோதனைகள் எப்போதுமே நல்லவர்க்குத்தான்.

சிவகாமி சென்றடைந்தவுடனேயே சதாசிவத்தார் மிகவும் மனமுடைந்து போனார். செல்வியின் அறிவு மேலோங்கி நிற்க அவளை நன்றாகப் படிப்பிக்க வேண்டுமென்று எண்ணினார். மற்றவர்களையும் படிப்பித்து நல்ல நிலைமைக்கு கொண்டுவருவதற்குப் படாதபாடுபட்டார். ஏழ்மையும் தள்ளாடியது. சீதேவியும் எட்டநின்று சிரிப்புக் காட்டினாள். தினம் தினம் தன் தந்தை குடும்பச் செலவினங்களை சரிக்கட்ட கஸ்டப்படுவதைக் கவனித்து வந்தாள் செல்வி. அவள் பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டாலும் வாழ்வில் எப்படியாவது சொந்தக்காலில் நிற்கவேண்டும் அப்பாவுக்குப் பலமாய் நிற்கவேண்டும்என்ற எண்ணம் அவள் மனதில் ஆழப்பதிந்ததனால் அதுவே அவளை ஒரு நர்ஸாக்கியது. நோயாளிகளின் வேதனைகள் தவிப்புக்கள் அவர்களது எதிர்பார்ப்புக்கள் இப்படி அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் ஜீவனாய் அவளது வாழ்வு சென்று கொண்டிருந்தது.

இவ்வேளையில்தான் இந்துமதியின் விவகாரம்!

இளையவள் இந்துமதியை நன்றாகப் படிப்பிக்கவேண்டுமென்று மனதினில் நினைத்தாள். மற்றவர்களையும் நல்லபடியாகக் கவனித்து அப்பாவின் கஷ்டங்களைப் போக்கவேண்டுமென்று எண்ணினாள். இந்துமதிமீது அதிக அக்கறையும் செலுத்திவந்தாள். பலன் என்ன?

நாம் ஒன்று நினைத்திருக்க தெய்வம் ஒன்று நினைத்திருக்கும் என்பார்கள். அதேபோன்று இந்துமதியின் வாழ்வில் செல்வி ஒன்று நினைத்திருக்க இந்துமதி வேறொன்றை நினைத்திருந்தாள்.

எண்ணங்கள் துள்ளிவிளையாடிய இளமைப்பருவம்.

இந்துமதியோ யாருடனும் அதிகம் பேசப் பிடிக்காதவள். தனிமையை

www.tamilarangam.net

விரும்பியவள் பாடசாலைக்குப் போய்வரும் வழியில்தான் ஒருவன் அவனோடு பேச நினைத்தான். அவளும் பேசவிரும்பினாள். ஆனாலும் இருவராலும் பேசிக்கொள்ள முடியவில்லை.

சுதன்!
அந்த ஊரின் பெரிய பணக்காரரின் மகன். செல்வச் செழிப்பில் மிதந்து கொண்டிருப்பவன். அவன் பேச நினைத்தான். அடிக்கடி அவர்களின் சந்திப்புக்கள் நிகழ்ந்தன. வார்த்தைகள் இல்லை. பார்வைகளோடு சென்று அவைகள் புன்னகைகளாக மாறிக்கொண்டிருந்தன. முதலில் யார் பேசுவது? நாட்களும் நகர்ந்தன.
ஓர் நாள்...
சுதன் அவளிடம் ஒரு கடிதத்தை நீட்டினான். அவளோ வாங்கவில்லை. பயத்தினால் அவள் மனம் படபடத்தது. ஒன்றும் அவளால் சொல்லவும் முடியவில்லை. விருட்டென அவ்விடத்தைவிட்டு நகர்ந்தாள்.
அடுத்த நாள்...
அதே நேரம்...அதே நிலை...அவள் மனம் தவித்தது! கடிதத்தை வாங்குவதா..? விடுவதா? படித்தவன் பண்பானவன் அழகானவனும்கூட. அவளிற்கும் அவன்மேல் அளவு கடந்த விருப்பம். ஆனாலும் அதையும் மீறியதான தயக்கம். தன் குடும்பத்தையும் நினைத்துப் பார்க்கிறாள். தன் ஆசை தவறானதா? பல கேள்விகள் வந்துபோயின...
இனம்புரியாத உணர்வும் பயமும் அவளைத் தொற்றிக்கொண்டது. அன்றும் கடிதத்தை அவளால் வாங்க முடியவில்லை.அவள் வீடு வந்து சேர்ந்ததும் ஒரு மனநிலையில் இல்லை. ஏக்கத்திலோ தூக்கம் மறந்தாள்.மனமெங்கும் விசாரணைப் போராட்டம்.
விளைவு.? காதலெனும் கோட்டையில் இந்துமதி கைதானாள்.
அவர்களது கனவுகளையும் கற்பனைகளையும் எதிர்பார்ப்புகளையும் தாங்கி கடிதங்கள் வந்துபோயின.
அவள் பேச நினைத்தபோதும்
பேசுகின்ற பொழுதும்
சுதனோ மௌனமானான்.
இருவரும் பேசுகின்ற பொழுது
பெற்றோர்களோ மௌனமாகவில்லை.
இந்தச்செய்திகளுக்கு இறக்கைகள் அதிகமன்றோ!
சதாசிவத்தார் காதில் செய்தி எட்டியது...அவரால் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவித்தார்.
என்ன செய்வதென்றும் அவருக்குப் புரியவில்லை.
"பிள்ளை...என்ன காரியம் செய்திருக்கிறாய்?"
"இப்ப என்ன நடந்திட்டுது என்று கத்துறீயள்?"
"இனி என்ன நடக்கவேணும்...எல்லாம் உங்கள் இஷ்டத்துக்கு நடக்கிறீயள்... கேட்டவுடனே கோபம் வருகுது!"
இந்துமதியைப் பார்க்கப் பிடிக்காமல் வேறுபக்கமாய் நின்று கூறினார்.
"ஒருவரைக் காதலிப்பது தப்பாப்பா?"
அவரைப் பார்க்காமலேயே அவளும் கேட்டாள்.
"தப்பில்லை. தப்புத்தண்டா நடக்காதவரைக்கும் தப்பில்லை...நீ தவறிவிடக் கூடாது எண்டதுதான் எனக்குள்ள பயம்...நீ தேர்ந்தெடுத்த முறையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவறு பிள்ளை...முள்மீது சேலைபட்டாலும் சேலைமீது முள்பட்டாலும் நஸ்டம் என்னவோ சேலைக்குத்தான். முள் என்று தெரிஞ்சும் சேலையை நாம் மிதிபடவிடக்கூடாது...அந்தப் பையனின் தகப்பனை எனக்கு நல்லாவே தெரியும்.மனித மனங்களையே மிதித்துவாழும் அவர் உங்கள் காதலை மதிப்பார் எண்டு எனக்குத் தோன்றவில்லை...பிள்ளை.உன்ரை கொக்காவை ஒருதரம் யோசிச்சியே...உன்மீது அவள் எவ்வளவு ஆசையளை வளர்த்து உன்னைப் பார்க்கிறாள்...ஆனால் நீயோ வேறு திசையில்...இது உனக்குச் சரியெனப் படுகுதா...என்னைப் பார்த்துச் சொல்!"

கண்டிப்போடு கேட்டார்.

"அப்பா...! அவர் நல்லவரப்பா...எல்லா விஷயமும் நான்சொல்லியும் அவர் என்னை விரும்புகின்றார்...என் பாதை பிழையானதா?"

"பிள்ளை...!இவ்வளவு நாளும் நடந்துகொண்டுவிட்டு ...பிழையா எண்டு கேட்கிறியே... இதுதான் பிழை பிள்ளை... உன்பாதை ஏதோ சரியாக இருந்திருக்கலாம்... நீ பார்த்துப்போகவில்லை... இந்த உலகத்திலை எல்லாரும் நல்லவங்கள்தான்... ஒருத்தன் நல்லாய் வாறதும் கெட்டுப் போறதும் அவன் நிலையைப்பொறுத்தது... அன்றி அவன் வாழும் நிலையைப் பொறுத்தது... எது எப்படியோ மூத்தவள் இருக்கும்போது நீ மேற்கொண்டிருக்கின்ற வழி எனக்குப்பிடிக்கேல்லை... அவள் தன்ரை வாழ்க்கையை நினைக்காது உங்களை நினைச்சு வாழுறாள்..."

இந்துமதியின் நெஞ்சு ஒரு கணம் சுருக்கென்றது.

செல்வி வழமைபோல் வேலைக்குப் போய்வந்தாள்.

வந்ததும் வராததுமாக எல்லாமே சொல்லி முடித்தார் சதாசிவம்.

செல்வியோ மறுப்புத் தெரிவிக்கவில்லை.

"காலம் வரும்போது கவனிப்போம்...நீ முதலில் படி!"என்று சொல்லிவிட்டாள்..

சதாசிவத்தாருக்கோ இஷ்டமில்லை... மகளை மாற்றுவதற்காய் எவ்வளவோ புத்திமதிகளைச் சொல்லிப்பார்த்தார். இந்துமதியோ மாறுவதாக இல்லை... அவளது கண்ணீரில் அவரது கண்டிப்பு கரைந்தது...

மறுபுறம் சுதனின் தந்தையாரோ கொதித்தெழுந்தார்...

வழக்கமான பணக்கார அப்பாக்களின் பேச்சு... எல்லாவற்றையும் காட்டிப் பயமுறுத்தினார்... இருவருக்கும் இடையில் நீண்ட வாக்குவாதம்... சுதன் வீட்டை விட்டு வெளியேற எண்ணினான்...சுதனின் தந்தையோ தாராளமாக நீ வெளியேறலாம் என்று சொல்லிவிட்டார்.

அவனது தாயாலும் எதுவும் இயலவில்லை.

தந்தைக்கும்மகனுக்கும் இடையில் நடக்கும் பிரச்சனைகள்... பெற்றவளான போதும் தன்னால் ஒன்றும் பேசமுடியாத நிலை... தன் மனத்திற்குள்ளேயே தன் வேதனைகளை அடக்கிக் வேண்டிய நிர்ப்பந்தம் ஒரு தாய் என்ற ஸ்தானத்தில் மகனுக்காய்க்கூட கதைக்கமுடியாத நிலை... அந்தளவுக்கு தன் மனைவியை அதிகாரத்தாலேயே அடக்கி வைத்திருக்கிறார்...அவன் வீட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கும்போதும் அழத்தான் முடிந்தது அவளால்...

□

சதாசிவத்தார் வீட்டு வாசலில் சுதன்!

அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை... அவனைப் போ என்று சொல்லவும் முடியவில்லை வா என்று அழைக்கவும் முடியவில்லை.

சற்று யோசனைக்குப் பிறகு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"தம்பி உள்ளேவாரும் கதைப்பம்!"
இருவரும் உள்ளே சென்றனர்.
"தம்பி என்ன நடந்தது?"
சுதன் நடந்த பிரச்சனைகள் அத்தனையையும் கூறினான்..
"தம்பி... இதற்கு நான் என்ன செய்வதென்று எனக்குத் தெரியேல்லை... எல்லாத்திற்கும் மூத்தவள் வரட்டும்...!"
செல்வியும் வந்து சேர்ந்தாள்...சதாசிவத்தார் அவளிடம் முடிவைக் கேட்டார்...
"பிள்ளை..இவனின் நிலையைப் பார்த்தியோ நான் என்ன செய்யப்பிள்ளை...?"
"அப்பா...இனி யோசிக்கிறதில் ஒண்டுமில்லையப்பா...தன் சொந்த பந்தங்களை வசதிகளை சொத்துக்களை இழந்து வந்திருப்பவரை நாம் வெளியேற்ற முடியாது....!"
"பிள்ளை...எனக்கும் இதுதோணாமல் இல்லை...ஆனால் உன்னைப்பற்றித்தான் யோசிக்கிறன்...ஊர் இல்லாததையும் பொல்லாததையும் கதைக்கும் பிள்ளை... மூத்தவள் நீ இருக்கும்போது அவனுக்குக் கல்யாணம் எண்டால்...."
"அப்பா! எனக்கு ஊரைப்பற்றிக் கவலை இல்லை... எங்களைப்பற்றித்தான் எனக்குக் கவலை... ஊரைப்பற்றி நீங்கள் கவலைப்படாதேயுங்கோ...நாங்கள் மரியாதையாய்த்தானே இருக்கிறம்... பிறகு என்ன பயம்...?இப்பிடியே இதை விட்டால்மட்டும் என்ன ஆகப்போகுது?ஆகவேண்டிய நல்ல விஷயங்களைப் பார்ப்பம்...எங்கடை வசதிப்படி இந்தக் கல்யாணத்தை நடத்திடுவம்..."
"இனி என்ன பிள்ளை...உனக்கு எது தோனுதோ அதன்படி செயற்படு...."
அவரும் சம்மதம் கொடுத்தார்...
செல்வி எடுக்கும் எந்த முடிவுகளானாலும் அவர் தடுமாறுவது கிடையாது...ஆனாலும் அவர் மனதில் ஒரு நெருடல்...'இவள் வாழ்வை எப்படி ஒப்பேற்றப்போகின்றேன்...?'
அவளை அவர் நினைக்காத நாளில்லை....
திருமண ஒழுங்குகள் நடந்து கொண்டிருந்தன...
ஊராரின் வசைபாடல்கள்...
"பணக்காரப் பெடியனை அமத்திப்போட்டுதுகள்..."
— இப்படி எத்தனையோ அவர்கள் காதுகளில் விழத்தான் செய்தன...
ஆனாலும் இவைகளைப் பொருட்படுத்தாது திருமணத்தை நடாத்தி முடித்தாயிற்று...
முழுக்க முழுக்க செல்வியே முன் நின்று அவர்களைச்சேர்த்து வைத்ததில் சதாசிவத்தாருக்கு ஒரு வகையில் மகிழ்ச்சி என்றாலும் செல்வியைப்பற்றிய கவலைதான் அவர் மனதில் நிலைத்தது...
சுதனும் தான்படித்ததைக்கொண்டு ஒருகம்பெனியில் கிளார்க்காக பணிபுரிந்து வந்தான்...குடும்பத்தில் சந்தோஷம் ஆள...காலமும் கொஞ்சம் விரைந்து சென்றது...இந்துமதி ஆண்குழந்தை ஒன்றையும் பெற்றெடுத்தாள்.
☐

அன்று வீதியில் இராணுவகெடுபிடி அதிகமாக இருந்தபோதிலும் வேலைக்கு நேரத்திற்கு போய்விடவேண்டும் என்ற துடிப்பில் வேகமாகச்சென்று கொண்டிருந்தான் ஜானி.
எங்கிருந்தோ பொம்மர் ஒன்று தாழப்பறந்து குண்டுமாரிபொழிந்து சென்றது. கட்டிடங்கள் இடிந்தும் வாகனங்கள் எரிந்தும் பாதைகளில் சென்று கொண்டிருந்த பயணிகள் காயம்பட்டும் இறந்தும் இப்படிப்பல...
சைக்கிளில் சென்று கொண்டிருந்த சுதனும் அகப்பட்டுக் கொண்டான்.

www.tamilarangam.net

இரத்தவெள்ளத்தில் கிடந்த சுதனை பக்கத்துவீட்டுத் துரையர் அடையாளம் கண்டு கொண்டார்.
சதாசிவத்தாருக்கு அடுத்தடுத்து சோதனை.
சுதன் பிரிந்ததுமே இந்துமதியால் எதுவுமே சரிவரச் செய்ய முடியவில்லை. ஊராரின் வசைச் சொற்கள் வேறு...அவைகளைக் கேட்டுக்கேட்டு அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவளுக்கு ஆறுதல் அவளது மகன். அவனுக்காகவே வாழ்வதுதான் அவளது வாழ்வு.
மீண்டும் செல்விக்குக் கஷ்டங்கள்.
இந்த நிகழ்வுகளுக்குப் பின்புதான் ஜேர்மனிக்கு வந்திருந்தான் ஜானி.
□

தொலைபேசி மணி அலறியது....
"ஹலோ யார் பேசுறது?"
"நான் தருமண்ணை கதைக்கிறன். என்ன நித்திரையாலை எழும்பேல்லைப் போலக் கிடக்கு...இண்டைக்கு விசா புதுப்பிக்க வேணும்.. மறந்திட்டீரே?"
"இல்லை அண்ணை...வெளிக்கிடுவம் எண்டுதான் இருக்கிறன்!"
"சரி வந்துகதைப்பம்!...நான் இப்ப வாறன்...வெளிக்கிடும்!"
தொலைபேசியை வைத்துவிட்டு வெளிக்கிடத் தயாரானான் ஜானி.
ஜானி வெளிநாட்டுக்கென்றுவந்து பலரைச் சந்தித்துக்கொண்டாலும் தருமர் ஒருவர்தான் அவனுக்கு நிறைய உதவிகளைச் செய்துவருவதுண்டு. தருமருக்கு ஜானியைப் பிடிக்கும். ஜானிக்கும் தருமரைப் பிடிக்கும். தருமரும் ஜேர்மனிக்கென்று வந்து பத்துவருடம். ஜேர்மன் மொழியை நன்றாகப் பயின்றுவைத்திருக்கிறார். எல்லாவிடயமும் இவர் மூலம்தான் செய்வதுண்டு. ஊரில் மனைவிபிள்ளைகளை விட்டுவிட்டுவந்து இங்கு மாடாய் உழைக்கின்றார்.

சற்று நேரத்தில் தருமர் வந்து சேர்ந்தார்.
"வாங்கண்ணை!"
ஜானி வரவேற்றான்.
"தம்பி வேளைக்குப் போனால்தான் நல்லம். கனபேர் இண்டைக்கு விசாவுக்கு வருவினம். இனிப்போய் நம்பர் எடுக்கவேணும். கெதியாய் வெளிக்கிடும்..."
"என்னண்ணை இது அடிமை வாழ்க்கை...இரவும் பகலும் ஒரே மாதிரியாய் இருக்குது...வெளியில் போனாலும் சனங்கள் ஒரு மாதிரியாப் பார்க்குதுகள்.
அலுத்துக் கொண்டான் ஜானி.
"தம்பி! எனக்குமட்டும் என்ன வேண்டிக்கிடக்கு...நான் என்ன வாழ்க்கையை பிடித்துக் கொண்டா வாழுறன்? என்ரை மனிசி பிள்ளையளை விட்டிட்டு இத்தனைவரியமாய் சந்தோசமாக இருக்கிறன் எண்டு நினைக்கிறீரே? என்ன செய்வது...சூழ்நிலைக்கு ஏற்றமாதிரிநாங்களும் வாழப்பழகிக்கொள்ளவேணும்... சிலருக்கு விரும்பிறதுகிடைக்கும். சிலருக்கு விரும்பாதது கிடைக்கும்... ஆனால் கிடைக்கிறதை விரும்பிக் கொண்டுதான் ஆகவேணும்"
"நீங்க என்ன சொல்லுங்க அண்ணை...எனக்கெண்டால் இந்த வெளிநாட்டு வாழ்க்கை பிடிக்கேல்லை... நீங்கள் இங்கை வந்து கனகாலமாச்சுது...முந்தி மாதிரி எங்கடை இடங்கள் இல்லையண்ணை... எங்களுடைய சனங்கள் இப்ப எவ்வளவு கஸ்டப்படுகினம்... பிரச்சினையளோடை இருந்தாலும் ஒரு நின்மதி... அக்கம்பக்கம் அண்ணன்தம்பி சொந்தபந்தங்கள் எண்டு வாழ


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடிஞ்சுது... ஆனால் இங்கைவந்து சொந்த பந்தங்களை மறந்து மொழியை மறந்து ஏன் இன்னும் சிலர் மதங்கள் மாறியும் தங்களையும் மறந்துபலரால் எப்படி இங்கு வாழ முடியுது... என்னாலை அப்படி இருக்க முடியேல்லை...!"

தன் மனதில் உள்ளதை வெளிப்படுத்தினான் ஜானி...

"தம்பி! எல்லாரும் ஏதோ விருப்பம் கொண்டுதான் வெளிநாடுகளுக்கு வந்திருக்கிறம்... பொருளாதார நிர்ப்பந்தங்கள்...பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் பல்வேறு நாடுகளிலை வாழ்கிறம்.... பலர் நல்லாயும் இருக்கிறார்கள்... சிலர் கெட்டும்போயிருக்கிறார்கள்...வெளிநாடுகள் பலரையும் பலவிதத்திலை மாத்திப் போட்டுது... ஆனாலும் தம்பி... நாம் யார்.. நமக்குள் என்ன உணர்வு...? நம் மொழி நம்தேசம் என்று நமக்குள் நாம்சிந்திக்கவேண்டும்.... சிந்திப்போமானால் நமக்குள் எந்தப்பிளவுகளோ பிரச்சினைகளோ வர இடமிருக்காது...இங்கை பலரைப் பார்த்திருக்கிறன்...எங்கடை மொழியைக் கதைக்க வெட்கப்பட்டு பிறமொழியைக் கதைத்தால்தான் பெருமையெண்டு வாழுதுகள்...!"

"அப்ப பிறமொழியைக் கதைக்கிறது தப்போண்ணை?"

"ஒருக்காலும் இல்லை... பிறமொழியும் கதைக்கவேணும்...எந்த மொழியையும் தெரிஞ்சுகொள்கிறதிலை தப்பில்லை...ஆனால் எங்கடை மொழியைப் புறக்கணிக்கிறதுதான் தப்பு."

"அண்ணை... மற்றையமொழி கதைத்தால்தான் பெருமையெண்டு நினைக்கிறவங்கள் மத்தியிலை தமிழ்மொழி எப்பிடியாம் வாழ்வது?"

"அப்படியும் சொல்லமுடியாது தம்பி... சிலர் தமிழார்வம் கொண்டு விழாக்கள் இலக்கியக்கூட்டங்கள் ஆங்காங்கே நடாத்துகிறதாலை எங்களை நாங்கள் ஞாபகப்படுத்திக் கொள்கிறம்.. அதையும் பாரும்தம்பி குறைசொல்லுறதுக்கும் எங்கடை சனங்களிலை ஒரு கூட்டம் இருக்குது...இப்பிடி எளவோ கதைக்கலாம்...முதலிலை எங்கடை அலுவலைப்பார்ப்பம்!"

இருவரும் கதைத்துக்கொண்டே வெளியில் வந்தார்கள்...

☐

(அடுத்த இதழில் முடியும்)

## கூட்டுவழிபாடு.

பிறேமன் இந்துவழிபாட்டுச் சங்கத்தினரால் ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி தினத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட விசேட வழிபாடும் கூட்டுப்பிரார்த்தனையும் 04.09.1996 புதன் கிழமை மாலை இந்துவழிபாட்டுச் சங்கத்தினரின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான அடியார்கள் இப் பிரார்த்தனைகளில் பங்கு கொண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# —புதியவள்—

மானிடர் பிறப்பு
புனிதத்துக்குச் சமம் என்பார்கள்
அது போல்— உன்னை
புனித தெய்வமென்று
நினைத்த என்னை
நீயோ
முட்டாள் என்று
கூறிவிட்டாய்
புதுமைப்பெண்ணே....
அன்று—
உனது
கண்களின் அசைவு
ஒவ்வொன்றிலும்
என்நெஞ்சம் நெகிழ்ந்ததுண்டு
இன்று—
உனது
சிரிப்பு ஒவ்வொன்றிலும்
என் மரணம் என்னை
நேசித்துக்கொண்டே வருகிறது!!
ஒரு வேளை
மரணத்தின் பிடியில்
நான் சிக்கிவிட்டால்
அன்றாவது—
உன்
மடிசாய
அனுமதிப்பாயா?





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**எழிலனின்....**

# சத்தியத்தின் சுவடுகள்

**சுவடு ஆறு**

ஒரு நாட்டில் உண்மையான சனநாயகமானது எந்தக் கட்சிக்கும் எந்த மதத்திற்கும் எந்த மொழிக்கும் எந்த கொள்கைக்கும் அப்பாற்பட்டதாக தனிமனித உரிமைகள் அனைத்தையும் அனைத்துவிதத்திலும் காப்பதனை நூற்றுக்கு நூறு வீதம் உத்தரவாதம் செய்வதாயிருக்க வேண்டும். அதாவது தனி மனித உரிமைக்கு முழு உத்தரவாதம் உறுதியான முறையில் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதில் எதன் பேரிலும் மாற்றம் அனுமதிக்க அனுமளவில் சம்மதமேற்பட்டாலும் அது சனநாயகத்தை பலவீனப்படுத்திவிடும். அதைத்தான் மதத்தாலும் மொழியாலும் சாதியாலும் அரசேற முயலும் நம்நாட்டு அரசியல் கட்சிகள் காட்டி வைத்திருக்கின்றன.

அங்கெல்லாம் மதவாதிகளின் வெறியுணர்வினைப் பிரதிபலிக்கும் ஆபத்தான கும்பலும்கூட அரசியல் கட்சியாகப் பதிந்து கொள்ள முடிகின்றது.மக்களின் அடிப்படைத் தேவைகளில் எல்லாம் அடிப்படையான வாழ்வுரிமையை மொழியின் பெயராலும் மதத்தின் பெயராலும் பறித்துவிட எடுக்கப்படும் எந்த முயற்சியுமே சனநாயக விதிமுறைக்குள் அங்கீகரிக்கப்பட்டு விடுவது இரத்தக் களறிக்கு மட்டுமே வித்திடுமே தவிர மானிட தர்மத்தின் பாதுகாப்புக்கு என்றுமே உத்தரவாதம் தராது.

நாட்டைக் காக்கவும் நாட்டு மக்களைக் காக்கவுமென அமைக்கப்படும் இராணுவம் மத~மொழி~இன வெறிக் கொள்கைகொள் குண்டர் கும்பலாக இருந்தால் அடக்கு முறைக்கெதிரான ஆயுதப் போராட்டம் நிச்சயமாக அந்த இராணுவத்தை அழித்தொழிப்பதில் வென்றே தீர வேண்டிய நிலைக்குள் விழுந்து விடுதலைத் தவிர்த்தல் இயலாது.

இதைத்தான் இன்றைய காலகட்ட இலங்கையின் போராட்டச் செய்திகள் நமக்கு விளக்குகின்றன.மக்களைப் பசியால் வாட்டிவந்த அரசாங்கமானது உரிமைக்குரலுக்கு உணவு கொடுத்து அதுதானே உனக்குக் குறை?வேறென்ன குறை என்று அரச திமிரைக் காட்டி மக்கள் வேட்கையைக் கொச்சைப்படுத்தியதன் பிரதிபலனாக வங்குரோத்துநிலையில் விடுதலை வீரர்களிடம் மூக்குடைபட்டு முணங்கிக் கொண்டிருக்கின்றது.

பிழையான மதவெறியை~மொழி வெறியை அவற்றைப் போதிக்கும் பிக்குகளின் கயமையைக் கொள்கையெனக் காவி நின்று அவ்வழியில் மக்களைத் திசைதிருப்பி விட்டு அதனடிப்படையில் தம்மை வளர்த்துக்

www.tamilarangam.net

கொள்ள முயலும் ஆபத்தான அரசியல்கொள்கையின் காரணமாக அங்கே இனநாயகத்துக்கே சனநாயகமெனப் பெயர் கிடைத்திருக்கிறது.

ஒரு போலியான ஆட்சிமுறையைத் தோற்றுவித்துக் கொண்டு மக்களைப் பிரித்து ஆளும் அட்டைச் சனநாயகமானது சுதந்திரக் காற்றின் வீச்சுக்கு ஈடு கொடுக்காது.அது காலத்தின் விதியாகும்.இலங்கையில் அது வீசத்துவங்கிவிட்டது என்பதைத்தான் தற்போதைய செய்திகள் நிரூபிக்கத் தொடங்கியுள்ளன எனலாம்.

அதைத்தான் அதிகார பலத்தில் ஆட்சி நடத்திய வெள்ளையருக்கும் தென் ஆபிரிக்க மக்களும் உணர்ந்த விழைந்தார்கள் அந்தக் காலத்தில்.

நெல்சன் மண்டேலா என்ற மாமனிதனின் ~ உண்மையைச் சார்ந்து நின்ற தைரியத்தை வர்ணிப்பது கடினம். அவர் சட்டத்தை மனசாட்சியின் குரலோடு பேசவிட்டு அதன் பிழைகளை எந்த தண்டனைக்கும் அஞ்சாத நெஞ்சினனாய் சுட்டிக்காட்டி நின்ற ஒரு மலையொப்ப உறுதிபடைத்த மாமனிதராகவே அந்நாட்டு சரித்திரத்தில் பதிந்திருக்கிறார்.

தம்மைக் குற்றவாளிக்கூண்டில் ஏற்றிய வெள்ளைய நீதிசபையில் அவரது குரல் ஒலித்த உண்மைகள் இலங்கையின் அரசியல் நிலையோடே நம்மையறியாமலே நம்மை ஒப்பிட வைப்பதைத் தவிர்க்க முடியாது என்றே படுகின்றது.
அவரது சில வார்த்தைகள் உண்மையென்னும் கல்லில் உளிகொண்டு செதுக்குகின்ற சத்தியத்தின் அச்சுக்கள். படித்தால் போதாது அவற்றைக் கருத்தோடே சிந்தித்தும் பாருங்கள்.

"இந்த நாட்டைத் தனதில்லமாகக் கொள்ளும் ஒவ்வொருவரும் அவரது நிறத்திற்கும் அவரது சார்பினத்திற்கும் அப்பால் இந்நாட்டின் உரிமைமிக்க மக்கள் என்று அங்கீகரிக்கப்பட்டு நடத்தப்பட வேண்டும்.சனநாயகக் கொள்கைகளில் நம்பிக்கை கொண்ட அனைத்து தென்னாப்பிரிக்க மக்களும் முழுமையான சமத்துவ உரிமை கொண்டவர்களாக எல்லா வழிகளிலும் முழுமையான சனநாயக உரிமையுடன் அரச விவகாரங்களில் குரல் கொடுக்க தகுதி பெற்றவர்களாக விளங்க வேண்டும்.

சிந்திக்கும் எந்த ஆப்பிரிக்கனும் இந்த நாட்டில் சட்டத்துக்கும் தன் மனசாட்சிக்குமிடையில் தொடர்ந்து ஏற்படும் மோதலைத் தவிர்க்க முடியாமல் இருந்து கொண்டிருக்கின்றான்.

இந்த அரசாங்கமோ எமது கோரிக்கைகளை பலாத்கார நடவடிக்கைகளைக்கூட்டிக் கொண்டு பலாத்கார அடக்கு முறையில் அக்கறையாயிருக்கின்றது.எமது கோரிக்கைகள் வலுப்பெறும்போது அடக்குமுறை பயங்கரவாதத்தை மட்டுமே அது பதிலாகத் தர விழைகின்றது.

அரசபலாத்காரமானது பதில் பலாத் காரத்துக்கே அதாவது அதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பயங்கரவாதம் எதிர் நடவடிக்கைக்கே மக்களைத் தள்ளும். கடைசியாக எமக்கும் அரசுக்குமிடையிலான பிரச்சினைக்குப் புத்தியான முடிவெடுப்புக்கு அரசு ஆயத்தம் இல்லையேல் எமக்கிடையிலுள்ள பிரச்சினை நிச்சயம் பலாத்காரத்தினால் தீர்த்துவைக்கப்படும்."

எத்துணை நெஞ்சழுத்தம் வேண்டும் அரசை அப்படி அதனது நீதி மன்றத்திலேயே சவால்விட்டு எச்சரிக்க என்று எண்ணிப்பார்க்கையில் தமிழீழத் தீர்மானமும் இப்படிப்பட்ட துணிவினடிப்படையிலானதே என்பது புலப்படவில்லையா என்ன!

சுதந்திரத்திற்காகக் குரலெழுப்புகின்ற மக்கள் மற்றவரின் சுதந்திரத்தைப் பறிப்பதையல்ல மதிப்பதையே கொள்கையாகக் கொண்டிருப்பார்கள்.மற்றவரின் சுதந்திரத்தின்பால் பொறாமை கொள்ளாமை என்ற மிக உயர்ந்த பண்பை அவர்கள் தயங்காமல் கடைப்பிடிப்பார்கள். தங்களுக்குரியதைத் தா அல்லது பறித்தாவது அதை எடுத்துக் கொள்வேன் என்றே உரிமைக் குரலின் இலக்கணம் விளங்கும். இதைத்தான் நெல்சன் மண்டேலா செய்து காட்டினார்.

இலங்கைத் தீவிலே 1995ம் ஆண்டு மணலாறு என்ற இடத்தில் போராளிகளுக்கும் சிங்கள இராணுவத்துக்குமிடையில் இடம்பெற்ற மோதலொன்றின்போது பல பெண் போராளிகள் பலியாகிப் போனார்கள். அவர்களின் உடல்கள் சிங்கள இராணுவத்தினரின் கைகளில் சிக்கி விட்டன.அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா?

அந்த வெறிபிடித்த ஓநாய்களின் செயலை எழுதவே கரம் நடுங்குகின்றது. மனம் கொழுந்து விட்டுப் பற்றியெரிகின்றது. இதைப்படிக்கும் சகோதரனே! சகோதரியே! இந்த இடத்தில் உங்களை நிறுத்திவைத்துப் பாருங்கள். உங்கள் உடன் பிறந்த சகோதரியர்க்கு அப்படி நடந்திருந்தால்? என்று வினாவெழுப்பி பதில் தேடுங்கள். அப்போதுதான் உங்களுக்காக உயிர் கொடுக்கும் அந்தப் புண்ணியவதிகளின் தியாகத்தைப் பற்றி ஒரிரு சதவீதமெனினும் உங்களுக்குப் புரியும்.

சவமாகக் கிடந்த அந்தப் பிஞ்சுகளின் ஆடைகளைக் கிழித்து நிர்வாணமாக்கி~ சிதைத்துச் சின்னாபின்னப்படுத்தி ஆரவாரமிட்டுக் குதித்துக் கும்மாளம் போட்டதோடு நில்லாமல் பத்திரிகையாளர்களை அழைத்து அந்த அவமானகரக் காட்சியைப் படமெடுக்கவும் வைத்தார்கள் சிங்கள இராணுவத்தினர்.

அதுமட்டுமல்ல அந்த உடல்களைக் கையளிக்கும் வேளையில் கத்தியால் குத்திக் கிழித்தும் அசிட் கொட்டியும் அலங்கோலப் படுத்தி~ கசாப்புக் கடையில் கொத்தி வைக்கப்பட்ட இறைச்சித் துண்டங்களாய் புலிகள் வசம் கையளித்தார்கள். அவற்றைப் பொறுப்பேற்ற போராளிகளின் இரத்தம் எப்படிக் கொதித்திருக்கும்? அன்போடே சகோதரங்களாய்க் கூடிநின்று~ தலைவன் கருத்தைச் செயற்படுத்த எத்துணை உற்சாகத்துடன் அவை கூவிநின்ற குயில்களாய்ப் பாடிநின்று பகைவெல்லப் புறப்பட்டோடிப் போயிருந்திருக்கும்?

மண்ணுக்காய்ப் புண்பட்டு மறைந்ததைப் பொறுத்திடலாம். மாற்றானின்

www.tamilarangam.net

விலங்குக் கரங்களில் மறைந்தபின்பும் மானபங்கப்படுவதென்றால்?இந்த இழிவான செயலை ஏன் அவர்கள் செய்தார்கள் தெரியுமா? அவர்கள் மற்றவர்களின் நிலத்தை~உரிமையை~நாட்டைப் பறித்திடும் எண்ணங் கொண்ட ஆக்கிரமிப்பாளனின் இயந்திரங்களென்பதால்தான். அந்த மனிதவுருவங்கள் மனிதர்களல்லர்~ அரக்கர்கள்.

அதற்குத்தான் முல்லைத்தீவில் வீராங்கனைகளின் போரணிகள் வெற்றிலையைச் சுவைத்துத் துப்புவது போல எதிரியின் ஆயுதபலத்தை நொறுக்கித் தம் சகோதரர்களுடன் தோள் கொடுத்து களம் வென்று பதில் கொடுத்தார்கள்.
சரித்திரம் திருத்தியெழுதப்பட்டது. அவன் கை ஆயுதமே அவனை அழிக்க அள்ளியெடுக்கப்பட்டது.

அன்று மணலாற்றில் மாற்றான் செய்து காட்டிய ஈனச் செயலுக்குப் பதிலாக முல்லையில் வென்ற வீரர்கள் பதில் செய்ய நினைத்திருந்தால் எப்படியெல்லாம் செய்திருக்கலாம்?
ஆனால்...
செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒரு பெண் போராளியின் பொறுப்பிலேயே இராணுவ வீரர்களின் சடலங்கள் ஒழுங்கான முறையில் ஒப்படைக்கப்பட்டனவாம். இது எதைக் காட்டுகின்றதென்றால் ஒரு விடுதலை வீரனின் செயற்பாடு அவனது சிந்தனையில் தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது என்பதைத்தான்.

மரியாதையுடன் கையளிக்கப்பட்ட உடல்களை அதுவும் தமக்காகக்களம் சென்ற சொந்த இராணுவத்தையே பொறுப்பேற்க மறுத்தொளிந்து கொண்ட ஆக்கிரமிப்பாளனின் மனநிலையோடு பழிவாங்க வழியிருந்தும் கடமை முடிந்ததும் தம் பணியைச் சரியே செய்யும் விடுதலைப் போராளியின் மனநிலையையும் ஒப்பிட்டால் அவன் கொல்வதற்காகவே கொல்லுகின்றான் இவன் தன்னைக் காப்பதற்காகவே கொல்லுகின்றான் என்பது தெளிவாகப் புரியும்.இதனைச் சரியாகத் தெளியாதவருக்கு பயங்கரவாதம் என்பது வெறும் பத்திரிகையில்வாசித்துப்பழகிவிட்ட சொல்லாகமட்டுமே தெரியும்.அல்லவா!

## சுதந்திரப் பாதை இப்படித் திறந்தது.

தென்னாபிரிக்க அரச பயங்கரவாதத்துக் கெதிரான பதில் நடவடிக்கைக்கு ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் சிறப்பான வழிகளைப் பின்வருமாறு அமைத்து செயற்பட்டது.
நாசவேலைகள்
கெரில்லா போர்முறை
பயங்கூட்டு நடவடிக்கைகள் (Terrorism)
வெளிப்படையான ஆயுதப்புரட்சி

தென்னாப்பிரிக்கா வெளிநாட்டு முதலீடுகளிலும் வெளிநாட்டு வர்த்தகங்களிலுமே மிகவும் தங்கியிருந்ததால் முதல் படியாக திட்டமிடப்பட்ட விதத்தில் மின்வழங்கிகள்~புகையிரதப்போக்குவரத்துக்கள்~ தொலைத் தொடர்புகள் இவற்றை நாசப்படுத்துவதன் மூலம் தலைநகருடன் இதர பிரதேசத் தொடர்புகளைத் துண்டிப்பதும் அதன் மூலம் கைத்தொழில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பகுதிகளிலிருந்து குறிப்பிட்ட விதத்தில் ஏற்றுமதிக்கான பொருட்கள் வந்தடையாமல் தடுத்துவிடுவதும் இதன் தொடர்ச்சியினால் பாரிய பொருளாதாரத் தொய்வினை ஏற்படுத்துதலும் இப்படியான செயற்பாடுகளின் விளைவினால் வாக்குரிமை பெற்ற மக்களினது சிந்தனையில் தாக்கத்தையேற்படுத்தி தேசத்தின் அப்போதைய நிலைமையில் மாற்றமேற்படத்தக்கதான முடிவெடுக்கத் தக்க சூழ்நிலையை உருவாக்கவும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் நோக்கமிருந்தது.

பொருளாதார சம்பந்தமான இடங்களின் மேல் நாசவேலை நடிவடிக்கைகளைத் தொடுப்பதில் அரச கட்டிடங்கள்மற்றும் வெள்ளைஇனவாதக் கொள்கைச் சின்னங்களைத் தாக்கியழிப்பதும்கூட அங்கீகரிக்கப்பட்ட குறிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

அப்படியான தாக்குதல்கள் மக்கள் மத்தியில்அந்த இயக்கத்துக்கு நல்ல அபிப்பிராயத்தினை ஏற்படுத்தித் தரும் என்று நம்பப்பட்டது. அது மட்டுமல்ல அப்படியான தாக்குதல்களின் தாக்கமானது அரச அங்கத்திலுள்ள பலாத்கார விரும்பிகளைத் தூண்டிவிடவும் அதன் பிரதிபலனாக எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் கொண்டு தமது பலத்தின் பிரதிபலிப்பாகவே அரசு அஞ்சி இவ்வளவு தூரம் கடும் நடவடிக்கைகளை எடுக்கின்றது என்ற கருத்தைத் தம்மைப் பின்பற்றுவோர் மத்தியில் விதைத்து அதன் மூலம் அரச பயங்கரவாத எதிர்ப்பு அணியை பலப்படுத்த நம்பிக்கை ஏற்படுத்திக் கொள்ளவும் முடிவு செய்தது.

அதுமட்டுமல்ல பெரிய நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு சரியான விதத்தில் எடுக்கப்பட்டு அதற் கெதிராய் அரசு எடுக்கும் நடவடிக்கையும் மிகத்தீவிரமாக அமைந்துவிட்டால் தமது நோக்கம் பரந்த அளவில் வெளிவரவும் அதன் பலனாக இதர நாடுகளின் வற்புறுத்தலும் அழுத்தமும் வெள்ளையரசுக் கெதிராக உருவாகவும் வாய்ப்பு ஏற்படும் எனக் கருதப்பட்டது.அப்படியாக உருவாகும் அலைதாப அலை மிகச் சாதகமான சூழ்நிலையை நிச்சயம் பெற்றுத் தரும் என ஆ.தே.காங்கிரஸ் மிகவும் உறுதியாக நம்பிச் செயல்பட்டது.
இதிலும் கூட ஒரு நியதியை அவர்கள் வகுத்தார்கள்.அதாவது எந்த நடவடிக்கையினாலும் மக்களெவரும் காயப்படவோ கொல்லப்படவோ கூடவே கூடாது எனக் கண்டிப்பாகக் கட்டளையிடப்பட்டது.

ஆனால் அவர்களது நடவடிக்கைகளின் அனுபவம் வேறுவிதமாக இருந்தது அரசு மக்களுக்கெதிரான அதாவது கறுப்பினத்தவர்களுக்கெதிரான நடிவடிக்கைகளை மிகக் கொடிய விதமாக எடுக்கத் துவங்கியது.ஆடு மாடு

கோழி பன்றிகளை விட மலிவான பொருட்களாக விடுதலைக்காகக் குரலெழுப்பிய மக்களை அது கணித்தது. எங்கும் இரத்த ஆறு ஓடத் தொடங்கியது. அடக்கு முறையின் அத்து மீறலுக்கு அரசின் துணையிருந்தால்நீதியாவதுமண்ணாங்கட்டியாவது!

1983ம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில்.....
கைதிகள் அதுவும் சுதந்திரக் காற்றுக்காக மூச்சுவிடவேமுடியாத நிலையில் அடைபட்டுக் கிடந்த குட்டிமணி போன்ற
எத்தனை உயிர்கள் அங்கமங்கமாகப் பிய்த்தெறியப்பட்டு அகிம்சா

— தொடர்ச்சி 3ஆம் பக்கம் —

www.tamilarangam.net

# பரிகாரம்



மூன்றாவது பரிசுபெற்ற சிறுகதை.

மா. தியாகேஸ்வரன்.

நேற்று மாலை ஆனந்தியுடன் மனந்திறந்து பல விஷயங்களைப் பகிர்ந்து கொண்டது ஆனந்தமாக இருந்தது அரவிந்தனுக்கு.
பளிச்சிடும் அந்தப் பல்வரிசை, அந்தக் குரலினிமை, எதையும் ஒளிவு மறைவின்றி திறந்த மனத்துடன் வெளிப்படையாகப் பேசும் சுபாவம், கள்ளங் கபடமற்ற அந்தக் குழந்தை உள்ளம், எல்லாமே அவனுக்கு அவள் பால் ஒரு நிறைந்த ஈர்ப்பை ஏற்படுத்திருந்தது.

இந்த ஆறுமாத காலத்தில் எத்தனையோ தடவைகள் அவளைச் சந்தித்திருப்பான். ஒவ்வொருசந்திப்பிலும் அவன்மனத்தில் அவள் கோபுரமாக உயர்ந்துகொண்டே போனாள். விதி அவள் வாழ்வில் கொடூரமாக விளையாடியிருந்த போதும் எப்படி இந்தப்பெண் கவலையின் சுவடே தெரியாமல் சிரித்துக் கொண்டு பேசுகிறாள் என்பதை எண்ணி பலதடவை வியந்து போயிருக்கிறான் அரவிந்தன். நேற்றைய சந்திப்பு அவன் மனத்தில் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கத் தூண்டியது.

ஆனந்தியைச் சந்தித்த கையோடு வீட்டுக்கு வந்ததும் நேற்றிரவு அம்மாவுக்கு அவசர அவசரமாக ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தான்.
அந்தக் கடிதத்தை கொஞ்சம் மாற்றியோ திருத்தியோ எழுதினால் என்ன என்ற நினைப்பில் மீண்டும் அந்தக் கடிதத்தை எடுத்து நிதானமாகப் படிக்கிறான் அரவிந்தன்.

என் உயிரினும் மேலான அம்மாவுக்கு!

அம்பாள் கிருபையால் நான் நலமேயுள்ளேன். உங்கள் சுகத்திற்கும் அம்பாள் அருள் புரிவாளாக. தவிர்க்கமுடியாத போர்ச் சூழல் காரணமாக அளவெட்டியில் இருந்து குடிபெயர்ந்து கோண்டாவில் பக்கம் ஒரு வீட்டில் குடியிருப்பதாக எழுதியிருந்தீர்கள்.
எங்கே இருந்தாலும் நீங்கள் பாதுகாப்பாக சந்தோசமாக வாழ அம்பாளை வேண்டுகின்றேன்.அம்மா. உடல்நிலையைக் கவனமாகப் பேணவும் ஊன்று


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோல்கள் நல்ல நிலையில் உள்ளனவா? பழுதுபட்டிருந்தால் புதிதாக ஒருசோடி வாங்கவும். மழைக்காலம் வழுக்கும். கூடியளவு வெளியே நடமாடுவதைத் தவிர்த்தால் நல்லது.

அம்மா, இப்போ இந்தக் கடிதத்தை அவசரமாக எழுதுவதற்கு முக்கிய காரணம் ஒன்று உண்டு. இரண்டுமாதங்களுக்கு முன்னர் நீங்கள் எழுதிய கடிதத்தில் "தம்பி! உனக்கும் இருபத்தியேழு வயதாகின்றது. ஜேர்மனியில் உனக்குப் பிடித்த பெண் யாராவது எங்கள் சாதி சனத்தில் இருந்தால் கூச்சப்படாமல் எழுது. நாங்கள் ஆகவேண்டியதைப் பார்த்துச் செய்வோம்...." என்று எழுதியிருந்தீர்கள்.

அம்மா! நான் எழுதப்போகும் விபரத்தை அமைதியாகவாசித்து உங்கள் ஆதரவானபதிலை விரைவில்தாருங்கள் என்று அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

அம்மா. ஆனந்தி என்று இங்கே ஒரு பிள்ளை. நான் இருக்கும் இடத்தில் இருந்து கிட்டத்தட்ட நாற்பதுமைல் தூரத்தில் சொந்தக்காரருடன் இருக்கிறாள். யாழ்ப்பாணத்தில் அராலி என்ற ஊரைச் சேர்ந்தவள். நீங்கள் எதிர்பார்க்கும் நல்லசாதிசனத்தில் உள்ளவள்தான். நன்றாகப் படித்தவளும்கூட. வயது இருபது. நன்றாகப் பாடுவாள். பார்வைக்கு அழகானவள். நல்ல குணம் அழகு எல்லாம் இருந்தும் வெளிப்பார்வைக்கு ஒரேயொரு குறை. இரண்டு கால்களும் அவளுக்கு ஊனம். சக்கர நாற்காலியில் உட்கார்ந்த நிலையில்தான் கடந்த நான்குவருடங்களாக அவளது வாழ்க்கைச் சக்கரம் சுழல்கிறது. எங்கள்நாட்டில் நிகழ்ந்துகொண்டிருக்கின்ற போர்தான் அவளது கால்களையும் ஊனப்படுத்தியது. அம்மா நான் எடுத்திருக்கும் இந்த முடிவை எண்ணி அதிர்ச்சி அடையமாட்டீர்கள் என்று நம்புகின்றேன். இருபது வருடங்களுக்கு முன்னர் எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து நான் இன்னும் முற்றாக விடுபடவில்லை. பிஞ்சு மனத்தில் பதிந்துவிட்ட அந்தக் கொடூரமானசம்பவம் என் மனதில் மாறாத வடுவாக ஆழப் பதிந்து விட்டது. அதற்கு இது ஒரு பரிகாரம்! அம்மா அவள் நிலை கண்டு அவள் மீது பரிதாபப்பட்டோ பெரிதாக ஒரு தியாகம் செய்து தியாகி என்ற பட்டத்துடன் அவளுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்றோ நான் அவளை நாடவில்லை. ஆனந்தியை மனப்பூர்வமாக எனக்குப் பிடித்திருக்கின்றது. அவள் அங்கக் குறைவுள்ளவள் என்று என்னால் எண்ணிப்பார்க்கவே முடியவில்லை.

வாழ்ந்தால் அவளுடன்தான் வாழ்வது என்று முடிவெடுத்து விட்டேன். நீங்கள் என்னைப் பெற்றெடுத்த தாய். என் எண்ணம் மனோநிலை எல்லாமே உங்களுக்குப் புரியும் நான் எடுத்திருக்கும் இந்த முடிவுக்கு தியாகம் என்று பேர்சூட்டுவதைவிட பரிகாரம் அல்லது பிராயச்சித்தம் என்று சொன்னால் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

அம்மா! எனது விருப்பத்திற்கு உடன்பாடாக சாதகமான பதில் உங்களிடமிருந்துவரும் என்ற உறுதியானநம்பிக்கையுடன் தங்கள் அன்பான பதில் காண ஆவலுடன் காத்திருக்கும்

அன்பு மகன்.
அரவிந்தன்.

கடிதத்தை ஆறுதலாகப் படித்த அரவிந்தனுக்கு தான் எழுதியது மிகவும் திருப்திகரமாகவே இருந்தது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடிதத்தை மடித்து தபால் உறையிலிட்டு விலாசமாற்றத்தை அந்தப் புதிய முகவரியைத் தெளிவாக எழுதிக்கொண்டு அருகில் இருந்த தபாற் கந்தோரை நோக்கி விரைந்தான்.
எப்படியும் மூன்று நான்கு வாரத்துக்குள் அம்மாவிடமிருந்து பதில் வரவேண்டுமென்பதற்காக எக்ஸ்பிரஸ் கடிதமாக அனுப்புகின்றான்.
கடிதத்தை அம்மாவுக்கு அனுப்பியதும் மனதிலுள்ளபாரம் ஏதோ குறைந்தாற் போலிருந்தது.
நேரத்தைப் பார்த்தான்.
இந்த வாரம் அவனுக்கு இரவு வேலை. கொஞ்சம் கண்மூடினால் சுகமாக இருக்கும் என்ற நினைப்பில் ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு வந்தான். மேசையில் இருந்த யூஸை எடுத்துக் கொஞ்சம் குடித்துவிட்டு கட்டிலில் சரிந்து படுத்தவன் எதிரே மாட்டப்பட்டிருந்த அம்மா அப்பாவின் கல்யாணப் போட்டோவைப் பார்க்கின்றான்.
இருபத்தைந்து வயதிலே விதவையாகிப் போனவள் அவன் தாய்.
அவனுக்கு மூன்றுவயதாக இருக்கும்பொழுது பொல்லாதநோயொன்று வந்து அப்பாவை அள்ளிக்கொண்டுபோனது பற்றிக் கதை கதையாகச் சொல்லிக் கவலைப்பட்டிருக்கிறாள். அப்பாவின் அழகுமுகம் போட்டோவைப் பார்த்துத் தான் அவனுக்குத் தெரியும். அதன் அருகில் அண்மையில் அனுப்பியிருந்த அம்மாவின் புகைப்படத்தை சற்றுப் பெரிதாக்கி வைத்திருக்கின்றான்.
ஊன்றுகோல்களுடன் சற்றுத்தளர்ந்த நிலையில்...
அவன் மனம் ஊமையாய் அழுதது.
எப்படியிருந்த அம்மா... என்னால்தானே இப்படி...?
அவனது மனம் இருபது வருடங்களுக்கு முன் தாவுகிறது.

அப்பொழுது அரவிந்தனுக்கு ஏழு வயது இருக்கும். படுசுட்டிப் பையன். பயங்கரப்புரளி. அவனைத் தினம் பள்ளிக்கனுப்பி வைப்பதே அவன் தாய்க்குப் பகீரதப் பிரயத்தனம்.
வழமைபோல் ஒரு நாள் காலை. மழை தூறிக்கொண்டிருந்தது. ஒரு கையில் குடை. மறுகையால் தன் ஒரே செல்வம் அரவிந்தனைப் பிடித்தபடி பள்ளிக்கூடத்தை நோக்கி பிரதானவீதியால் சென்றுகொண்டிருந்தபோதுதான் நிகழ்ந்தது அந்தப் பயங்கரம்.
ஒழுங்காக நடந்து வராமல் தெருவில் தேங்கி நிற்கும் மழைநீரைக் காலால் அழைவதும் சிதறுவதுமாக அங்குமிங்கும் அலைந்தவனை அடக்கி அணைத்தபடி வந்துகொண்டிருந்தபோது தெருவின்மறுபக்கத்தில் பந்து ஒன்றைக் கண்டுவிட்டு திடீரெனத் தாயின் கையை உதறிவிட்டு ஓடியவன் எதிர்ப்பக்கமாக பயங்கரவேகத்தில் வந்துகொண்டிருந்த லொறியைப் பார்த்துப் பதறிப்போய்நிற்க, அவன் தாய் பாய்ந்துபோய் அவனை இழுத்துத் தள்ளிவிட்டாள்.
ஐயோ...என்ற சப்தம் அமுங்கி அடங்கிப்போகிறது. மறுகணம் அவன் தாய் இரத்த வெள்ளத்தில். லொறியின் அரக்கத்தனமான சக்கரங்கள் அவள் கால்களின் மீதேறி தாண்டிப்போய் நிற்கிறது. அந்தக் கோரக் காட்சியைக் கண்டு நிலைகுலைந்துபோகிறான் அரவிந்தன்..
அவனால் அழக்கூட முடியாமல் அதிர்ந்துபோய் நிற்கின்றான்.
கூட்டம் கூடுகிறது.
அம்புலன்ஸ் வண்டியில் அவன் தாயை ஏற்றிச்சென்ற காட்சியைக் கண்டு

www.tamilarangam.net

உறைந்துபோகின்றான் அந்தச் சின்னஞ்சிறுவன். கூட்டத்தில் ஒரு பெரியவர் அவனை ஆதரவாக அணைத்துக் கொள்கின்றார்.
'அம்மா செத்துப்போனாவோ?...அம்மாவை எங்கினை கொண்டு போகினம்? நானும் அம்மாவோடை போகப்போறன்...' என்று கேவிக்கேவி வெம்பி அழுத நினைவுகள் அவன் மனதில் பசுமையாகப் பதிந்திருக்கின்றது. யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் கடுமையான சத்திரசிகிச்சைக்குப் பின் அவன் தாய்க்கு நினைவு திரும்பியபோது வலதுகால் முழங்காலுக்குக்கீழ் வெறுமையாக இருந்ததை அந்த ஏழுவயதுப் பாலகன் கண்டுகொள்ளவில்லை. 'அம்மா சாக இல்லை...என்னைப் பார்த்துச் சிரிச்சவ...என்னைக் கட்டிப்பிடிச்சுக் கொஞ்சினவ...' என்று தாயைப் பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்ததும் தனது சிற்றன்னைக்குச் சொல்லித் திருப்திப்பட்டு மகிழ்ந்ததை நினைத்துப் பார்க்கிறான்.

சிற்றன்னையுடன் இடையில் ஒருநாள் யாழ்வைத்தியசாலைக்குச் சென்று தன் தாயைப் பார்த்தபோதுதான் அம்மாவுக்கு அரைவாசியோடு ஒரு கால் இல்லை என்ற விபரம் தெரியவந்து விறைத்துப்போகிறது அந்தக் குழந்தை உள்ளம்.
ஊன்று கட்டைகளுடன் மெல்லமெல்ல நடந்துவந்து, கட்டிலில் சிற்றன்னையின் உதவியுடன் மெல்லச் சரிந்து படுத்து அவனை வாஞ்சையுடன் பார்த்துச் சிரித்தபோது அவனால் பதிலுக்குச் சிரிக்க முடியவில்லை.
'ஓ' என்று அந்தக் குழந்தை உள்ளம் அழுதது. அவனை அருகில் இருத்தி அவன் தலையை ஆதரவாகக் கோதியபடி,
'என்ன ராசா சாப்பிட்டனி... சித்தி பிள்ளைக்கு குழல்பிட்டு அவிச்சுத் தாறவளே?' என்று அவனைப் பரிவுடன் கேட்டபொழுது அவனால் பீறிட்டுவந்த அழுகையை அடக்க முடியவில்லை.
'என்னாலைதான் அம்மாவுக்கு கால் இல்லாமல் போனது' என்று கூக்குரலிட்டு அழ ஆரம்பித்தவனை ஆசுவாசப்படுத்தி அமைதிப்படுத்த யாராலும் முடியவில்லை. அந்த வாட்டில் இருந்த அத்தனை பேரின் கண்களும் அந்தச் சிறுவன்மேல் நிலைகுத்தி நின்றன.

காலச்சக்கரம் 'வேகமாகச் சுழன்றபோது அரவிந்தனுக்கு வயது பதினெட்டு. ஊன்றுகோல்கள் கனகம்மாவுக்குப் பழக்கப்பட்டுப் போயின. கிணற்றில் தண்ணீர் எடுப்பதைத்தவிர, சகல வீட்டுவேலைகளையும் லாவகமாகச் செய்யப் பழகியிருந்தாள்.
அரவிந்தனுக்கு மட்டும் தன்னால்தான் தாய் ஊனமுற்றாள் என்ற எண்ணம் ஒரு குற்ற உணர்ச்சி அவன் மனத்தில் ஆணி அடித்தாற்போல் ஆழமாகப் பதிந்திருந்தது. 'நொண்டிக் கனகம்மாவின் பெடியன்' என்று யாராவது சொல்லும்போது அவன் நெஞ்சைக் குத்திக் கிழிப்பதுபோல் இருக்கும் அந்த வார்த்தை. 'எல்லாமே என்னால்தான்' என்று அவன் தன்னை நொந்துகொள்ளும்போது 'போடா விசர்ப்பெடியா... என்ரை விதி நான் லொறியிலை மாட்டுப்பட்டன்... நீ ஏன் ராசா அதையே நினைச்சுக் கவலைப்படுறாய்... பழங்கதை... பத்து வருசமாகுது... இன்னும் அதையே நினைச்சுக் கொண்டு... விசர்ப் பெடியன்...' என்று அவனைத் தேற்றி அந்தப் பயங்கர விபத்தையே ஒரு அலட்சியபாவத்துடன் அவள் சொல்லும்பொழுது,

www.tamilarangam.net

என் உயிரைக் காப்பாற்றுவதற்காக தன் உயிரையே அர்ப்பணிக்க முன்வந்த அந்தத் தெய்வத்தைப் பார்க்கமுடியாமல் அவன் கண்கள் குளமாகிவிடும். தன்னால் ஊனப்பட்ட தன் தாயைக் கடைசிவரை கண்போலக் காத்து அவளுக்கு சேவை செய்வதையே தன்வாழ்வின் லட்சியமாகக் கொண்டிருந்தான் அரவிந்தன்.

நாட்டு விடுதலைக்காக, தமிழ் ஈழ மண் மீட்புக்காக, இளைஞர் படை அணி திரள, அரச இராணுவத்துடன் தொடுத்த போர் பயங்கர விசுவரூபம் எடுத்தபோதுதான் பதினெட்டு வயதான தன் ஒரே செல்வப் புதல்வன் அரவிந்தனை எண்ணிப் பதறினாள் கனகம்மா. அரச படைகள் ஆங்காங்கே இளைஞர்களைப் பிடித்துக்கொண்டு போவதும் சித்திரவதை செய்வதும் சுட்டுத் தள்ளுவதுமான செய்திகள் அவள் காதுகளுக்கு எட்டியபோது, என் பிள்ளையைக் காப்பாற்றவேண்டும்...என் ஒரே குலக்கொழுந்து என் கண்ணெதிரேஇருக்காவிட்டாலும் பரவாயில்லை...எங்கேயாவது கண்காணாத தூரத்தில் சந்தோசமாக நிம்மதியாக வாழட்டும்...என்ற எண்ணத்துடன் ஒரு நாள் அவனை அணைத்தபடி ஆதரவாக அவள் சொன்ன வார்த்தைகள்—

'தம்பி அரவிந்! ...நான் உனக்காகத்தான் ராசா உயிர் வாழுறன்... உனக்கு ஏதும் ஒண்டெண்டால்... நான் தாங்கமாட்டன் அப்பு... நீ எங்கையாவது வெளிநாட்டுப் பக்கம் போய் நிம்மதியா இரடா என்ரை ராசா... நாட்டுப் பிரச்சினை தீரயிக்கை நாங்க சந்திப்பம்... அதுவரைக்கும் நான் உயிரோடை இருப்பன் எண்ட நம்பிக்கை எனக்கு இருக்கு...' என்று அவன் தாயார் உருக்கமாகச் சொன்னபோது அவன் அழுதேவிட்டான்...

'என்னம்மா நீங்கள் சொல்லுற கதை.. உங்களுக்கு நான்தான் ஒரேயொரு பிள்ளை... உங்களைத் தனிய விட்டுட்டு நான் எப்படியம்மா வெளிநாட்டுக்குப் போறது?'

'நான் தனிய இல்லை ராசா. சித்தி இருக்கிறாள்... சித்தப்பா இருக்கிறார்... சித்தியின் பிள்ளையள் உன்ரைசகோதரங்கள் மாதிரித்தானே... அவை என்னை வடிவாப் பார்ப்பினம்... எனக்கொரு குறையில்லை ராசா... நீ சந்தோசமாப் போயிட்டு வா கொப்பற்றை விருப்பம்மாதிரி உன்னை ஒரு டாக்குத்தராக்க வேணுமெண்டுதான் நான் கனவு கண்டன். இந்த நாட்டுச் சீர்கேட்டாலை அது முடியேல்லை... நீ போற இடத்திலையாவது நல்ல மாதிரிப் படிச்சு நல்லாவருவாய் எண்ட நம்பிக்கை எனக்கு இருக்கு... எங்கை இருந்தாலும் நீ நேர்மையான பிள்ளையா ஒழுங்கான பிள்ளையா நடக்க வேணும் ராசா!' என்று புத்திமதி சொல்லி தன்னை நிர்ப்பந்தப்படுத்தி வலுக்கட்டாயமாக ஜேர்மன்நாட்டுக்கு அனுப்பிவைத்த தன் அன்புத் தெய்வத்தின் உருவப் படத்தை கண்ணீர்மல்கப் பார்க்கிறான். தாய் சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளும் இப்போதும் அவன் காதுகளில் எதிரொலிக்கின்றன.

அளவெட்டிக் கிராமத்தில் குழந்தையாக அவன் ஓடித்திரிந்து குமரனாகிய காலம்வரை, சஞ்சரித்த அந்தக் கடந்தகால நினைவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தபோது, இங்கே ஜெர்மன் நாட்டுக் கடிகாரம் மாலை ஆறுமணியை நெருங்கிக்கொண்டிருந்தது. அவசர அவசரமாக எழுந்து, முகத்தை அலம்பிக்கொண்டு வேலைக்குப்புறப்படத் தயாரானான் அரவிந்தன்.

இரண்டு வாரங்கள் பறந்தோடுகின்றன.

அது ஒரு சனிக்கிழமை. அவனுக்கு அது லீவு நாள். வீட்டில் ஆறுதலாக

www.tamilarangam.net

இருந்து கொண்டு சிந்திக்கிறான். 'அம்மா கடிதத்தை வாசித்திருப்பா... அதற்கான பதிலும் எழுதிப் போட்டிருப்பா... எப்படியும் இன்னும் ஒரு வாரத்திற்குள் பதில் வரும்..' என நினைத்துக்கொண்டு கீழே இறங்கி கடிதப் பெட்டியைப்பார்த்த அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. விமானத்தபால் ஒன்று கோண்டாவிலில் இருந்து வந்திருந்தது.'எப்படி இவ்வளவு சீக்கிரம்... ஒருவேளை நான் போட்டு கடிதம் கிடைக்கு முன்னரே அம்மா ஏதாவது அவசர பணத்தேவைக்காக எழுதிப்போட்டதாக இருக்குமோ?' என்ற நினைப்பில் பரபரப்புடன் கடிதத்தைப் பிரித்த அவனுக்கு ஆச்சரியம்.

அவன்போட்ட கடிதத்துக்கு பதில் கடிதம்தான் அது. ஒருவித பரபரப்புடன் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

அன்பு மகன் அரவிந்தனுக்கு!

வீட்டில் சித்தி உட்பட அனைவரும் அம்பாள் அருளால் நலமேயுள்ளோம். உன் கடிதத்தைப் பார்த்து நான் அழுதுவிட்டேன். உன் விருப்பத்துக்குக் குறுக்கே நான் எப்பொழுதும் நிற்க மாட்டேன். அந்தப் பெண் ஆனந்திக்கு நீ வாழ்வுகொடுப்பதைவிட்டு எனக்கு மட்டுமல்ல இங்கே சித்தி குடும்பத்தினருக்கும் மிகுந்தமகிழ்ச்சி. என்ரை ராசா உன்னைப் பிள்ளையாய்ப் பெற்றது நான்செய்த பாக்கியம்.அதிகம் எழுதவில்லை. கொழும்புக்கு வரும் சித்தப்பாவிடம் இந்தக் கடிதத்தைக் கொடுத்துவிடவேண்டும் என்று அவசரமாக எழுதுகின்றேன். திருமணத்தைத் தள்ளிப்போட வேண்டாம். உடனடியாக ஒரு நல்லநாளைப் பார்த்து ஆகவேண்டியதைச் செய். உவ்விடமும் ஒரு அம்மன் கோயில் இருப்பதாக முன்பு ஒரு கடிதத்தில் எழுதியிருந்தாய்... அம்மன் கோயிலில் வைத்து தாலிகட்டினால் சிறப்பாக இருக்கும். எல்லா ஒழுங்குகளையும் பார்த்துவிட்டு உடன் கடிதம் போடு. அன்போடு உங்கள் இருவரையும் ஆசீர்வதிக்கும்

அம்மா

க. கனகம்மா.

கடிதத்தைப்படித்ததும் அரவிந்தனுக்குத் தலைகால்புரியாத மகிழ்ச்சி. கண்களில் ஒற்றிக்கொள்கிறான் கடிதத்தை.

உடனடியாக ஆனந்திக்கு போன்பண்ணி அம்மாவிடமிருந்து அனுகூலமான பதில் கிடைத்ததைச் சொல்லிமகிழ்கிறான்.

ஐயர் வீட்டுக்குப்போய் திருமணத்துக்கு ஏற்ற சுபதினங்களைக் குறித்துக் கொண்டு வருகிறான். ஆனந்தி வீட்டிலுள்ள பெரியவர்களுடனும் கலந்து யோசித்து, ஜனவரி பதினைந்தாம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுபநாளாகத் தீர்மானித்து, அம்மாவின் விருப்பப்படியே காமாட்சி அம்மன் கோவிலில் திருமணத்தை வைப்பதாக முடிவுசெய்து ஊரிலுள்ள அம்மாவுக்கும் அதை உடனடியாகவே தெரியப்படுத்துகிறான்..

மனதில் நிறைந்த பூரிப்புடன் கட்டிலில் மெல்லச் சரிந்து படுக்கிறான் அரவிந்தன். அவன் அன்புக்கினிய ஆனந்தியை முதன்முதலாகச் சந்தித்த நினைவுகள் அவன் மனதில் மெல்லச் சிறகடிக்கிறது.

அது ஒரு கலைவிழா!

மண்டப வாயிலில் நுழையும்போதே அந்தப் பெண்குரலின் இனிமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவனை வசீகரிக்கிறது. இனிமையான அந்தக் குரலுக்குரியவளை முழுமையாகப் பார்க்கவேண்டும் என்ற ஆர்வத்துடன் கூட்டத்தை விலக்கி முண்டியடித்துக் கொண்டு சென்றவனுக்கு ஒரு அதிர்ச்சி!
இனிமையான அந்தக் குரலுக்குரியவள் மேடையில் சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். தேச விடுதலைப் பாடல் ஒன்றை அனுபவித்து அற்புதமாகப் பாடிக்கொண்டிருக்கும் இந்த அழகிய இளம்பெண்ணுக்குக் கால்கள் ஊனமா?
அவனால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை.
பாடல் முடிந்ததைக்கூட அறியாமல் பிரமை பிடித்தவன்போல் நின்று கொண்டிருந்தவனை அறிவிப்பாளரின் குரல்தான் உசுப்பியது.
'தனது சுகவீனத்தையும் பொருட்படுத்தாமல் எங்கள் அன்பு வேண்டுகோளை ஏற்று மிகவும் அற்புதமாகப் பாடி எம்மையெல்லாம் மகிழ்வித்த செல்வி ஆனந்தி பத்மநாதன் அவர்களுக்கு எங்கள் இதயபூர்வமான நன்றிகள். கூடிய விரைவில் இவர் குணமடைய வேண்டும். இந்த இசைக்குயிலின் குரல் இன்னும் பல மேடைகளில் ஒலிக்க வேண்டும் என்று எல்லோரது சார்பிலும் வாழ்த்துகின்றேன்.' என்று அறிவிப்பாளர் கூறியதும் கரகோஷத்தால் அரங்கமே அதிர்ந்தது.
'ஆனந்தி..' அரவிந்தனின் உதடுகள் மெல்லமுணுமுணுத்தன.
சிறுமி ஒருத்தி வந்து அவளுக்கு முத்தமிட்டு மலர்ச்செண்டு கொடுத்தாள்
'இப்போ இடைவேளை... சிற்றுண்டிகள் மண்டப வாயிலில் உங்களுக்காகக் காத்திருக்கிறது' திரை மூடிக்கொண்டது அறிவிப்பாளர் சொன்னதும்.
அந்த இடைவேளைதான் அரவிந்தன் ஆனந்தியை முதன் முதலாகச் சந்தித்த சுபவேளை. சிற்றுண்டியைக்கூடப் புறக்கணித்துவிட்டு அவள்பெயர் ஆனந்தி என்பதையும் தெரிந்துகொண்டு அவளைச் சந்தித்துப் பேசவேண்டும் என்ற ஆர்வமிகுதியால் மேடையின் பின்புற அறைக்குச் செல்கிறான் அரவிந்தன்.

சில இளம்பெண்களுடன் கதைத்துச் சிரித்துக் கொண்டிருந்தாள் ஆனந்தி. தயங்கித்தயங்கி அருகில்சென்ற அரவிந்தன் சுருக்கமாகத் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு "எனக்கு இசை என்றால் உயிர்! உங்களோடு கொஞ்சம் பேசவிரும்புகிறேன்" என்றான்.
"தாராளமாக" என்று சொன்னவள் அவனைப் பார்த்துப் புன்னகைத்து அருகில் இருந்த கதிரையில் அமரச்சொல்கிறாள். கூடிநின்ற பெண்கள் சற்று விலகிச் செல்கின்றனர்.
"உங்கள் பாட்டு உண்மையிலேயே அற்புதமாக இருந்தது. நல்ல குரல் வளம்... வெரி நைஸ் வொயிஸ்..."
"தாங்க்ஸ்..உங்கள் பாராட்டுக்கு நன்றி!" என்றாள் புன்னகைத்து.
"இசையை முறைப்படி கற்றுக்கொண்டிருப்பீர்களென நினைக்கிறேன்..."
அவளது அழகுமுகத்தை ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டே கேட்டான்.—
"சங்கீதத்தை ஒரு நல்லகுருவிடம் ஊரில் முறைப்படி கற்றுக் கொண்டுதான் இருந்தேன்.. இடையில் ஏற்பட்டவிபத்து என்னை ஊமையாக்கிவிட்டது... பிரெண்ட்ஸ் வற்புறுத்தினபடியால் இன்று இந்தக் கலைவிழாவில் பாட ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இனிமேல் பாடும் எண்ணம் எனக்கு இல்லை.' என்றாள் ஒரு விரக்தியான சிரிப்புடன்.
"பிளீஸ்... டோன்ற் மிஸ் அண்டஸ்ராண்ட்...! உங்களுக்கு ஏற்பட்ட விபத்து

www.tamilarangam.net

எப்படி...? என்ன நடந்ததென்பதை நான் அறிந்து கொள்ளலாமா?" என்றான் ஒருவித தயக்கத்துடன்.
ஒரு நீண்ட பெருமூச்சொன்று அவளிடமிருந்து வெளிப்பட்டது.
அந்த அழகிய முகத்தில் கவலையின் ரேகைகள்.
"உங்களுக்குச் சங்கடமாக இருந்தால் விடுங்கள்..பரவாயில்லை..." என்றவனை இடைமறித்து "இல்லையில்லை... நான் சொல்கிறேன்..." என ஆரம்பித்தாள்.

வீட்டு முற்றத்தில் சகோதரியுடன் விளையாடிக்கொண்டு நின்றபோது எங்கிருந்தோ வந்துவிழுந்த ஷெல் தாக்குதலினால் தான் மயக்கமுற்று விழுந்ததையும் யாழ்வைத்தியசாலை கொழும்பு வைத்தியசாலை எல்லாவற்றையும் பார்த்து குணப்படுத்த முடியாமல் ஜேர்மனிக்கு ஒரு நம்பிக்கையுடன் வந்ததையும் ஒரு கதை போல விபரித்தாள்.
அவள் கதை சொல்லி முடித்தபோது அவள் கண்கள் பனித்திருந்தன.
அவன் கண்களும்கூடத்தான்.
"ஐ...ஆம்...ஸொறி...உங்கடை மனத்தைப் புண்படுத்திவிட்டேனோ தெரியாது...!"
"நோ..நோ...அப்பிடியொண்டுமில்லை...என்னைப்பற்றி இவ்வளவு அக்கறையா விசாரிக்கிற முதல் ஆம்பிளையே நீங்கள்தான்"
— அவள் இப்படிச்சொன்னதும் அவனுக்குள் ஒரு துணிவு பிறக்கிறது.
"இங்கை உள்ள டொக்கர்மார் உங்கடை கால்களைக் குணப்படுத்துவினம் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு.. இங்கை ஜேர்மனியிலை வைத்திய வசதிகளும் நல்லா முன்னேறியிருக்கு..."
அவளது அழகுமுகத்தைக் கூர்ந்து கவனித்துக்கொண்டே அரவிந்தன் சொல்கிறான்.
அவன் சொன்னதைக் கேட்டு கடகடவெனச் சிரித்தவள், இங்கை என்னைப் பெரிய ராணியாக்கிப் போட்டினம். பார்த்தீங்களா என்ரை சிம்மாசனத்தை... இந்தச் சிம்மாசனம்தான் இனி எனக்கு நிரந்தரம். எங்கடை நாட்டிலை இப்பிடி ஒண்டு வாங்கிறதெண்டால் எவ்வளவு செலவாகும் தெரியுமா? இங்கை எனக்கு ஒரு சதம் செலவில்லாமல் தந்திருக்கினம்..." என்று சொல்லிவிட்டு மீண்டும் சிரிக்கிறாள்.
அந்தச் சக்கரநாற்காலியை அவள் நிரந்தரமான சிம்மாசனம் என்று குறிப்பிட்டதை நினைக்க நினைக்க அவளுக்காக அவன் மனம் அந்தமுதல் சந்திப்பிலேயே கதறித் தவிக்கின்றது.
அந்தச் சந்தர்ப்பத்தில் உள்ளே நுழைகிறார் ஒரு பெரியவர்.
தனது பெரியப்பா என்று வந்தவரை அறிமுகப்படுத்தி வைக்கிறாள் அரவிந்தனுக்கு.
"தம்பியை ஆரெண்டு தெரியேல்லை.." என்று சொன்னபோது சுருக்கமாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கின்றான். அவனுடன் அன்பாக சிறிது நேரம் உரையாடிவிட்டு ஆனந்தியும் பெரியப்பாவும் விடைபெற்றுக் கொள்கின்றனர். ஆனந்தியுடனான அந்த முதல் சந்திப்பு அவன் மனதில் வரையப்பட்ட அழகான கோலம். தொடர்ந்து பல சந்திப்புக்கள்...
இசைப்பிரியனான அரவிந்தனுக்கு அவளைப் பாடச் சொல்லிக் கேட்பது இனிமையான அனுபவம்.
உங்களுக்காக வாழ்நாள் முழுவதும் பாடிக்கொண்டே இருப்பேன் என்பாள் ஆனந்தி. ஆனந்தியின் பெரிய தந்தையார் ஒரு நாள் அவனைத் தனிமையில்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழைத்துச் சொன்ன வார்த்தைகளை நினைத்துப் பார்க்கிறான்.

"தம்பி அரவிந்த்.. ஆனந்தியை என்ரை பிள்ளையளைவிட கூடுதலா நேசிக்கிறன். தன்ரை கால்களை இங்கை குணப்படுத்தலாம் எண்ட ஒரு அசைக்க முடியாத நம்பிக்கையோடுதான் ஆனந்தி ஜேர்மனிக்கு வந்தவள். எத்தனையோ ஸ்பெஷலிஸ்ட் அவளைப் பார்த்தவை. இங்கையும் ஏலாது எண்டு டொக்ரர்மார் சொன்னவுடனை அவளின்ரை முகமே மாறிப்போச்சு. கலகலப்பா இருந்த பிள்ளை... சரியாச் சாப்பிடாமல் ஆரோடையும் முகம் கொடுத்துப் பேசாமல் அவள் தனிமையிலைபட்ட துயரை சொல்லவே முடியாது. நாங்கள்தான் அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமா புத்தி சொல்லித் தேற்றிக்கொண்டு வந்தனாங்கள். ஆனால் இப்ப கொஞ்சக் காலமா அவளின்ரை முகத்திலை நல்ல கலகலப்பு... நல்ல பிரகாசம்.. எல்லாம் உங்களைச் சந்திச்சபிறகுதான்... வாழ்க்கையிலை அவளுக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டிருக்கு... தான் ஒரு ஊனமுற்றவள் எண்ட எண்ணம் அவளின்ரை மனதிலை அடியோடை இல்லையெண்டுகூடச் சொல்லலாம்... இந்தச் சந்தோஷம் அவளுக்கு நிரந்தரமாக இருக்கவேணும் தம்பி... இப்ப எந்த ஏமாற்றத்தையும் தாங்கக்கூடிய நிலையிலை ஆனந்தி இல்லை..." பெரியவரின் தழுதழுத்த குரல் அரவிந்தனை நெகிழச் செய்தது. உறுதியான குரலில் அவன் சொல்கிறான் —

"பெரியப்பா! ஆனந்திக்கு வாழ்வுகொடுத்து அவளை ஆனந்தமாக வாழ வைக்கிறதுதான் என்ரை வாழ்க்கையில் லட்சியமே... என்னை நீங்கள் பரிபூரணமா நம்பலாம்...!" என்று அவன் சொன்னபோது அவனை ஆரத்தழுவி, "யு ஆர் கிறேற்" என்று ஒரே வார்த்தையில் சொன்னதை நினைத்துப் பார்க்கிறான். அவன் எண்ணத்திற்கு ஆதரவளித்து ஆசீர்வதித்த அன்னையின் படத்தை மீண்டும் பார்க்கிறான். அவன் கண்கள் கலங்குகின்றன.

குறிப்பிட்ட சுப தினத்தன்று அரவிந்தன் ஆனந்தியின் திருமண வைபவம் ஹம் நகரத்து காமாட்சியம்மன் கோவிலில் சிறப்பாக நிகழ்கின்றது. அரவிந்தனைப் புரிந்துகொண்ட உற்றநண்பர்கள், ஆனந்தியின் நெருங்கிய ஒருசில தோழிகள் புடைசூழ நடந்ததிருமணத்திற்கு வந்திருந்த உறவினர்கள் அனைவரும் தம்பதிகள் இருவரையும் ஆசீர்வதித்து வாழ்த்தி பரிசுப் பொருட்கள் கொடுக்கின்றனர்.

திருமணச் சடங்கின்போது எல்லோரையும் நெகிழ வைத்த காட்சிகள் —

அழகுப் பதுமைபோல் ஆனந்தியை அலங்கரித்து சக்கர நாற்காலியில் உட்காரவைத்து தோழிகள் மணவறையை நோக்கித் தள்ளிக்கொண்டு வருகின்றார்கள்.

இரு தோழிகள் அவளைக் கைத்தாங்கலாக அணைத்தபடி தூக்கி மணவறையில் அரவிந்தன் அருகில் உட்கார வைக்கிறார்கள். ஐயர் மந்திரம் ஓத, கெட்டிமேளம் முழங்க அவள் கழுத்தில் புனிதமான தாலி ஏறுகிறது. எல்லோரும் மலர் தூவி ஆசீர்வதிக்கிறார்கள். அவள் கண்களில் ஆனந்தக் கண்ணீர்.

மணவறையில் அமர்ந்திருந்த ஆனந்தியை அரவிந்தன் மெல்லத் தூக்கி நிறுத்தி அவளை ஆதரவாக அணைத்தபடி மெல்லக்குனிந்து அந்த உணர்விழந்த பாதங்களைத் தூக்கி அம்மிக்கல்லில் வைக்கும்போது சற்று உணர்ச்சிவசப்பட்ட ஆனந்தி கண்கலங்கித் தவித்தபோது, மற்றவர்கள்

www.tamilarangam.net

அறியாமல் அவள் கண்ணீரைத் துடைத்துவிட்ட காட்சி எல்லோர் கண்களையும் ஈரமாக்கியது.
வீடியோப் படப்பிடிப்பாளர், புகைப்படப்பிடிப்பாளர் எல்லாவற்றையும் சிறப்புப் படமாக்கிக் கொண்டிருந்தார்கள்.
ஆனந்தியின் பெரியப்பாவும் பெரியம்மாவும் அரவிந்தனைக் கட்டித்தழுவி முத்தமிட்டபோது, நீ ஒரு மாபெரும் தியாகி என்று சொல்லாமல் சொல்வதுபோல் அவர்கள் கண்கள் ஈரத்தில் மின்னின.
பெரியப்பா அவர்களை வாழ்த்தும்போது "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க!" என்று சொன்னதும் பெரியப்பா சொன்னது பிள்ளைகளை அல்ல என்று மெல்ல அவள்காதில் அரவிந்தன் கிசுகிசுக்க அவள் நாணத்தால் முகம்சிவக்க 'களுக்'எனச் சிரித்த காட்சி 'கிளிக்' ஆகியது புகைப்படங்களில். வீடியோவிலும் அற்புதமாக அந்தக் காட்சி பதிவாகியது.

ஆனந்தி வீட்டின் அழகான படுக்கை அறையில் முதலிரவு. முழுமதியாக ஆனந்தி. முகமெல்லாம் நாணத்தின் போர்வை. அறையில் உள்ள கட்டில்மட்டுமல்ல அந்தச் சக்கர நாற்காலியும் பூச்சரங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.சக்கர நாற்காலியில் நாணிக்கோணி அமர்ந்திருந்த ஆனந்தியிடமிருந்து பால் குவளையை வாங்கிப் பக்குவமாக ரீப்போவில் வைத்த அரவிந்தன்
"ஆனந்தி அம்மாவின் ஆசீர்வாதத்தை நாம் முதலில்பெறுவோம்!" என்று சொல்லிக்கொண்டு அந்த அறையின் மூலைப்பக்கமாக அவளைத் தள்ளிச்சென்றான்.
மேசையில் உள்ள சூட்கேசிலிருந்து அம்மாவின் படத்தை எடுத்து பக்குவமாக வைக்கிறான். ஊன்றுகோல்களுடன் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒருபெண்ணின் வண்ணப்படத்தைக் கண்டு உற்றுப் பார்க்கிறாள் ஆனந்தி.
"அரவிந்... இது உங்கள் அம்மாவா?" ஆச்சரியத்துடன் கேட்கிறாள் ஆனந்தி.
"இதுதான் ஆனந்தி அம்மாவின் நிஜத்தோற்றம்.. முன்பு நீ பார்த்தது அம்மாவின் திருமணத்தின்போது எடுத்த இளமைத்தோற்றம்."
பிரமை பிடித்தவள்போல் படத்தையும் அரவிந்தனையும் மாறிமாறிப்

---

# கழகு

நடக்குது... நடக்குது... ஒரு கதை
நாட்டிலே நமக்காக இன்று! — அதை
நம்பினால்... நம்பினால்... நாமும்
நடுத்தெரு நாய்தான் நாளை...

காக்கையின் வாயில் வடைகண்டு
காட்டுநரி சொன்ன கதையொன்று!
பூனைகள் பிளவு தான்கண்டு
புகுந்த குரங்கின் கதையொன்று!

www.tamilarangam.net

பார்க்கிறாள் ஆனந்தி.

"கடந்த இருபதுவருடங்களாக இந்த மூன்றுகோல்களுடன்தான் அம்மாவின் வாழ்க்கை. உனக்கு இந்த வீல்செயரைப் போல!" சொல்லும்போது அவன் கண்கள் பனித்தன.

இருவருக்குமிடையே சற்று நேரம் மௌனம் நிலவியது.

"ஏன் இந்த விஷயங்களையெல்லாம் எனக்கு மறைச்சனீங்கள் அரவிந்த்... எங்களுக்குள்ளை ஒரு இரகசியமும் இல்லையெண்டுதான் நான் நினைச்சிருந்தன்!" விசும்பினாள் ஆனந்தி.

"இந்த ஒருவிஷயம்மட்டும் ஒரு 'சஸ்பென்ஸ்'சா இருக்கட்டுமே எண்டுதான் முதலே சொல்லாமல் இப்ப உனக்குத் தெரியப்படுத்தினது பிழையெண்டால் மன்னிச்சுக்கொள் ஆனந்தி."

அவன் வாயைப் பொத்தப்போன ஆனந்தியின் மென்மையான கரங்களை ஆதரவாகப் பற்றிக்கொண்டான் அரவிந்தன்.

"அம்மாவுக்கு என்ன நடந்தது...? ஏன் இந்த நிலைமை... சொல்லுங்கோ அரவிந்த்." கண்களில் நீர் ததும்பக் கேட்டாள்.

"அது இப்ப வேண்டாம்... இன்னொரு நாளைக்கு ஆறுதலாச் சொல்லுறன்... அம்மாவின் அன்பான ஆசீர்வாதம் எங்களுக்குக் கிடைக்கட்டும்... இந்த நேரத்திலை நாம் சந்தோசமாக இருக்கவேண்டும்.."

அவள் கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்துவிட்டு அவள் கண்களில் அன்பாக முத்தமிடுகிறான்.

அம்மாவின்படத்தைத் தொட்டுக் கண்களில்ஒற்றிக்கொள்கின்றான். அவனைப் போலவே ஆனந்தியும் அப்படத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கின்றாள். கட்டிலை நோக்கி சக்கர நாற்காலியைத் தள்ளிச்சென்ற அரவிந்தன் அவளை அலாக்காகத் தூக்கிக் கட்டிலில் கிடத்துகிறான்.

"உங்களுக்கு நான் எப்பொழுதுமே சுமை!" என்கிறாள் ஆனந்தி.

"சுமை அல்ல.. அதுதான் எனக்குச் சுவை!" என்கிறான் ஆனந்தியை அணைத்தபடி.

'அந்த அணைப்பு' ஆனந்திக்கு இதமாக இருந்தது.

□□□

---

படித்தவர் நாமும் அந்நாளில்!
பகுத்தறிவோம் நாமும் இந்நாளில்!
கிணற்று நீரில் நிழல்கண்ட
கிழட்டுச் சிங்கம் போலன்றி...
கல்லைப் போட்டு நீர்குடித்த
காக்கை போல செயல்படுவோம்!
சிங்கம் தன்னை தான்வென்ற
சிறுமுயலின் வழியில் செயல்படுவோம்!

-வேலணையூர் பொன்னண்ணா.

-வேலணையூர் பொன்னண்ணா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மறவாது பாடு

சே. யோகநாதன்.

வருஷம் இருதடவை
வரவேற்பறை இருக்கைகளை
அங்கும் இங்கும் அரக்கிவைத்து
அழகுபார்த்து
ஆமிக்காரன் ஆயுதம் தரிப்பதுபோல்
அங்கமெல்லாம் நகையணிந்து
அடுத்தவரைப் பயமுறுத்தி
ஆரவாரம் செய்வதுமோர் வாழ்க்கையல்ல.
எங்கே நீ வாழ்ந்தாலும் என்ன
ஏழை உள்ளங்களை வாழ்த்திப்பாடு!

பெட்டகத்தில் பெண்ணினத்தை
பத்திரமாய்ப் பாதுகாத்து
பத்திரங்கள் பண்டங்களும்
சேர்த்துவைத்து உந்தனுக்குக்
கட்டிவைத்த குற்றத்துக்காய்
அவள் காலமெல்லாம்
கண்ணீருடன் வாழுவதோ?
நீ காமுகனாய் கண்கெட்டு
கண்டவள் பின் ஓடுவதோ?
கைப்பிடித்த காலம் முதல்
பொய்க் காதல்தான் பொழிவாய்
அவள் காத்துவந்த கற்பினையும்
கண்ட துண்டமாக்கிடுவாய்
அவள் கால் அசைந்தால்
விலங்கு பூட்டி
வீட்டினிலே மாட்டிவைப்பாய்.
அவள் கண் அசைந்தால்
வெட்கமின்றி வேசி என்று
விரட்டி வைப்பாய்!
ஏனடா பெண் என்றால் இளக்காரமா?
அவள் இல்லையேல் நீ
எச்சில் தின்னும் நாயடா!
எங்கே நீ வாழ்ந்தாலும் உந்தன்
கைப்பிடித்த மனையாளின்
மனம் மகிழப் பாடு!

உன்னோடு வாழ்ந்த நண்பன்
உனக்கொருநாள் பகைவனானால்
ஊருக்கே அவன் பகைவனென்று
பறை சாற்றுவது நீதியில்லை.
உன்னோடு இருந்து அவன்
உனக்காய் உழைத்ததனை
ஒரு நொடியில் மறப்பதுவும்
மனிதமில்லை.
தன் மானத் தமிழன் என்று
தலைக்கனச் சாக்கடைக்குள்
சிக்கித் தவிப்பதிலும் லாபமில்லை.
இங்கே எச்சில்பட்ட காற்றைத்தான்
இழுத்துவிட்டு வாழவேண்டும்.
இறுமாப்புக் கொள்வதிலோர்
அர்த்தமில்லை.
எங்கே நீ வாழ்ந்தாலும் அங்கே
மனித நேயம் வாழ்கவென்று பாடு!

உள்ளத்திலே பொய்யலையும்
உதட்டினிலே சிரிப்பலையும்
கொண்டு திரிகின்றாய் சேர்த்து
உறவைக் கொச்சைப்படுத்தவென்றே
திட்டம் போட்டு
பண்புக்கு இலக்கணம்
வகுத்த தமிழ்ப் பாதைகளை
விட்டு விலகுகின்றாய்.
இது விலைமாதர் ஆகுகின்ற போக்கு
சத்தியங்கள் தர்மங்களை
சந்தி நின்று சிரித்தாலும்
சத்தியமே வெல்லும் தெய்வ வாக்கு
நீ தமிழன் என்று சொல்லி முன்னேறு!
எங்கே நீ வாழ்ந்தாலும் வாழும்வரை
தமிழ்ப் பண்பை நீ மறவாது பாடு!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

௨ம் பக்கத் தொடர்ச்சி

மூர்த்தி-போதிமரச் செல்வர்-சாட்சாத் கௌதம புத்தரின் காலடியிலேயே கொட்டப்பட்டு அகிம்சையின் அர்த்தத்தையும் புத்தனின் புனிதமான கொள்கையையும் மனிதாபிமானத்தையுமே கீழே போட்டு மிதித்தழிக்கப்பட்டனவே அதைச் செய்த காடையர்களுக்கு பச்சைக்கொடி காட்டியதார்? அன்றைய சனாதிபதியும் பிரதமரும் இதர வால் மந்திரிகளும்தானே! கொலைகாரனைத் தட்டிக் கொடுத்து துட்டகைமுனுவின் வாரிசடா நீ என்று புகழாரம் பாடி பற்றியெரிந்த இனக்கலவரத்தில் நெய்யூற்றிய சிங்கள இனவாதத்தை இரும்பொப்ப தமிழர் தலைமையொன்றால் மட்டுமே தலைகுனிய வைக்க முடிந்தது.இன்னும் தொடர்ந்து வைக்க முடிந்து கொண்டு இருக்கின்றது.இந்த நிலை அன்றே இருந்திருந்தால் விடுதலை என்றோ கிடைத்திருக்குமே என்று இன்றும் பலரும் கருதுவதில் வியப்பில்லையே!

ஒரு போராட்டத்தை ஆரம்பித்து விடலாம் ஆனால் அதைத் தொடர்ந்து நடத்திச் செல்வது என்பது இலேசல்ல.அதுவும் மிக நீண்ட காலப் போராட்டத்திட்டங்கள் வெற்றிபெற வேண்டுமென்றாலோ மக்களின் மனவுறுதியென்ற ஒன்றை மட்டுமே நம்பி நின்றாகவேண்டும். அன்றைய தென்னாப்பிரிக்கக் கறுப்பின மக்களின் எழுச்சியானது இதில்தான் மிகவும் ஆழமாகத் தனது அத்திவாரத்தை இட்டு வளர்த்தது.மரண ஓலங்கள் அவர்களின் விடுதலைக்கு ஊட்டங்கூட்டிய குரலோசைகளாகவும் சரிந்து விழுந்த மனித உடல்கள் சுதந்திரக் கோயிலை நோக்கி ஓட உதவிய படிக்கட்டுக்களாகவும் அரச துவக்கு வேட்டுக்கள் சுதந்திர அழைப்பின் மணியொலியாகவும் சித்திரவதைகள் சுதந்திரப் புத்தகத்தின் சாதாரணமான ஆனால் கருத்தாழமிக்க பக்கங்களாகவும் மக்களின் மனவெழுச்சியை மேலும் மேலும் ஓங்கி வளர வைத்தன.

வெள்ளையினம் கட்டாய இராணுவப் பயிற்சியைக் கடைப்பிடித்த அதே வேளையில் கறுப்பினம் அதைப் பெற வாய்ப்பு மறுக்கப்பட்டது.எனவே கெரில்லாப் போர்ப் பயிற்சியின் அவசியம் நன்கு உணரப்பட்ட நிலையில் அதற்கான அத்திவாரம் போடப்பட்டது.

கெரில்லாப் போர் முறையில் எதுவும் எப்போதும் நடக்கலாம் என்ற தொடர் எச்சரிக்கை மிக அவசியம்.எதிரியின் நடமாட்டங்கள் மட்டுமல்ல அவனது ஆபத்தினால் ஏற்படக் கூடிய மாபெரும் பாதிப்புக்களையெல்லாம் தாங்கி நிற்க மிகுந்த தெளிவும் சக்தியும் வேண்டும்.

அதை எப்படி அமைப்பது? ஒவ்வொரு போராளியும் ஒவ்வொரு தலைவனாக உருவாக்கப் பட வேண்டும்.அப்போதுதான் பாதிப்பின் தாக்கம் பாதையைத் தாக்காது தப்பிப் போக முடியும்.எனவே அப்படியான திட்டங்கள் உடன் அமுலாயின.

அன்றைய புரட்சிகர சிந்தனையாளர்களின் கண்களில் பட்ட முதல் கடமை மக்களின் கண்களைத் திறந்துவிடுவது என்பதுதான். சாதாரண அரசியல்வாதியும் அவன் வழிப் பழகி நிற்கும் போலிச் சமூக சேவகர்களும் மற்றவர் பெயரிலும் மற்றவர் புகழிலும் மற்றவர் பணத்திலும் மற்றவர் பலவீனத்திலும் மற்றவர் அறியாமையிலும்தான் தம்மை வளர்ப்பவர்களாய் இருப்பார்கள். அவர்கள் பொதுநலத்தைப் போல சுயநலத்தை மறைத்து கயமையைக் காத்து நின்று தங்களை வளர்த்துக் கொள்பவர்களாய்

www.tamilarangam.net

இருப்பார்கள்.

அவர்களின் பேச்சிலும் செயலிலும் பொய்மையே இருப்பதால் பெரிய மனிதர்கள் எனத் தம்மைத் தாமே வரிந்து கொள்ள சங்கங்கள் சபைகள் இயக்கங்கள் மன்றங்களென தாங்களே அமைத்துக் கொண்டு அல்லது அப்படி அமைந்து வளர்ந்திருப்பதான சங்கங்களில் புகுந்து கொண்டு பொதுப்பணியின் போர்வையில் தம் சுயநல வளர்ச்சியை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயல்படுவார்கள்.அத்தகைய போலிகள் சாதாரண மக்களின் பலவீனத்தில் தான் தமது வளர்ச்சிக்கு வித்திட்டுக் கொண்டிருப்பார்கள். இவர்களால்தான் மக்கள் எப்போதும் பிழையாகத் திசை திருப்பப் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இவர்கள் அளிக்கும் ஒரு சுவளை நீரிலும் கூட சுயநல நஞ்சே கலந்திருக்கும். இவர்கள் உலகெல்லாம் நிறைந்து கிடக்கும் இருளின் பிம்பங்கள். சிந்தனைத் தெளிவு என்ற வெளிச்சத்தைக் கண்டாலே இவர்கள் பதறி அலறுவார்கள். நியாயத்தைக் கேட்டவனையே குற்றவாளியாகக் காட்டிக் கொலை செய்த அநியாயங்களை இவர்கள்தான் உலக சரித்திரத்தின் பல பக்கங்களில் இரத்தத் துளிகளால் எழுத விட்டு வைத்திருக்கின்றார்கள். இவர்களின் திருவிளையாடலை அடையாளம் காணாத மக்களே மதவெறி மொழிவெறி சாதி வெறி என்று பலவீனப்பட்டு அழிந்து போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

தென்னாப்பிரிக்க மக்களின் ஆண்டாண்டுக்கால அடிமைப் பண்பாட்டு மனநிலையை அடியோடு அகற்றாவிட்டால் சுதந்திரத்தின் சுவையை அவர்கள் உணரவும் கூட தகுதி பெற மாட்டார்கள் என்ற உண்மையை உணர்ந்த சுதந்திரவிரும்பிகள் விதைத்த விதை வேர்விட்டு படிப்படியாக வளர்ந்து வரத் துவங்கிவிட்டது.

அடிமைத்தனமே தமது தலைவிதியென்று நம்பிக்கொண்டு வெறும் மனிதப் பிண்டங்களால் நிறைந்திருந்த அந்த சமுதாயம் கண் திறந்ததன் பின்னணியில் பல இளைஞர்களே சிற்பிகளாய் இருந்தார்கள்.

கம்யூனிஸ (பொதுவுடைமைவாத) இயக்கமானது மட்டுமே அன்றைய ஆப்பிரிக்க மக்கள் எழுச்சியில் மக்களுடன் துணிந்து கலந்து நின்ற இயக்கமாகும்.

மக்களுடன் சமமாகப் பழகி மனங்கவர்வதில் அவர்கள் ஆப்பிரிக்க ஏழை மக்களின் நல்லபிமானத்தையும் அன்றைய இளைஞர் சமுதாயத்தின் நல்லபிமானத்தையும் பெற்று காரம் மிகுந்த கடுகு போல சக்தி பெற்றிருந்தார்கள். அவர்களது வெளிப்படையான சுதந்திர விருப்பு பற்றிய கருத்துக்களும் செயற்பாடுகளும் அரசாங்கத்தைக் கலக்கியமையால் சட்டத்தின் இரும்புப்பிடிக்குள் அவ்வியக்கம் மிகக் கடுமையாகச் சிக்க வைக்கப்பட்டது.
அதே சட்டத்தை ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் மேலும் தொடர்புபடுத்தியே பய ங்கரவாதிகளாக அரசு அவ்வியக்க உறுப்பினர்களை அடக்கிவர முனைந்தது.

இன்றைய அமெரிக்காவைப் பாருங்கள்.உலக சனநாயகக் காவலன் என



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது தன்னைத்தானே அழைத்துக் கொள்கின்றது.ஆனால் மக்கள் சுதந்திரத்தை நசுக்கி மிதிக்கும் ரசிய ஆதிக்க ஆட்சிமுறையை அது தட்டிக் கொடுக்கின்றது.

செஸ்னிய மக்களின் சுதந்திரவுணர்வை ஈவு இரக்கமின்றி அழித்து அடக்கும் யெல்சின் அதன் கண்களுக்கு சனநாயகக் காவலன். பாலஸ்தீனர்களின் நலனிலல்ல இஸ்ரேலின் பாதுகாப்பில் மட்டுமே அக்கறை கொண்டதாக அதற்கேற்ற விதத்தில் நாடகமாடி சமாதானப் புறாபோல வட்டமிட்டுக் கொண்டு இருக்கிறது அந்தக் கழுகு.

எங்கெங்கே ஆள்பவர்கள் அநியாயம் செய்கின்றார்களோ அங்கெல்லாம் சனநாயக வேடம் போட்டு அநியாயத்தை நியாயப்
படுத்துகின்றது.ஆட்டைக்கடித்து மாட்டைக் கடித்து கடைசியில் எதையோ கடித்த கதையாக இன்று தமிழீழ மக்களை அழிக்க முனைந்து நிற்கும் சிங்கள
அராஜக ஆட்சிக்கு ஆயுதமும் பயிற்சியும் கொடுத்துக் கொண்டு இருப்பதாக செய்திகள் வருகின்றன. இவைதான் ஆக்கிரமிப்பு வாதிகளின் நீதியான கண்ணோட்டம் இதை அடையாளம் காட்டுபவனை ஆக்கிரமிப்பாளன் பயங்கரவாதியாகவே காண்பான். காரணம் இவன் இருள்.மற்றவன் வெளிச்சம். ஒன்றுபடவே முடியாத இரு துருவங்கள்.
நீதியை வலியுறுத்துவதில் போலிகள் பலமற்றிருப்பார்கள்.அவர்கள் நீதியை நசுக்க நியாயந் தேடுவார்கள்.அதற்காக அபாண்டங்களைச் சொல்லியாவது தங்களை நியாயப்படுத்திக் காட்டவே முனைவார்கள்.இதைத்தான் அன்றைய தென்னாப்பிரிக்க வெள்ளையரரசு சரித்திரப் படிப்பினையாக்கித் தந்திருக்கின்றது. உலகமே துடித்தெழுந்தும் ஒன்றுமே நடக்காததைப்போல இருந்த வெள்ளையரதிக்கம் மக்களின் மனவெழுச்சியாலேயே அடிபணிந்தது வரலாறு.

வரலாறுகள் கதைகளல்ல நம் நிகழ்கால நிகழ்வுகளோடு ஒப்பிடப்பட்டு ஆயப்பட்டு நீதிக்கு பங்கம் ஏற்படுமிடமெல் லாம் சுட்டிக்காட்டப்பட வேண்டியவை.
இன்றைய தமிழீழ மக்கள் விடுதலைப் போராட்டமானது சத்தியத்தின் வெற்றிக்கான ஏக்கத்தின் வெளிப்பாடேயன்றி வேறல்ல.இதைத்தான் அன்றைய தென்னாப்பிரிக்க சமூகமும் கடைப்பிடித்தது.
தன்னையறியாமல் வாழ்ந்த எந்த இனமும் தனித்துவம் காத்ததில்லை. தனித்துவத்தை உணர்ந்ததோ இது இதன்பின் அதை மீட்காமல் விட்டதுமில்லை என்பதே வரலாறு.
நல்ல எதையும் எவரிடமிருந்தும் எடுத்துக் கொள்ளலாம். அதனர்த்தம் எடுக்கப்பட்ட கொள்கைக்குரியவர்க்கு அடிமைப்படுவதல்ல.இதை ஏன் சொல்கின்றேன் என்றால் பொதுவுடைமைவாத~மாக்சியவாத கொள்கைகளின் நல்ல பகுதிகளை மண்டேலா தமது சிந்தனையில் பதித்திருந்தாலும் அவர்களுக்குப் பலியாகிவிடவில்லை. தனித்துவமாக~தெளிவாக அவர் தமது கொள்கையில் நிமிர்ந்து நின்றார்.
அந்த நாட்களில் சரித்திரத்தின் சுவடுகளை அம்மக்கள் சரியாக உணர அவர்களின் பிள்ளைகளே கண்திறந்து வைத்தார்கள் தமிழீழ மக்களுக்கு விடுதலைப் போராளிகள் போல. மக்கள் உணர்ந்தார்கள்.நடந்தார்கள். அடைந்தார்கள் அன்று! தமிழ் மக்கள் உணர்ந்தார்கள்.நடக்கின்றார்கள்: அடைவார்கள் நின்று. ~தொடரும்

www.tamilarangam.net

(5 ம்பக்கத்தொடர்ச்சி)

அருள் வாழ்வின் நிறைவே இறை சங்கமம்.

மரியாள் என்றும் அருள் நிறைந்தவராய் வாழ்ந்தார். அதனால்தான் ஆண்டவர் அவரைத் தேர்ந்தெடுத்தார். தூதன் அவரிடம் சென்று, அருள் மிகப் பெற்றவரே வாழ்க. ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்ற வார்த்தை நற்செய்தியைக் கூறினார்.

பாவத்தின் பரிசே சாவு என அறிவோம். பாவமே அறியாத மரியாள் சாவை எப்படிப் பரிசாகப் பெறமுடியும்? எவ்வாறு பாவமே அறியாத பரமன் இயேசு கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவதுதான் முறை என்று பாவிகள் பெற்ற திருமுழுக்குப் பெற்றாரோ,அவ்வாறே படைக்கப்பட்ட அனைத்தும் இறப்புக்குள்ளாக வேண்டுமென்ற இறைத்திட்டத்திற்கேற்ப மரியாள் இறப்பைத் தழுவினாரேயன்றி அது அவரின் பாவப்பரிசல்ல.

திருவெளிப்பாட்டில் கதிரவனை ஆடையாக அணிந்து நிலவின்மேல் நின்று தலையில் பன்னிருவிண்மீன்களை முடியாக அணிந்திருந்து (யோவான்12,1) பொன்குடத்திற்குப் பொட்டிட்டாற்போல யோவானுக்குக் காட்சி தந்தவர்,அருள் வளங்களால் நிறையப்பெற்ற இயேசுவின்தாய் மரியாளேயன்றி வேறொருவரும் இல்லை.

உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கைகொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார் (யோவான்11,26) இறைவனில் ஆகட்டும் என்ற நேரத்திலிருந்தே பிரிக்க முடியாத நிலையில் இவ்வுலகில் வாழ்ந்த மரியாளை இறப்பு எவ்வாறு அவரிலிருந்து பிரித்து வைக்கமுடியும்?

இவ்வுலகவாழ்விலல்ல மறுவுலகிலும் அந்த பிரிக்கமுடியாத உறவில் தன் மைந்தன் இயேசுவோடு மரியாள் இணைந்ததே அவரது விண்ணேற்பு.

1950 நவம்பர் 1ம்நாள் திருத்தந்தை பன்னிரண்டாம் பத்திநாதர் மரியாளின் விண்ணேற்பை ஒரு விசுவாச உண்மையாக அறிக்கையிட்டார். இம்மண்ணக வாழ்வில் அருள் வளங்களோடு வாழ்ந்த மரியாள் விண்ணகத்தில் அந்த அருளில் நிலைத்திருக்க, ஆவியாக வல்ல ஆன்மா உடலோடு சென்றுள்ளார் என்பதே இதன் பொருளாகும்.

— அருள்திரு மோன்போர்ட்.
(நன்றி — தொடுவானம்)

அன்னை மரியாளின் விண்ணேற்பு வைபவம்தொடர்பாக இந்த ஆண்டும் ஜெர்மனியின் கேவலார் திருப்பதியில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் ஆகஸ்ட் 9,10,11 ஆகிய திகதிகளில் தொடர்வழிபாடுகளும், தியான உரைகளும் இயற்றி அன்னையின் ஆசிகளைப்பெற்றுக்கொண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கைக்கெட்டாத கைமாத்துக்கள்.

- தொடர் கதை

~இராஜன்முருகவேல்.

1989ம் ஆண்டு.

சிவராசன் ஜேர்மனிக்கு வந்து ஐந்து வருடங்கள் இருக்கும்.

சோசலில்தான் இருந்தான். களவாக ஒரு சீனா ரெஸ்ரோரண்டில் வேலை.

காலை ஐந்து மணித்தியாலம். பின்னர் மாலை ஐந்துமணித்தியாலம்.

கிழமையில் ஒரு நாள்தான் விடுமுறை.

பாவித்து அசுத்தமான உடைகளைத்தோய்த்து ,அறையைச் சுத்தமாக்கி, சமைத்துச் சாப்பிட்டு வீடியோவில் விஜயகாந்தையோ அல்லது ரஜனியையோ பார்த்தவாறு கண்ணயர அந்த ஒரு நாளும் பறந்துபோய்விடும்.

மீண்டும் ரெஸ்ரோரண்ட். மீண்டும் கோப்பைகளுடன் சல்லாபம்.

'ஏய்..ஊய்...'என்ற சமையல்காரனின் விரட்டல்கள். இப்படியே நாட்கள் நகர்ந்தன.

ஒரு நாள் ஊரில் இருந்து நமசிவாயகத்தின் கடிதம் வந்தது.

'தம்பி சிவா!

நாங்கள் சுகம். உன்னுடைய சுகங்களுக்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். சின்னத்தம்பி உனக்குத் தன்ரை இளையவளைச் சம்பந்தம் கேட்டு வந்தவர். பெயர் சுகுணாவாம். உனக்கும் அந்தப் பிள்ளையைத் தெரியும் என்று நினைக்கிறேன்.சின்னத்தம்பி எனக்கும்ஒருவழிக்கு மச்சான்முறை. பிள்ளையையும் எனக்குப் பிடிச்சுப்போச்சு.

எதுக்கும் மேற்கொண்டு உனது சம்மதத்தையும் செலவுக்குக் கொஞ்சம் பண உதவியையும் எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்
உனது ஐயா.

'இரு குமர்கள் கரையேறாமல் வீட்டில் இருக்க, எனக்குத் திருமணம் செய்ய ஆசைப்படும் ஐயாவை நினைக்க ஆச்சரியமாகவிருந்தது.

பொடியன் வெளிநாட்டில் வெள்ளைக்காரிகளுடன் சேர்ந்து கெட்டுப்போய் விடுவான் என்ற கவலையாக இருக்கலாம்.அல்லது சின்னத்தம்பியிடம் வாங்கும் சீதனத்தில் ஒருத்தியைக் கரையேற்றலாம் என்ற திட்டமாகக்கூட இருக்கலாம்.

'எனினும் ஐயாவுக்கு என்ரை வாழ்க்கையைப்பற்றிய அக்கறை உள்ளது. என்னுடைய வாழ்க்கையைப்பற்றிச் சிந்திக்கிறார்.அதுவேபோதும்.

'எனக்காக அக்கறைப்பட தாயகத்தில் மனிதர்கள் உண்டு. அவர்கள் என் அடி அஸ்திவாரங்களாக அமைகிறபொழுதில் என் சோம்பல்களும் தளர்வுகளும் தள்ளி விழுகின்றன.உற்சாகம் உற்பத்தியாகி என்னைத்தெம்புள்ளவனாக்குகிறது.'

சுகுணா...


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நினைத்துப் பார்த்தான்

மனத்திரையில் கலங்கலாக ஒரு உருவம் வந்துநின்றது. பொது நிறம். நல்ல முகவெட்டு. ஒடிசல் என்று கூறமுடியாத உடலமைப்பு.மொத்தத்தில் அழகான பெட்டை.

அன்று பார்த்தது. இந்த ஐந்து வருடத்தில் அவளிடம் எத்தனையோ மாறுதல்கள் வளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கும். அவைகூட அவளின் இளமையைச் செழுமையாக்கி அழகை மேம்படுத்தும்.

சிவராசன் தன் மனதுள் அவளை அழகியாக்கினான்.

தூங்கி எழுந்த உணர்வுகளில் உற்பத்தியான கற்பனை வர்ணங்களால் சித்திரமாக அவளைக்கண்டான்.

கரும்பு தின்னக் கசக்கவா செய்யும்?

'ஏதோ உங்களுக்கு எது சரியோ, அப்பிடியே செய்யவும்.'என்று தனது உணர்வுகளை அடக்கி, அடக்கமானவனாய் சம்மதத்தைத் தெரிவித்தான் சிவராசன்.

சம்மதம்தெரிவித்து நாட்கள்பலமறைந்தும் ஊரிலிருந்து பதிலைக்காணவில்லை. ஆவலுடன் தினமும் தபால்பெட்டியைப் பார்த்து, அதன் வெறுமையில் ஏமாற்றமடைந்து நிம்மதியற்றுத் தவித்தான்.

சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்துவிட்டார்களோ?!

வேலையும் வீடும் என்று இருந்தவனின் இதயத்தில் சுகுணா என்ற விதையை ஊன்றி மௌனமாக உள்ள தந்தையின்மேல் கோபமாக வந்தது.

கோபம் நீண்ட நாள் நிலைக்கவில்லை.

சுகுணாவும் தந்தை சின்னத்தம்பியும் கொழும்பு வந்தார்கள்.

மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தான் சிவராசன். ஏஜென்சியிடம் காசு கட்டியாகி விட்டது. விரைவில் வந்துவிடுவாள். அவளின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

சிவராசன் தனது நண்பர்களுடன் மகிழ்ச்சியைப் பங்கு போட்டான். நண்பர்கள் விருந்து என்ற பெயரில் குடித்துக் கும்மாளமிட்டார்கள்.

சிவராசனுக்கு உறவென்று சொல்லிக்கொள்ள ஜேர்மனியில் ஒரேயொருவன்தான் இருந்தான்.அதுவும் 100 கிலோமீற்றர் தூரத்திலுள்ள நகரமொன்றில்.

அவனை நாடி ஒருநாள் சென்றான்.

"அடடே சிவா...என்ன கனநாளைக்குப் பிறகு இந்தப்பக்கம்...இப்பதான் என்னை ஞாபகம் வந்ததாக்கும்!" என்று வரவேற்றான் சண்முகநாதன்.

"எப்பிடி இருக்கிறாய்? வீட்டுக்கு காசு அனுப்புறனியா?" என்று விசாரித்தான் சிவராசன்.

"ஆ...ஏதோ அனுப்புறன்...அதுகளுக்கு எவ்வளவுதான் அனுப்பினாலும் காணாது.எல்லாத்தையும் அனுப்பிப்போட்டு நாளைக்கு நான் என்ன நடுத்தெருவிலை நிக்கிறதே?" எரிச்சலுடன் கூறினான் சண்முகநாதன்.

"சண்... ஊரிலை சாமான்கள் எல்லாம் நெருப்பு விலை... சனங்கள் நாளைக்கு வாழ்வோமோ எண்ட நம்பிக்கை இல்லாமை உயிரைக் கையிலை பிடிச்சுக்கொண்டு வாழுதுகள்...அதுகளின்ரை வாழ்க்கைக்கு ஒரேயொரு ஊன்று கோல் நாங்கள்தான். நாங்களும் அதுகளை ஏமாத்தினால் அதுகள் எங்கை போறது?"

"தனக்கில்லாத் தானம் தன் பிடரிக்குச் சேதம்!"

"இது தானமில்லையடா...கடமை!"

"அதுக்காக நாளைக்கு எனக்குமொரு குடும்பம் எண்டு வரேக்கை

www.tamilarangam.net

வெறுங்கையோடையே நிக்க முடியும்? அதுக்கும் நேரகாலத்தோடை கொஞ்சம் சேர்த்து வைச்சிருக்கவேணும்."
சண்முகநாதனின் பேச்சில் சுயநலம் தொனித்ததைக் கவனித்த சிவராசன் மௌனமானான். அவனுடன் வாதிடுவதில் பலனில்லை என்ற எண்ணமே காரணம்.
"சிவராசன்! விசேசம் இல்லாமல் இவ்வளவு தூரம் வந்திருக்க மாட்டாய்"
ஓமோம்... விசேசம்தான். எனக்குக் கல்யாணம் நிச்சயமாச்சு"
"சந்தோசமான செய்தி... எப்ப கல்யாணம்?"
பெட்டை கொழும்பிலை... வந்தவுடனை கல்யாணம்தான்."
"ஆர் பொம்பிளை?"
"சுகுணா...எங்கடை ஊர்தான்..."
சிறிது யோசித்தான் சண்முகநாதன்.
"அடடே... சின்னத்தம்பி மாமான்ரை மேள்..." என்றவன்,
"டேய் சிவா...உண்மையிலேயே நீ கொடுத்துவைச்சவன்தான்டா...உன்ரை அப்பா நேரகாலம் அறிஞ்சு கல்யாணம் செய்துவைக்கிறார்..எனக்கும் இருக்குதுகளே ஊரிலை...அதுகளுக்குக் காசைப்பற்றித்தான் கவலை....ஒருத்தன் வெளிநாட்டிலை கஸ்டப்படுகிறானே..அவனுக்கும் வயசாகிக்கொண்டு போகுதே... கல்யாணம் கட்டிவைக்க வேணுமே எண்ட எண்ணம் இல்லை!" என்றவாறு சிவராசனைப் பார்த்தான்...அப் பார்வையில் பொறாமை கலந்திருந்தது.

□□□

குழந்தைக்குப் பிறந்த நாள் என நண்பன் அழைத்திருந்தான்.
சரியாக மாலை ஆறுமணிக்கு ஆரம்பம் என்று மண்டப முகவரியையும் தெரிவித்தான்.
அவனது நகரத்திலே மாதத்தில் எப்படியும் மூன்று நாலு பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்குக் குறைவில்லை.
போயே தீரவேண்டும். இல்லாவிட்டால் கண்டால் கதைக்கமாட்டார்கள்.
வந்த நாட்டில் ஏன் வீணான பகைமைகளை வளர்ப்பான்?
ரெஸ்ரோரண்டில் முதலாளியிடம் கெஞ்சி மாலைவேலைக்கு விடுமுறை எடுத்துக் கொண்டான் சிவராசன்.
கடை கடையாக ஏறிஇறங்கி ஐம்பது மார்க் தாளொன்றைச் செலுத்தி ஒரு விளையாட்டுப் பொருளை வாங்கினான். பளபளப்பான கடதாசியில் சுற்றி மண்டபத்துக்குச் சென்றான்.
அப்போது மாலை ஏழு மணியிருக்கும்.
பிறந்தநாள் கொண்டாட்டம் ஆரம்பமாகிவிடுமோ என்று பரபரப்பாக விரைந்தான்.
ஏமாந்து போனான். அப்போதுதான் வீடியோக் கமராக்காரர்கள் கமராவைப் பொருத்திக் கொண்டிருந்தார்கள்.
மேசையில் 'கேக்'கைக் காணவில்லை. அதுகூட இனித்தான் வரும்போலும்.
நேரம் மெதுவாக ஊர்ந்தது. ஒவ்வொருவராக மண்டபத்துள் நுழைந்தார்கள்.
குறித்த நேரத்தில் குறித்தவாறு செய்யமாட்டார்கள்.
தாமதம் தமிழர்கள் பண்பாடோ?!
எட்டு மணிக்குத்தான் பெற்றோர்கள் குழந்தையுடன் நுழைந்தார்கள். அந்த ஒருவயதுக் குழந்தை அரைத் தூக்கத்துடன் துவண்டு விழுந்து கொண்டிருந்தது. அம்மாக்காரி குழந்தையின் மாம்பழக் கன்னங்களில்தட்டித்

www.tamilarangam.net

தூக்கத்தைக் கலைக்க முயற்சித்தாள்.அப்பா கேக்கில் மெழுகுதிரி ஒன்றை நாட்டி எரியவைத்தார்.
சுற்றி நின்றவர்கள "ஹப்பி பேர்த்டே டு யூ' என்று கோரஸாக முழங்க, குழந்தை கண்ணைச் செம்மியவாறு அப்பாவின் உதவியுடன் கேக்கிற்குள் கத்தியைச் செருகியது.
பக்கத்தில் தயாராக இருந்த 'கனோன்'கமராக்கள் ஓடியாடிப் 'பளிச் பளிச்' எனக் கண்சிமிட்டின. குறுக்கும் நெடுக்குமாக நடப்பவர்கள்மீது எரிந்து விழுந்தார்கள் வீடியோக் கமராக்காரர்கள்.
மண்டபம் முழுவதும் ஆரவாரம். அந்தச் சத்தத்தால் எரிச்சலுற்ற குழந்தை அழுது அடம்பிடிக்க, குழந்தையை முறைத்த அம்மாக்காரி விருந்தினரைப் பார்த்து அசடு வழியச் சிரித்தாள்.
பாவம் குழந்தை புரிந்துகொள்ள முடியாத வயது.
சிற்றுண்டி வகைகள் பரிமாறப்பட்டன.
பிறந்த நாளுக்கு வந்திருந்த ஒரு சில'டொச்'காரர்கள்கூட தமிழ்ப்பெண்களின் உடுப்புக்களையும் கழுத்துக்கொள்ளாத தங்க நகைகளையும் பரிமாறப்பட்ட உணவு வகைகளையும் பார்த்து ஆச்சரியமானார்கள்.

மண்டபத்தின் ஒரு புறத்தே விஸ்கி, பியர் போத்தல்கள் பிறிம்பாக அடுக்கப் பட்டிருந்தன. அந்தப் பகுதிக்கு சிவராசனையும் யாரோ இழுத்துப் போனார்கள். இப்பொழுதெல்லாம் சிவராசனுக்கு குடிவகைகளில் நாட்டமே இல்லை. குடிக்கப் போகிறோம் என்று நினைத்தாலே வயிற்றைப் பிரட்டுவதுபோன்ற உணர்வு ஏற்படுகின்றது. ஆனால் சிகரட்டைத்தான் விடமுடியவில்லை. ஒவ்வொரு முயற்சியின்போதும் சிகரட்டுக்களின் எண்ணிக்கைதான் அதிகரித்ததே தவிர முயற்சி பலிதமாகவில்லை.
பிறந்த நாள் விழாவில் குடிக்காவிட்டாலும் கோபிப்பார்கள். அப்படி ஒரு பண்பு நம்மவர்களுக்கு.
பூனைக்குட்டி 'லேபல்' பொறித்த போத்தலொன்றைத் திருகி வார்த்துக் கோலாவைக் கலந்து நீட்டினார்கள்.
ஒரே மிடறில் கவிழ்த்து வாய்க்குள் ஊற்றியதுதான் தாமதம் — வயிற்றைப் பிறாண்டிக்கொண்டு ஏதோ ஒன்று தொண்டைக்குழியால் வெளிவரப் போவது போன்ற உணர்வுதாக்க, மலசலகூடத்தை நோக்கி ஓடினான் சிவராசன்.
வாந்தி அணையுடைத்த வெள்ளமாகியது. வாந்தியுடன் சிவப்புத் திரவமாகத் தொட்டியை நிறைத்தபோது... பக்கத்தில் வந்து எட்டிப்பார்த்த சோதி திகிலுடன் அலறினான்.
"சிவா...என்னடா என்னடா.. உது... ரத்தம்போகுது... கொஞ்சம் பொறு. அம்புலன்சுக்குப் போன் செய்துபோட்டுவாறன்..."
"வேண்டாம் சோதி. இது சும்மா சூடாயிருக்கும்!" என்று சிவராசன் தடுப்பதையும் பொருட்படுத்தாமல் விரைந்தோடிச் சென்று அம்புலன்ஸை அழைத்தான் சோதி.
(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்தி மடல்.

**வீ.ஆர்.வீ.**

தமிழீழ மூன்றாம்கட்ட ஈழப்போரில் மிக முக்கிய வெற்றிப் படியாக முல்லைத்தீவு இராணுவமுகாம் தாக்குதல் அமைந்துள்ளது. தமிழர்களின் வீரம் மீண்டும் ஒருமுறை உலகை வலம்வந்த தாக்குதல் இது. சுமார் 1400 இராணுவத்தினர் இத்தாக்குதலினால் கொல்லப்பட்டதுடன் மொத்தம் 277 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட ஆயுதங்களைத் தமிழீழ விடுதலைப்புலிகள் கைப்பற்றிச் சென்றனர். தரை, கடல், ஆகாய மார்க்கமாக வந்த சகல எதிர்ப்புகளையும் தமிழீழ விடுலைப்புலிகள் முறியடித்தனர்.

☐ முன்பு முல்லைத்தீவை விட்டுச்சென்றிருந்த மக்கள் மீண்டும் முல்லைத் தீவுக்குவந்து வழமையான வாழ்வை மேற்கொண்டுள்ளனர். முல்லைத்தீவு பேருந்து நிலையம் மீண்டும்இயங்க ஆரம்பித்துள்ளது. தமிழீழபோக்குவரத்துச் சபை பேருந்து சேவைகளை நடாத்துகின்றது. பாண்டியன் அங்காடி அங்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

☐ முல்லைத்தீவு தோல்வியையடுத்து சிறிலங்கா இராணுவம் ஆனையிறவி லிருந்து புறப்பட்டு கிளிநொச்சிவரை செல்லும் முடிவில் பலத்த தாக்குதலுடன் முன்னேறியது. ஆனால் பரந்தனில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதலைச் சமாளிக்கமுடியாமல் மீண்டும் ஆனையிறவுக்கே திரும்பியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

☐ இதனால் கிளிநொச்சியிலிருந்து சுமார் இரண்டுலட்சம் மக்கள் இடம் பெயர்ந்து மாங்குளம் வவுனியா பகுதிகளுக்குச் சென்றுள்ளனர். பலர் காடுகளிலும் மரங்களின்நிழல்களிலும் தங்கவேண்டி ஏற்பட்டதாக அங்கிருந்துவரும்செய்திகள் தெரிவிக்கின்றன.மக்கள் உணவுப் பொருட்கள் இன்றியும் நோய்களுக்கு மருந்துகளின்றியும் பெரிதும் அவதிப்படுவதாக அந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

☐ வெளிநாட்டு உதவிநிறுவனங்கள் அவதிப்படும்மக்களுக்கு உதவிசெய்ய தம்மிடம் மருந்துகளோ உணவுகளோ இல்லையென வெளிநாடுகளுக்கு அறிவித்துள்ளன. மருந்துகளின்றி நோய்களாலும் சிலர் இறக்கின்றனர்.தொற்று நோய்கள்பரவுவதும் அதிகரித்துள்ளன.

☐ இதேவேளையில் தெகிவளை புகையிரத நிலையத்திலும் மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோயிலிலும் குண்டுகள் வெடித்தன.தமிழீழ விடுதலைப் புலிகளே அவற்றைச் செய்ததாக சிறிலங்கா அரசு குற்றம்சுமத்தினாலும் இதனைத்தமிழீழ விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர்.தமிழீழ விடுதலைப்புலிகள் மீது வீண்பழியை அரசு சுமத்தியுள்ளது என்றும் இந்தக் குண்டு வீச்சுக்களுக்குப் பொறுப்பு அரசே என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

www.tamilarangam.net

☐ சிறிலங்கா இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு அஞ்சி மன்னார்,பேசாலை பகுதிகளிலிருந்து தமிழ் மக்கள் தமிழ்நாட்டுக்கு அகதிகளாக வந்துள்ளனர். சுமார் 800க்கும் அதிகமான மக்கள் மீன்பிடிப் படகுகளின் உதவியுடன் வந்ததாக தமிழ்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

☐ தமிழ்நாட்டில் பரவலானமுறையில் ஊர்வலங்கள் உண்ணா விரதங்கள் ஆகியவை தமிழீழ மக்களுக்கு ஆதரவாக நடாத்தப்பட்டு வருகின்றன. ஈழத்தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுவதை தமிழகம் பார்த்துக்கொண்டிருக்க முடியாதென தமிழக முதலமைச்சர் கலைஞர் திரு மு.கருணாநிதி கூறியுள்ளார்.

☐ தமிழ்நாட்டின் பிரபலமான எழுத்தாளர் திரு. மணியன் காலமானார். ஆனந்தவிகடன் வாராந்த சஞ்சிகையின் முன்னாள் ஆசிரியரும்இதயம்பேசுகிறது வாராந்தசஞ்சிகையின் ஆசிரியருமான இவர்வெளிநாட்டுப் பயணக்கட்டுரைகளின் மூலம் மிகப் பிரபலமானவர். தமிழ்நாட்டின் காலஞ்சென்றமுதல்வர் திரு எம்ஜிஆர் ஆட்சிக்காலத்தில் தமிழ்நாடு சுற்றுலாத் துறையில்முக்கிய பதவியில் இருந்தார்.

☐ சிறிலங்கா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்தாலும் லண்டனிலுள்ள புலிகளின் சர்வதேசச் செயலகம் மூடப்படமாட்டாதென பிரிட்டன் வெளிநாட்டு அமைச்சர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

☐ பாலஸ்தீன தலைவர் யாசீர் அரபாத்துக்கும் இஸ்ரேலிய வலதுசாரிப்பிரதமர் நெட்டன் யாகூவுக்கும் இடையில் பலத்த கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது. சமாதான ஒப்பந்தத்திற்கு ஆபத்து வந்துவிடுமோவென பல நாடுகள் அச்சம்கொண்டுள்ளன.

☐ சுவிற்சர்லாந்து நாட்டிலுள்ள ஐ.நா.சபை அலுவலகத்தின்முன் தமிழர்கள் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்தினர். இதில் சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். தமிழீழத்தையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் அங்கீகரிக்கக்கோரியும் முரளியை விடுதலை செய்யுமாறும் அவர்கள் அங்கு கோரிக்கை விடுத்தனர்.

☐ ஜேர்மனியில் சோலைக் கலைமாலை நிகழ்ச்சி ஸ்ரூட்காட், ஓபகௌசன், பீலபெல்ட்ஆகிய நகரங்களில் நடைபெற்றது. அதில் தளிர் இசைத்தாலாட்டு சுதந்திரக்கனல் நடனங்கள் ஆகிவற்றுடன் விசேட நிகழ்ச்சியாக 'விலங்கை உடைத்த விலங்கு' இசைக்கோல நடனம் இடம்பெற்றது. ஜேர்மனி விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழக ஜேர்மனிக் கிளை வழங்கிய இந்த இசைக்கோல நடனம் மேற்படி கிளையின் துணைப்பொறுப்பாளர் திரு கண்ணனின் இசையமைப்பில் உருவானது. இதனைத் தயாரித்தவர் மேற்படி கிளையின் பொறுப்பாளர் திரு கா.சிவநாதன். கலை பண்பாட்டுக்கழக நடன ஆசிரியை திருமதி சாவித்திரி இமானுவேல் நடன அமைப்பை வழங்கினார். ஜேர்மனி செஞ்சோலை காந்தரூபன் அறிவுச்சோலைக் கிளை சோலைக் கலைமாலை நிகழ்ச்சியை வழங்கியது.

www.tamilarangam.net

☐ மனித உரிமைகளைப் பாதுகாப்பதாகக்கூறிப் பதவிக்கு வந்த சிறிலங்கா அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதென சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளது.

☐ சிறிலங்கா அரசுக்கு எதிராக எதிர்க்கட்சியான ஐ.தே.க. கொழும்பில் மாபெரும் கூட்டம் ஒன்றை நடாத்தியது. இதில் சுமார் ஒருலட்சம் பேர்வரை கலந்து கொண்டார்கள்.

☐ யுத்தத்திற்கான செலவுகள் அதிகரித்துள்ளதால் சிறிலங்கா அரசு அத்தியாவசிய பொருட்களின் விலைகளை உயர்த்தியுள்ளது. பாண் ஒரு இறாத்தல் தற்போது 7ரூபா 50சதமாக விற்கப்படுகின்றது.

☐ இந்தியாவின் முன்னாள் பிரதமரும் அகில இந்திய காங்கிரஸ் தலைவருமான திரு.பி.வி.நரசிம்மராவ் உட்பட சிரேஷ்ட அரசியல் வாதிகளுக்கெதிராக ஊழல் குற்றச்சாட்டின்பேரில் வழக்கு தாக்கலாகியுள்ளது.

☐ அமெரிக்காவின் இராணுவ அதிரடிப்படையான கிறீன் பெரெட்ஸ் சிறிலங்கா இராணுவத்திற்குப் பயிற்சியளிப்பதாக அமெரிக்கப் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார். இதனையடுத்து சிறிலங்காவின் உள்விவகாரங்களில் தாம்தலையிடவில்லை என்றும் இராணுவப்பயிற்சி யளிப்பது உண்மையென்றும் அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளது.

# பூவரசு

**தனது 6வது ஆண்டு நிறைவையொட்டி**
**வாசகர்களுக்கிடையே நடாத்தும்**

## சிறப்புப் போட்டிகள்!

**விபரங்கள் அடுத்த இதழில்!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர் கட்டுரை.

# எங்களில் யார் முதலில் திருந்துவோம்?

– க. ஜோர்ஜ்.

(சென்ற இதழ்தொடர்ச்சி)

மாமியாராகும் தகுதியை அடையப்போகும் பெண்கள் தங்கள் மகன்களுக்கு வருகிற மணமகள்கள் எவ்வளவு சீதனம்கொண்டு வரவேண்டும் என்ற விடயத்தில் மிகவும் அக்கறையாக இருப்பதை அனுபவ வாயிலாக அறிகிறோம். இவ்வளவு பணம், இவ்வளவு நகை, வீடு இப்படியானது, காணிகள் இப்படியானவை என.

இது ஒரு புறமிருக்க, திருமணம் பேசிவந்து முற்றாகிற கட்டங்களில், சீதனப்பேச்சு அடிபடும். அப்போது மணமகனாகப் போகிற இளைஞன் "அம்மா! சீதனம் வேண்டாமம்மா, சீதனம்வாங்குவது தப்புஅம்மா, என்னுடைய வருவாய் நாலுஐந்து பிள்ளைகளுடனும்கூடச் சிறப்பாகவாழக் காணுமம்மா. அதையும்விட அந்தப் பெண்பிள்ளையின் குடும்பம் நிரம்பவும் கஷ்டமாமம்மா" என்று கூறத் தாய் கூறுகிறா —

"எடேய் தம்பி! நீ சும்மா இரடா... உனக்கென்னடா தெரியும்? என்ன தெரியுமெண்டு நீ கதைக்கிறாய்? எடே... நீ சின்னனிலை வருத்தக்காரனாய் இருந்தபோது டாக்குத்தரிட்டை உன்னைக் கொண்டுபோன கார்க்காசு இன்னும் நீ உழைச்சுத் தரயில்லையடா... உன்னைப் படிப்பிச்சு ஆளாக்க நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டோம்? எத்தனை பிரயோசனமான காணிகளை வித்தோம் இண்டைக்கு நீ ஒரு உயர்ந்த நிலையிலை டாக்குத்தரெண்ட பேரோடை இருக்கிறாயடா... (இது இங்ஙனமிருக்க, டாக்டர், வக்கீல், என்ஜினியர் ஆகிய படித்த சற்று உயர்ந்த நிலையிலுள்ளவர்களிடத்தில்தான் இதில் கிராக்கியும் தொகைஅதிகரிப்பும் உண்டெனவும் கொள்ளக்கூடும். அதே நேரம் இம்மூவகை தவிர்ந்த அரசலிகிதர், ஆசிரியர், வியாபாரிகள் இத்துடன் சேர்ந்த மற்றையோர் அத்தனைபேரும் சீதனவிடயத்தில் கிராக்கி காட்டாதவர்கள் எனக்கொள்ள இயலாது) எடே...தம்பி! சீதனம்வாங்கினால் தானடா மதிப்புஅத்தோடை உன்ரை தங்கச்சியைக் கரைசேர்க்க என்னடா வழி? நீ சும்மா இரடா" என்று இவ சொல்லவும் பையனின் அப்பா, அதாவது இவவின் புருஷன் "இஞ்சாரப்பா! தம்பி சொல்லுறதும் சரிதான்.எங்களுக்கென்னத்துக்குச் சீதனமும் காசுபணமும்? ஆண்டவனேயெண்டு எல்லாம் நிறைய இருக்கு. வேண்டாமப்பா. எங்கடை பிள்ளைக்கும் மரியாதைக்குறைவு" என்று அவர்கூற. "நீங்கள் பேசாமலிருங்கோ,

www.tamilarangam.net

உங்களுக்கென்ன தெரியுமெண்டு கதைக்க வெளிக்கிட்டனீங்கள்? நீங்கள் மரியாதையைப்பற்றிக் கதைக்கிறியளோ? அப்ப என்னைக் கட்டினநேரம் நீங்கள் வாங்காமல் விட்டிருக்கலாம்தானை? அந்தநேரம் என்ரை அப்பு ஆச்சியவை எவ்வளவு கஷ்டப்பட்டினம். உங்கடை புத்தியைக் கேட்டால் நானும் பிள்ளையளும் தெருவிலைதான் நிக்கவேணும்..நீங்கள் வாயைப்பொத்துங்கோ!" என்றதோடு அவரும் அடங்கிவிடுகிறார். மேற்படி காரணிகளால் அங்கு சீதனம் வாங்கப்பட்டே திருமணம் நிறைவேறுகிறது.

அது ஒரு கற்பனை உதாரணம் எனக் கொள்ளுவோமே!

எனின், இத்திருமணத்தில் சீதனம் வாங்கவேண்டுமென்ற கொள்கையைத் திடகாத்திரமாகக் கடைப்பிடித்துக்கொண்டவர் யார்?

தான் ஒரு பெண்ணாகவிருந்தும் ஒரு பெண்ணின் வாழ்வு சீர் பெறுவதற்கு ஆதரவு நல்கவேண்டுமென்று சிறிதேனும் சிந்தியாமல் பணத்தைச் சொத்துக்களைக் கறப்பதிலேயே கண்ணாகவிருந்த இந்த மாமியாராகிற மேற்படி பெண்,சீதனமில்லாமல் வருகிற மருமகளாகிறபெண்ணை எப்படி நடாத்துவா? எத்தனை கொடுமைகள் புரிவா? அத்துடன் சீதனத்தில் இன்னொரு வினோதம், ஒரு பகுதி மணமகனுக்கு இன்னொரு கணிசமான பகுதி மணமகனைக் கருவாக்கி உருவாக்கி ஆளாக்கிய பெற்றோருக்கு.

இஃது ஒரு புறமிருக்கத் தாய்தகப்பன் சொல்லை மீறி மகன் தன் விருப்பத்துக்குத் திருமணம்முடித்தால் கண்கண்ட தெய்வங்களான பெற்றோரை அவமதித்தவன் நன்றி மறந்தவன் — பெற்றோரின் வெறுப்புக்கு ஆளானவன் என்ற பழிச்சொல்லும் அவனை வந்து சாரும். அதனால் அவனின் நிலை பரிதாபத்துக்கிடம்.

ஆயின், மாமியார் எனும் அந்தப் புனிதமான அந்தஸ்தைப் பெறவிருக்கும் பெண்கள், சீதன விடயத்தில் கண்ணியமாக நடக்க முற்படின் இதில் திருத்தம் நிச்சயமாக ஏற்படும்.

மருமகள் என்பவள் யார்? மருவிய மகள். அதாவது குடும்பத்தை மருவிய மகள். எனவே அவளையும் ஒரு வகையில் தனது மகளெனக் கணித்து வருவாவெனில், மாமியார் மாமியாராக இல்லாமல் தாயாகவே மாறிவிடுவா.

எனவே சீதனப்பேய் எனும் கொடிய அரக்கனை ஒழிப்பதற்குப் பெண்களின் பங்கு முக்கியம் எனவும், மாமியாராகும் பெண்கள்(மாமியார் இல்லாதவிடத்து மாமன்மார்) ஒத்துழைப்பு நல்கினால் எண்பத்தைந்து தொண்ணூறு வீதமாக இதில்திருத்தம் காணமுடியுமென்பது குன்றின் மேலுள்ள தீபத்துக்கொப்பாகும்.

ஓர் ஆணும் ஒருபெண்ணும் இணைந்து வாழும்போது அவர்கள் குடும்பம் என்ற ஓர் அன்புக் கூட்டுக்குள் அடங்குகிறார்கள். சில குடும்பத்தில் பிள்ளைகளும் சேர்கிறார்கள். இவர்களுடைய இந்தக் கூட்டு இணைப்பிற்கு ஒருவர் தலைவராகஇருக்கவேண்டியது இயற்கைநியதியும் நியாயமானதுமாகும். "எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்" என்பார்கள்.எனவே,ஆண் குடும்பத்தில் தலைவனாக இருக்க வேண்டுமென்பது பொதுவாக யாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்று.

சாதாரணமாக ஆணையும் பெண்ணையும் சோடி சேர்த்துப்பார்க்கும்போது ஆண் பெண்ணைவிட வயதுகூடியவனாக உயரத்திலும் ஏன் உடம்பிலும் கூடச் சற்றுப் பெருத்த தோற்றமுடையவனாக இருக்கவேண்டுமென்பது நடைமுறையிலுள்ள ஒரு விடயமாகும்.


இராமாயணத்தில்கூட இராமன் தன் தம்பி லட்சுமணனுக்குக் கூறும்

www.tamilarangam.net

# ஆன்மீக சிந்தனைகள்.

-ப. இராஜகாந்தன்.

வாழும் போதே உலகில்
நல்ல வழியைக் காண்பதன்றி
போகம் பொருளை நாடும்
ஏதும் அறியா இயந்திர மனிதர்களே!
தாவும் குரங்கு மனத்தைத்
தனியாய்ப் பிரித்தாலன்றோ
தாமரை போலே மலரும்
தண்ணொளி வீசும் ஆன்மா
அகத்தினில் ஆயிரம் நினைவுகள்
இது அத்வைத நிலையின் ஆனந்தம்
புறத்தே தோன்றுவதெல்லாம்
பொய்யாகும் நிர்மலம்
அஞ்ஞானப் பார்வை தன்னில்
அண்டம் பலவண்ணம்
உன் ஆன்மா அகத்தில்
உறங்கிக் கிடக்க
விஞ்ஞானப் போர்வைக்குள்
வீண் வாதம் பேசல் வேண்டாம்
மெஞ்ஞானப் பேரொளியே
இவ் விரிந்த பிரபஞ்சம்
போராடத் திராணியில்லை
பொய்யுலகை நம்புவோர்க்கு
போதும் என்ற எண்ணம் இன்றி
பொருளைச் சேர்த்துக் குவிக்கின்றார்.
சூதும் வாதும் பேசி
சோரம் போகும் மக்கள்
நாளும் பொழுதும் தியானம் செய்யின்
வாழும்போதே உலகில்
நற்கதி அடைவார் அன்றோ!



கடவுள் எங்கேயோ வெகு தூரத்தில் இல்லை.
எம்மிலும் நாம் பார்க்கும் இடம் எல்லாம் தூணிலும் துரும்பிலும் நிறைந்து இருக்கும் பரம் பொருளே ஆகும்.
தங்கள் கட்புலனைக் கொண்டு அறிவதுதான் உண்மையில் உண்டு. மற்றவை இல்லையென்று சிலர் நினைக்கின்றார்கள். தூலமானபொருள்கள் கட்புலனுக்குத் தெரியும். சூட்சுமமானவை அப்படியல்ல. ஆனால் சூட்சுமமானவையே சக்தி வாய்ந்தவை. சூட்சுமத்திலிருந்தே தூலமானவை உண்டாகின்றது. இது விஞ்ஞானம் அறிந்த உண்மை. பிரபஞ்ச வரலாற்றைப் பார்த்தால் புரியும்.
இறைவனும் சூட்சுமமானவனே!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு பொருளை அறிய மூன்று பிரமாணங்கள் உள்ளன.
காட்சிப் பிரமாணம் — காட்சியால் அறிவது. அனுமானப் பிரமாணம் — ஊகத்தால் அறிவது. ஆகமப் பிரமாணம் — சாஸ்திரங்கள் மூலம் அறிவது.
கடவுளை மறுப்பவர்கள் இதில் முதலாவதை மாத்திரம் ஏற்றுக் கொள்கிறார்கள். மற்றவையை மறுப்பது மடமையாகும்.
எமது கட்புலன்கள் வெறும் கருவிகளே. கட்புலன்கள் மனம் அறிவு ஆகிவற்றைக் கொண்டே ஒன்றை உணர முடியும். மனமும் அறிவும் கூட தனித்து இயங்கமுடியாது. அவை இன்னொன்றைச் சார்ந்தே உள்ளன. அதுவே ஆன்மா. பார்ப்பதும் கேட்பதுமான செயல்களின்போது கட்புலன்களான காது கண் போன்றவையும் அந்தக் கரணங்களாகிய மனம் அறிவும் இயங்குகின்றன. ஆனால் என்றும் நிலையாக அழியாப் பொருளாக மாறாததாக ஆன்மா இருக்கின்றது. அதில் இச் செயல்பாடுகள் பதிவதாலேயே எம்மால் எதையும் உணர முடிகின்றது.
உதாரணமாக கமராவில் எல்லாப் பகுதிகளும் இயங்கும்போது இயங்காமல் நிலையாக திரை ஒன்று உண்டு. அதில்தான் விம்பம் விழும்.
ஒன்று நிலையாக இருக்கும்போதுதான் இன்னொன்றின் இயக்கத்தை அறிய முடியும்.
ஒரு மேசையின்மேல் ஒரு பந்தை நகர்த்துவதாக வைத்துக்கொள்வோம் மேசை அசையாது இருப்பதால் பந்தின் நகர்வை அறிய முடிகின்றது. மேசையும் நாமும் சேர்ந்து நகர்ந்தால் அந் நகர்தல் தெரியாது. அது போலவே இப் பிரபஞ்ச இயக்கத்திற்கெல்லாம் நிலையாக மாறாத பொருளாக இருந்து கொண்டு எல்லாவற்றையும் ஆட்டுவிப்பது ஆன்மாவே. அதுவே இறைசக்தி. அதுவே இறைவன். தோன்றாமல் தோன்றும் வஸ்து.

மின்சாரத்தைப் பார்க்கமுடியாது. அதன் செயற்பாட்டைத்தான் உணர முடியும். அது போலவே இறை சக்தியும். நோய்களை ஏற்படுத்தும் பற்றீரியாக்களைப் பார்க்க முடிவதில்லை. அப்படியாயின் அவை இல்லை என்றாகுமா?
ஒலி அலைகளும் ஒளி அலைகளும் வளிமண்டலத்திலும் எம்மைச் சுற்றியும் எங்கும் உள்ளன. ஆனாலும் அதற்கான கருவியில்தான் அவற்றை அறிய முடிகின்றது. மனோ அலைகள் மூலம் கடிகாரத்தை நிறுத்துவதையும் கரண்டியை வளைப்பதையும் இன்று கண்கூடாகப்பார்த்து அதிசயித்திருக்கின்றார்கள்.
இதற்கு ஓர் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு வந்தால்தான் நம்புவார்களா?
விஞ்ஞானிகள் முன்பிருந்தே உள்ளதைத்தான் இன்று கண்டுபிடிக்கிறார்கள்.
ஐசாக் நியூட்டன் புவியீர்ப்புவிசையைக் கண்டுபிடித்தார் என்றால் அவருக்கு முன் புவியீர்ப்பு விசை இருக்கவில்லையா?
ஓர் சிப்பி ஓர் சிலையை வடிக்கின்றான் என்றால்கூட அக்கல்லில் தேவையில்லாத பகுதிகளை நீக்கிவிடவும் சிலை உருவாகின்றது. முன்பு அக்கல்லினுள் இருந்த சிலையே சிற்பியின் மூலம் வெளிப்பட்டதாகும்.

சிலவருடங்களுக்கு முன்பு சோவியத்தில் வெடித்த அணு உலையின் பாதிப்பால் ஆயிரக்கணக்கான மைல்தூரத்தில் உள்ளவர்களும் பாதிக்கப்பட்டார்கள். ஐரோப்பாவில் அவ்வருடம் உற்பத்தியான பழவகைகளைக்கூட கடலில் கொட்டி அழித்தார்கள். அணு உலையில் இருந்துவந்த கதிரியக்கத்தின் பாதிப்பு வானிலையில் மாற்றத்தை உண்டு பண்ணியது. கதிரியக்கத்தைக் கண்ணால்

www.tamilarangam.net

கண்டவர்கள் உண்டா?

எமது சமயக் கிரியைகளின்போது ஓமகுண்டலத்தில் இடப்படும் பசு நெய் பச்சை அரிசி போன்றவை எரியூட்டப்படும்போது ஏற்படும் இரசாயன மாற்றம் வானிலையில் மாற்றத்தை உண்டாக்காதா? நல்ல பலனைத் தரமாட்டாதா? ஒளி ஒலியினால் உண்டாகும் அதிர்வை, இன்று விஞ்ஞான உலகம் தாவரங்களின் உற்பத்திக்கும் மக்களின் நோய்க்கும் எவ்வகையில் பயன்படுத்துகின்றது என்பது எல்லோரும் அறிந்ததே.

ஆனால் எமது ஓம் எனும் பிரணவ மந்திரத்தை உச்சரிக்கும்போது மட்டும் ஒன்றும் ஏற்பட்டுவிடாதா? வேதமந்திரத்தைச் சரியாக உச்சரித்தால் பருவ மழையும் பொழியும். பிழையெனில் பிரளயமும் உண்டாகலாம்.

ஒரு குறிப்பிட்ட அதிர்வெண்ணிக்கையில் உள்ள ஒலியை ஒளியைத்தான் நாம் பார்க்க கேட்கமுடியும்.

மிகக்கூடிய அதிர்வெண்ணிக்கையையும் மிகக் குறைந்ததையும் எம்மால் அறிய முடியாது. சில குறிப்பிட்டஉயிரினங்களுக்கு அவை கேட்கும்.

உதாரணமாக ஒருநாய் அமைதியாகப் படுத்திருக்கும்போது பார்த்திருப்பீர்கள். அது சிலவேளை தலையை நிமிர்த்தி காதுகளையும் நீட்டி ஏதோ கேட்பது போல் தோன்றும். ஆனால் அந்நேரம் எமக்கு ஒன்றும் கேட்பதில்லை. இது நாலாயிரம் அதிர்வெண்ணிக்கை உள்ள ஒலியைக் கேட்கும் திறன் நாய்களின் காதுகளுக்கு உள்ளதால் ஆகும். அது போலத்தான் ஒளி அதிர்வும். குறிப்பிட்ட ஒளி அதிர்வெண்ணிக்கையுள்ள ஒளியைத்தான் நாம் பார்க்க முடியும். நாம் பார்க்கமுடியவில்லையென்பதால் அது இல்லையென்று ஆகிவிடாது.

நல்லதும் கெட்டதும் நடப்பது தவிர்க்க முடியாதது.

அவை இரண்டும் எதிர்மறைகள். ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். பகலும் இரவும் போன்றவை. பிறப்பும் மரணமும் போன்றவை.

இருள் இல்லையேல் ஒளி இருப்பதாவே தெரியாது.

புகைப்படத்தில்கூடதனியாக வெள்ளைநிறத்தைக்கொண்டு உருவம் அமையாது. கறுப்பும் சேர்த்தே ஆகும்.

ஓவியம் வரையும்போது குறிப்பிட்ட இடங்களுக்கு ஓவியன் கறுப்பு வண்ணம் தீட்டாது ஓவியம் வரைய முடியுமா?

ஒளியில் படும் இடமும் நிழல்விழும் இடமும் சேர்ந்தே உருவம்அமைகின்றது. தீயவற்றையும் தாங்கி எதிர்நீச்சல் போடுவதே வாழ்க்கையாகும். எல்லாம் நல்லதாக இருந்தால் அதை அனுபவிக்க முடியாது. கெட்டவை இல்லையேல் நல்லவை இருப்பதே தெரியாதுபோய்விடும். இது எதற்கும் பொருந்தும் பிரபஞ்ச தத்துவம் ஆகும்.

ஆனால் உலகின் எல்லா நடவடிக்கைக்கும் பிரதிபலன் உண்டு. நல்லவற்றிற்கு நல்ல பலனும் தீயவற்றிற்கு தீய பலனும் தவிர்க்க முடியாதது. விஞ்ஞானி நியூட்டனின் விதிப்படி எல்லா தாக்கத்திற்கும் சமனானதும் எதிரானதும் ஆன தாக்கம் உண்டு. உதாரணமாக ஏழையழுத கண்ணீர் கூரிய வாளுக்குச் சமம் என்பார்கள். பெண்கள் எப்போதும் உணர்ச்சிவசப்படுவது அதிகம். ஒரு பெண் உண்மையில் உருகிக் கண்ணீர் வடிக்கும்போது மனதிற்கும் உடலிற்கும் நெருங்கிய தொடர்புள்ளதால் கொதிப்படைகிறது.

இவ்வெப்பத்தால் இரத்தத்தில் ஒருபகுதி எரிக்கப்பட்டு இப்படி ஏற்பட்ட இரசாயனத் தாக்கத்தால் உடலில் இருந்து வியர்வை வெளியாவதுபோல் சில இரசாயன வஸ்துக்கள் வெளியேறுகின்றன. இவை வானிலையில்

www.tamilarangam.net

காற்றுமண்டலத்தில் சூழலில் மாற்றத்தை உண்டாக்குகின்றன. கோரவெய்யில் கொடும்மழை புயற்காற்றை வரவழைக்கின்றன. இப்படித்தான் கோபம்கொண்ட கண்ணகி அன்று மதுரையை எரித்தாளோ? விஞ்ஞானக் கண்ணோட்டம் உள்ளவர் தாங்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்க்குக் கூறுகின்றேன்.
விஞ்ஞானம் எமது இந்து சமயத்தை நோக்கியே வந்து கொண்டிருக்கின்றது.
விஞ்ஞானி ஐன்ஸ்டீன் அணுவைப் பிளந்துபார்த்து அதில் ஒன்றுமில்லை. உள்ளது சக்திமயமே அதுவே அணு என்று கூறிவிட்டார்.
மூலக் கூறுகளின் விகிதாசாரச்சேர்க்கையாலேயே பொருள்கள் உண்டாகின்றது. அவை அழியும்போது மூலக்கூறுகள் பிரிந்து வேறுபொருள் உண்டாகின்றது.
உதாரணமாக ஐதரசன் + ஒட்சிசன் = நீர்.
ஓர் மரக்கட்டை நம்முன் உள்ளதாக வைத்துக்கொள்வோம்.
அதை 10 வருடத்தின் பின் அல்லது 100 வருடத்தின் பின் பார்ப்போமானால் நிச்சயம் அப்பொருள் அதில் இருக்காது.
சிறுகச்சிறுக கணத்துக்குக் கணம் அதன் மூலக்கூறுகள் பிரிந்து அழிந்து கொண்டிருக்கின்றன. இது நூறாவது வருடத்தில் திடீரென நிகழ்ந்ததல்ல.
அப்படியே பிரபஞ்சத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் அழிகின்றன.
சூரியன்கூட ஒருநாள் அழிந்துவிடும். அதில் உள்ள ஐதரசன் ($H_2$) கீலியமாக ($H_3$) மாற்றப்படும்வரைதான் அது உயிர்வாழும்.
ஒரு குயவன் பானை ஒன்றை களிமண் நீர் வெப்பம் என்பவற்றைக்கொண்டு செய்கின்றான் என்று வைத்துக் கொள்வோம். செய்து முடிந்தபின் அந்தப் பானை அவனுக்குச் சொந்தமானது. அந்தப் பானையை ஒரு வாடிக்கையாளன் பணம்கொடுத்து வாங்கிவிட்டான் என்றால் அது இப்போ வாங்கியவனுக்குச் சொந்தம். இனி அது வீழ்ந்து உடைந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். இப்பொழுது அந்தப் பானை யாருக்குச் சொந்தம்?
அதன் பகுதிகள் (பஞ்சபூதங்கள்) ஒவ்வொன்றும் பகுதிகளாகப் பிரிந்து நீர் நீருடனும் வெப்பம் வெப்பத்துடனும் சேர்ந்துவிடும். அல்லது வேறு மூலக் கூறுகளுடன் சேர்ந்து இன்னொரு பொருள் உருவாகும்.
இதுதான் பிரபஞ்சத்தில் நடப்பது.
எமது உடல் ஓர் ஆறு ஓடுவதுபோல ஓடிக்கொண்டிருக்கின்றது.
உணவை உட்கொள்கின்றோம். கழிவை வெளியேற்றுகின்றோம். கணத்திற்குக் கணம் மாறிக்கொண்டிருக்கின்றோம். குழந்தையாக இருந்த நாம் நாமல்ல. இளைஞனாகியபின் 50வயதினில் வேறு உருவம் எண்ணங்கள் சிந்தனைகள் மாறியவராக உள்ளோம்.குழந்தையிலிருந்து திடீரென ஏற்பட்ட மாற்றமல்ல இது. கணத்திற்குக் கணம் நிகழும் மாற்றமாகும். ஆறு ஓடும்போது முதற்கணத்தில் கண்ட இடத்தில் இருந்த நீர் அடுத்தகணம் அதில்இல்லை. இருந்தும் அதன் செயற்பாட்டைத்தான் ஆறு என்கின்றோம்.
எமது உடல்அல்ல நாங்கள். மனம்அல்ல. உயிருக்கு உயிராய் எம் மையத்தில் உருவமில்லாது இயங்கிக்கொண்டிருக்கும் ஆன்மாவே நாம். அதுவே இறைவன். உருவம் இல்லாத இறைவன் ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டு உருவம் எடுத்துக்கொள்வான். பக்திவழிபாட்டில் இறைவனுக்கு உருவம் அமைத்து வணங்குவது இந்துக்களின் வழமை. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்னும் ஒரு சாரார். இறைவனுக்கு உருவம் இல்லை என்கிறார்கள். ஒரு பக்கசார்புடைய மதநூல்களும் கடவுளுக்கு உருவம் இல்லை. உருவ வழிபாடு வெறும் அஞ்ஞானம் என்று வெற்றறிவுடன் கூறுகின்றன.

www.tamilarangam.net

ஆனால் இப்படிப் பேசுகின்ற இதே நூல்கள் இறைவன் நெருப்புச் சுவாலையாக ஒருவர் முன் தோன்றினார் என்றும் புறா வடிவாக மற்றொருவரின் தலைமீது இறங்கினார் என்றும்தம்மை மறந்து கூறுகின்றன.

உருவம்இல்லாத இறைவனை சாதாரணமக்கள் மனதில் பதித்துக்கொள்வதற்கு உருவம் அவசியம். இறைவன்மீது பேரன்புகொண்டு எல்லாவற்றையும் மறந்து அவ்வுருவத்தை இறைவனாகவே பாவனை செய்யும்போது பக்தர்கள் இறைவனுடன் இரண்டறக் கலந்து விடுவார்கள்.

"கல்லைக் கண்டால் நாயைக் காணோம்.

நாயைக் கண்டால் கல்லைக் காணோம்!"

என்பதன் பொருள் கல்லால் செய்த நாயின் உருவத்தைக் குறிப்பது ஆகும். இதற்கு கொச்சையாக பொருள் கொள்ளல் ஆகாது. கல் என்று நினைத்தால் அங்கு கல்லைத்தான் காணமுடியும். நாய் மறைந்துவிடும். நாய் என்று நினைத்தால் நாயைத்தான் காணமுடியும். கல் மறைந்துவிடும்.

இந்துக்கள் வடிவமைத்திருக்கும் கடவுள் உருவங்கள் எல்லாம் தத்துவ வடிவங்களே. உதாரணமாக சிவலிங்கத்தை எடுத்துக் கொள்வோம். அதற்குப் பல அர்த்தங்கள் உண்டு.அநேகமாக ஆண் பெண் சேர்க்கையால் உண்டாகும் படைப்பாற்றலை அது குறிக்கும்.அதனிலும் மேலான ஓர் கருத்து உண்டு. அதாவது லிங்கமாகிய மேற்பகுதியை 1 என்றும் வட்டமாக உள்ள கீழ்ப்பகுதியை 0 என்றும் எடுத்துக் கொண்டால் 1/0 ஒன்றைப் பூச்சியத்தால் வகுத்தால் ஈவு முடிவின்றி தொடர்ந்துகொண்டே போகும். அது ஒரு முடிவிலியாகும்.

ஆதியும் அந்தமும் இல்லா இறைவனும் ஒரு முடிவிலியே.

நாம் பார்ப்பதெல்லாம் உண்மை அல்ல. மாயையே. நாம் ஒரு பொருளைப் பார்க்கும்போது பார்த்த காட்சி எமது மனத்திற்கு அறிவிற்கு வருவதற்குள் அப் பொருளில் மாற்றம் ஏற்பட்டு விடுகின்றது. நாம் காண்பது உண்மையல்ல. அப்பொருளை முழுமையாக அறிவதாயின் ஆன்மாவால்தான் முடியும். ஏனெனில் மற்றவை இன்னொன்றைச் சார்ந்து இயங்குபவை.

உதாரணமாக மனம் A என்றால் பொருளை B என்று வைத்துக் கொள்வோம். மனமும் பொருளும் சேர்ந்து கூட்டுப்பொருளான AB யைத்தான் நாம் பார்க்கின்றோம். உண்மையான பொருளை அல்ல.

2000 ஒளியாண்டு தூரத்தில் உள்ள நட்சத்திரங்கள் (ஓர் ஒளியாண்டு என்பது 180000X365X24X60X60) வீழ்வதை நாம் பார்ப்போம். ஆனால் அது 2000 வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்த காட்சி ஆகும்.அது நம்மை வந்தடைய அத்தனை காலங்கள் சென்றது. நாம் தற்போது பார்த்தது உண்மையல்ல. பொருள்கள் அழிவதுபோலத்தான் காலமும் இடமும் அழியாதவை என்றே விஞ்ஞானிகள்கூட எண்ணியிருந்தார்கள். ஆனால் விஞ்ஞானிகளின் வேந்தனான ஐன்ஸ்டீன் அண்மையில் பொருள்கள் அழிவதுபோலவே ஒரு கட்டத்தில் காலமும் இடமும் அழிந்துவிடும் என்று திட்டவட்டமாக நிரூபித்து விட்டார். இறைவன் சந்நதியில் காலமும் இடமும் இல்லை. இதை பலமுறை விவேகானந்தரும் கூறியுள்ளார்.

(அடுத்த இதழில் — அர்த்த நாரீஸ்வரர்)

www.tamilarangam.net

**படித்ததில் கிடைத்தது.**

## ஆனாலும்.....

☐ மக்கள் எல்லாரும் புத்தி கெட்டவர்களாகவும் சுயநலமிகளாகவும்தான் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்களை நேசித்துத்தான் ஆகவேண்டும்.

☐ நீங்கள் யாருக்காவது நல்லது செய்தால்.ஏதோ ஒரு உள் நோக்கத்தோடுதான் செய்கிறீர்கள் என்பார்கள்.இருந்தாலும் பிறருக்கு நன்மை செய்யத் தயங்காதீர்கள்.

☐ நீங்கள் வெற்றி பெற்றால் திடீரென்று போலி நண்பர்களும் உண்மையான எதிரிகளும் தோன்றுவார்கள்.ஆனாலும் உங்களுக்கு வெற்றிகள் கட்டாயம் தேவை.

☐ நேர்மையும் வெளிப்படையாகப்பேசுதலும் உங்களை வெறுக்கச்செய்யும்.ஆனாலும் நேரடியாகவும் வெளிப்படையாகவும் தான் இருந்தாகவேண்டும்.

☐ இன்று நீங்கள் செய்கிற நன்மைகள் நாளையே மறக்கப்படும். ஆனாலும் நன்மை செய்வதிலிருந்து பின் வாங்காதீர்கள்.

☐ பெரிய திட்டங்களைச் சிந்தித்து செயல்படுத்தும் பெரியவர்கள், சின்னப்புத்தியுள்ள சின்னமனிதர்களால் வீழ்த்தப் படுவதுண்டு.ஆனாலும் பெரிய சிந்தனைகளைக் கைவிடாதீர்கள்.

☐ நீங்கள் உருவாக்கும் நல்ல திட்டங்களும் கட்டிடங்களும் ஒரே நாளில் உடைக்கப்படலாம்.இருந்தாலும் உருவாக்குவதை நிறுத்தாதீர்கள்.

**(நன்றி — பாக்யா)**

www.tamilarangam.net



# எங்கள் இளந்தளிர்கள்.

மொழிகளிலே மூத்தமொழி
எங்கள் தமிழ்.
முக்கனியும் சர்க்கரையும் சேர்ந்ததுபோல்
இனிய தமிழ்.

அம்மாவின் வாயில்வரும்
அன்புத் தமிழ்.
அப்பாவின் வார்த்தையிலே
அறிவுத் தமிழ்.

மழலை எங்கள் பேச்சினிலே
இன்பத் தமிழ்.
மங்கையரின்பேச்சினிலே
மயக்கும் தமிழ்.

ஔவைப்பாட்டி சொல்லிவைத்த
ஆத்திசூடி — அதை
அகமகிழ்ந்து கற்கவேண்டும்
நாமும் கூடி.

பாரதியார் பாடி வைத்த
பாடல் கோடி — அதைப்
பணிவுடனே படிக்கவேண்டும்
நாளும் தேடி.


-கொற்றையூர் வா

www.tamilarangam.net



**கண்டுபிடியுங்கள்**

1 முதல் 31 வரை இலக்கங்களை இணைத்துப் பாருங்கள். "எட்டாத பழம் புளிக்கும்!" என்று சொன்ன ஒரு மிருகம் தெரியும்.




**கணக்குப் புதிர்.**

இங்கே வெற்றிடமாக 16 கட்டங்கள் இருக்கின்றன. இந்தக் கட்டங்களுக்குள் 3முதல் 18 வரையிலான இலக்கங்களை நீங்கள் இடவேண்டும். ஆனால் கூட்டுத்தொகைமட்டும் 42 வரவேண்டும்.

**விடைகள் —**
**அடுத்த இதழில்!**

www.tamilarangam.net


அன்புத்தம்பி தங்கைகளே!

இந்த இதழிலிருந்து உங்களுக்கென புதிய போட்டி ஒன்றை அறிமுகப்படுத்துகின்றோம்.
போட்டி மிகவும் சுலபமானது.
உங்களுக்கு மிகவும்தெரிந்த ஒருகதை படங்களாக வரையப்படும்.
அந்தக் கதையைக் காட்சிகளுக்கேற்ப நீங்கள் எழுதவேண்டும்.
உதாரணமாக இங்கே நீங்கள் நன்கறிந்த ஆமையும் முயலும் கதை காட்சிகளாக வரையப்பட்டுள்ளது.
இந்தக் காட்சிகளைப் பார்க்கும்போது நீங்கள் புரிந்துகொள்ளும் சம்பவங்களை வசனங்களாக எழுதினால் கதையாகிவிடும் அல்லவா?
எங்கே உங்கள் திறமையைக் காட்டுங்கள்.

எங்களுக்கு நீங்கள் அனுப்பும் கதைகளில்
அழகான உறுப்பெழுத்தில் சிறப்பாக எழுதப்படும் கதை என்ற அடிப்படையில் உங்கள் கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

கதையை எழுதி உங்கள் பெயர் வயது விலாசம் என்பவற்றையும் குறிப்பிட்டு பூவரசுக்கு அனுப்புங்கள்.

இந்தக்கதையை நீங்கள்அனுப்பவேண்டிய முடிவு திகதி 15.10.1996




படங்களைப் பார்த்து
கதை எழுதுங்கள்.

www.tamilarangam.net



www.tamilarangam.net



அறிவுரையிலும் குடும்பத்தில் தாயைவிடவும் தகப்பனே அந்தஸ்தில் பெரியவனென்பதை இப்படியாக விளக்குகிறான். அதாவது லட்சுமணன் கேட்கிறான் இராமனைப் பார்த்து —

"அண்ணா! தாய் கௌசல்யாவின் சொல்லைமீறிக் காட்டுக்குப் போக நீங்கள் முடிவு எடுத்தது தர்மாகுமா?" என்று.

அதற்கு இராமன்கூறும் பதில் —

"தம்பி! ஒருவனுக்குத் தாயின் சொல்லைவிடத் தந்தையின் வாக்குத்தான் மேலானது. ஏனெனில் தாயாலும் வணங்கப்படுபவர் தந்தைதானே. எனவே தாயின் சொல்லைவிட தந்தையின் ஆணையையே நான் நிறைவேற்ற வேண்டும்.!" என்றான்.

மேற்படி உதாரணத்தின் மூலமும்கூட ஒரு குடும்பத்தில் ஆண்தான் குடும்பத் தலைவன் என்ற தகுதிக்கு உரியவனென்பதை இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாகவிருக்கின்றது.

இஃது இங்ஙனமாகக் குடும்பத்தலைவன் என்ற பதவியை ஆண் ஏற்கும்போது விசேட மரியாதையுடன் கூடிய அடக்கமான மரியாதையை அவனுக்குக் கொடுக்கவேண்டியது மனைவி பிள்ளைகளுடைய கடமையாகும். அதாவது மரியாதையுடன் கூடிய அடக்கம்தான். அவர்களிடமிருந்து அந்தக் குடும்பத் தலைவனுக்குக் கிடைக்கவேண்டுமே தவிரப் பிள்ளைகளும் குறிப்பாக மனைவியும் அவரின் கீழ் அடங்கி ஒடுங்கி அடிமைகளாக வாழவேண்டு மென்பதில்லை. இதை ஆண்பெண் இருபகுதியினரும் நன்கு தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். ஆனால் சில குடும்பங்களில் ஆண்கள் குடும்பத் தலைவன் என்ற இறுமாப்பில் ஏதோ அரசியல் தலைவர்போன்று ஆணவம்கொண்டு அதிகாரம் செலுத்த முற்படும்போது அங்கே மனைவி என்ற அந்த மெல்லியல் அடிமை என்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றாள்.இது ஆண் தனக்குக் கிடைத்த குடும்பத் தலைவன் என்ற கௌரவமான நல்ல புனிதமான அந்தஸ்தை அதிகார துஷ்பிரயோகம் செய்வதனால் ஏற்படும் இழி நிலை.

இஃது இங்ஙனமாயின் பல குடும்பங்களில் மனைவிமார் குடும்பத்தலைவி என்ற பதவி தங்களுக்கு உண்டென்ற எண்ணத்தில் பிள்ளைகள் மாத்திரமல்லப் புருஷனும்கூடத் தனக்குக் கீழ்ப்பட்டவனென்று கருதியே நடக்கிறார்கள்.

கவி பாரதியும் இன்னும்வேறு பலரும், "பெண்ணின் அடிமைத்தனம் நீங்க வேண்டும். பெண் சமுதாயத்தில் கௌரவமான இடம் வகிக்க வேண்டும்" என்று வேண்டியதைப் பல மனைவியர் மாறாகப் புரிந்துகொண்டு பல குடும்பங்களில் மனைவி தானே குடும்பத்தில் சர்வ அதிகாரமும் கொண்ட சகலரையும்விடப் பெரிய தலைவி என்ற மமதையில் வாழ்வது கண்கூடு. அதாவது மனைவி இட்டதே சட்டம். ஆலோசனை கூறும் மந்திரி எனும் தகைமையையும் பெற்றுவந்தவ, சட்டமியற்றிச் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் சட்ட அதிகாரியாகிவிடுவா.

எந்தவிடயத்திலும் அவவுடைய எண்ணம்தான் அங்குநடக்கும். நடக்கவும் வேண்டும். கணவன் மனைவிக்குப் பயந்து நடப்பதையே பெண்களில் பலர் எதிர்பார்க்கவும் செய்கிறார்கள். அதைப் பெருமையாகவும் கருதுகிறார்கள்.

இது சம்பந்தமான விளக்கத்துக்கு ஒரு கற்பனைக்கதை சொல்லப்படுகிறது. அதாவது ஒருஊரில் ஒரு அரசன் இருந்தானாம். அந்த ஊரிலுள்ள கணவன்மாரில் பெரும்பகுதியினர் மனைவிக்குப் பயந்தவர்களாகவே வாழ்கிறதை அறிந்து கொண்டானாம். இதுபற்றி ஒரு தெரிவு வைப்பது நல்லது என எண்ணி குறிக்கப்பட்ட ஒரு நாளில் குறிக்கப்பட்ட ஒரு மண்டபத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருமணம் முடித்த சகல ஆண்களையும் கூடும்படி அறிவித்தானாம்.
அப்படியே அன்றைய தினம் ஊரிலுள்ள சகல கணவன்மாரும் மண்டபத்தில் கூடினார்களாம்.
அவர்கட்கு இப்படியாகச் சொல்லப்பட்டதாம்.
அதாவது "மனைவிக்குப் பயந்து வாழும்கணவன்மார் சகலரும் தங்கள் வலது கையை உயர்த்தவேண்டும்!" என்று.
அதன்பிரகாரம் மண்டபத்திலிருந்த கணவன்மார் சகலரும் தங்கள் வலது கையை உயர்த்தினார்களாம், ஒரேயொருவரைத் தவிர.
அந்த ஒருவரைக்கண்ட அரசருக்கு அளவுக்கதிகமான ஆனந்தம் ஏற்பட்டதாம். 'எனது அரசாட்சியில் ஒரு தைரியசாலியாவது இருக்கிறானே!' என்ற மகிழ்வில் அரசர் அவரை அருகழைத்துக் கேட்டாராம்
"இத்தனை ஆண்களும் தாங்கள் மனைவிக்குப் பயந்தவர்கள் என்று கையை உயர்த்தியபோது நீங்கள்மட்டும் உயர்த்தவில்லையே! உங்களுக்கு இந்தத் தைரியம் எப்படி வந்தது? அதன் இரகசியம் என்ன? எங்களுக்குச் சொல்லித் தந்தால் மற்றவர்களும் அதைப் பின்பற்ற வசதியாக இருக்குமே! எனவே அந்த இரகசியத்தைச் சொல்லுங்கள்" என்றாராம் அரசர்.
அதற்கு அவர் "என்ரை அவவைக்கேளாமல் நான் எப்படிக் கையை உயர்த்தலாம்." என்றாராம்.
இதுபோன்ற கதைகளையெல்லாம் பெண்களே பெருமையாகப் பேசிக்கொள்கிறார்களே தவிர, இதிலிருந்து தாம் திருந்திக்கொள்ள வேண்டும் என்று உணர்வதாகக் கொள்ள முடியவில்லை.
(அடுத்த இதழில்)



**இந்துமகேஷ்** எழுதும்

# சிலருக்குச் சிலது.

**குறுநவீனம்**

**பூவரசு 6வது ஆண்டு நிறைவு மலரில்!**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் அருவி நடாத்திய ஐரோப்பிய ரீதியிலான
வானம்பாடி — 96
இசைப்போட்டி ஆயிரக்கணக்கான இரசிகர்கள் மத்தியில் 31.08.1996 சனிக்கிழமை எசன் மாநகரில் நடைபெற்றது. இரசிகர்களே நடுவர்களாகக் கலந்து கொண்ட இப்போட்டியில் பின் வருவோர் பரிசுகளைத் தட்டிக்கொண்டனர்.

சிறந்த பாடகர்
1. திரு.அன்ரன் டேவிட் (யாழிசை, நோர்வே)
2. செல்வன் எமிலியானுஸ் (யங்ஸ்ரார்)
3. செல்வன் சுதன் (சுப்பர் பிறின்ஸ்)

சிறந்த பாடகி
1. செல்வி வனஜா கிறேகர் (யங்ஸ்ரார்)
2. செல்வி தருண்யா தம்பிப்பிள்ளை (சஹானா)
3. திருமதி சாந்தி தயாபரன் (சுப்பர் பிறின்ஸ்)

சிறந்த இசைக்குழு
1. சுப்பர் பிறின்ஸ்.
2. யாழிசை
3. யங்ஸ்ரார்.

சிறந்த குழந்தைப்பாடகர்கள் —
செல்வன் அசோக் குலதாசன் (முத்துக்கள் மூன்று)
செல்வி பிறிஸ்லா ராஜா (சுப்பர் பிறின்ஸ்.)

சுயமாக இசையமைத்துப் பாடிய பாடல்களுக்கான பரிசுகள்
சிறந்த இசைக்குழு யூலாண்ட் (டென்மார்க்)
சிறந்த பாடகர்கள் செல்வன் உதயன் (யங்ஸ்ரார்),திரு பாக்கியராஜ் (யூலாண்ட்)
செல்வன் அசோக் குலதாசன் (முத்துக்கள் மூன்று)

சிறந்த வாத்தியக் கலைஞர்கள்
கீபோர்ட் — செல்வன் பிறின்ஸ்சன் ராஜா (சுப்பர் பிறின்ஸ்)
கிற்றார் — திரு கணேஸ் (யாழிசை)
தபேலா — திரு ராஜா (சுப்பர் பிறின்ஸ்)
ரமர் — செல்வன் வி.சி.டானியல்.
பாட் — செல்வன் மதன் (யங்ஸ்ரார்)

பிறேமன் நகரிலிருந்து இசைப்போட்டியில் கலந்துகொண்ட முத்துக்கள் மூன்று இசைக்குழுவின் சின்னஞ்சிறு கலைஞர்கள் மூவரும் பெரும்பெரும் கலைஞர்களுடன் போட்டியிட்டபோதும் சிறந்த குழந்தைப் பாடகருக்கான பரிசையும், சுயமாக இசையமைக்கப்பட்ட பாடலுக்கான மூன்றாவது பரிசையும், கீபோர்ட் வாத்தியத்திற்கான சிறப்புப் பரிசையும் (ஆனந்த் குலதாசன்) பெற்றுக்கொண்டனர்.
மிகவும் இளம் வயதினரான இந்தக்கலைச்செல்வங்களின் முயற்சியைப் பின்பற்றி மேலும் பல இளங் கலைஞர்கள் உருவாவதற்குப் பெற்றோர்கள் ஊக்கமளிக்க வேண்டும் என்று தமிழருவிஆசிரியர் திருநயினை விஜயன் கேட்டுக்கொண்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*படித்தீர்களா?*

கவிஞர் எழிலனின்

**புதியதல்ல... புதுமையுமல்ல!**

கவிதை நூல்.

மனிதன் சிந்தனையாலே நகர்ந்துகொண்டிருப்பவன்.
ஆற்றலின் மூலமே சிந்தனை. சிந்திப்பவனே சிறந்தவன்.
சிந்தனையிலே புத்தாக்கம் மலரவேண்டும்.
புதுக் கருத்துப் பிறக்க வேண்டும்.
சிந்தனைக்குப் பின் சில மாற்றங்கள் வேண்டும்.
புதுமையைத் தேடிப் புறப்பட்டுள்ள நண்பர் எழிலன் அவர்கள், இலக்கியத்தையே களமாகக் கொண்டு குமுகாயப் பேரேட்டில் குறிப்பெழுத வந்துள்ளார்.
இந்நூலில் ஒவ்வொரு பாடலும் ஏதோ ஓர் உணர்வினை~ உணர்ச்சியை~ஆக்கத்தை~ஊக்கத்தை ஏந்தி வருகின்றது.
நிலம்தாண்டி நீர்தாண்டி உணர்வுமட்டும் தாண்டாமல் நிலையாகநிற்பதற்கு எழிலனார் ஓர் முன்னுரையாகத் திகழ்கின்றார்.
மொழி, இனம், சமயம், உணர்வு, உள்ளம் எல்லாமே மாற்றம் கொண்டுள்ள வாழ்வியல் சூழலில் தானும் தன் உள்ளமும் மாறாமல் நிலைத்திருப்பதைக்கண்டு உள்ளம் பூரிப்படைகின்றது.
இந்நூல் தமிழனின் உணர்வுக்குரிய ஓர் வரலாற்று சுவடியாகும்.
இது காக்க வேண்டிய பெட்டகம்.

பிரதியின் விலை 12.00 டொச்ச மார்க்குகள் (தபால் செலவுடன்)

தொடர்புகளுக்கு —
Ezhilan,
Von-Ketteler-Str.8,
49497 Mettingen,
Germany.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூவரசு

இனிய தமிழ் ஏடு

அடுத்த இதழுடன் –

தனது 6வது ஆண்டு கலை, இலக்கியப்
பணியை நிறைவு செய்து

1997 தைத்திங்களில்
7வது ஆண்டுக்கான கலை, இலக்கியப்
பணியில் கால்பதிக்கிறது.

புதிய ஆண்டிலிருந்து
புதிய வடிவில்
புதிய அம்சங்களுடன்
புதிய மெருகோடு



இனிய தமிழ் ஏடு.

உங்களை நாடி வரப்போகிறது –
பூ வரசு.

**படைப்பவர் ஆக்கம் தருக!**
**படிப்பவர் ஊக்கம் தருக!**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்